கிராமநலம்

ஆகஸ்ட் '62

"நல்லுயிர் ஈந்தும், கொடியினைக் காப்பார்"

"எல்லா தேசங்களுக்கும், கொடி என்பது, மிகவும் அவசியம். எத்தனையோ லட்சக் கணக்கான மக்கள், தமது கொடிக்காக, இன்னுயிரைத் தந்துள்ளனர். கொடி வணக்கம், ஒருவகையில் விக்கிரக ஆராதனை போன்றது. அதை அழிப்பது, பெரும் பாவமாகும்.

"யூனியன் ஜாக்" கொடி பறக்கும் போது, அதைக் காணுகின்ற ஆங்கிலேயர் மனத்திலே தோன்றும் உள்ள எழுச்சியை, அளவிட்டுக்கூற முடியாது. அமெரிக்க நாட்டு ஜனங்கள், நட்சத்திரங்களும் கோடுகளும் கொண்ட தமது தேசியக் கொடியில், ஒரு புதிய உலகத்தையே காணுகின்றனர். நட்சத்திரமும், சந்திரப் பிறையும் அமைந்த இஸ்லாமியக் கொடி, அந்தச் சமுதாயத்தின் வீரத்தைத் தட்டியெழுப்பும் சாதனமாக விளங்கும்.

இந்தியர்களாகிய நாம்—அதாவது, இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், பார்ஸிகள் மற்றுமுள்ள எல்லோருமே—பொதுவான ஒரு கொடியை, ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். அந்த தேசியக் கொடிக்காக, உயிரையும் அர்ப்பணம் செய்யலாம்."

—மகாத்மாவின் மணிமொழி

கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்

மாடி 7 | ஆகஸ்டு, 1962 | படி 11

சுதந்திர தினச் செய்தி

"சாதி நிற மொழி நாடு சமயவெறிச்
சண்டையெலாந் தாண்டித் தாண்டி,
நீதியிலே விளங்குகின்ற நின்மலமாய்,
நித்தியமாய், நிறையாய், அந்தம்
ஆதி நடுவில்லாத அகண்டிதமாய்,
ஆனந்த அறிவாய் நின்று,
போதலொடு வரவற்ற பூரணமே,
சுதந்திரமே, போற்றி போற்றி."

—திரு. வி. க.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, ஆகஸ்டு பதினைந்தாம் தேதியன்று, நம் பாரத நாடு, விடுதலை அடைந்தது. உலக அரங்கில், நம் தாய்த்திருநாடு, உரிமை பெற்ற தனிப் பெரு நாடாக, மறுமலர்ச்சி பெற்றது. அந்நிய ஆட்சியில் சிக்கிச் சீரழிந்த நம் நாட்டு மக்கள், சுதந்திரம் வாய்ந்த பிரஜைகளாக் மதிக்கப் பெற்றனர். பாரத நாட்டின் மூவர்ணக் கொடி, வானளாவப் பறந்தது. அதன் மூலம், உரிமைச் செல்வத்தின் பேரொளி, உலகெங்கும் பரவியது. அதன் மையத்தில் உள்ள அசோக தர்ம சக்கரம், அறநெறிச் செல்வத்தை, அவனியெங்கும் அள்ளித் தெளித்தது; சுருங்கச் சொன்னால், சத்திய விளக்கமான சன்மார்க்க மரபின் சின்னமாகத் திகழ்ந்தது, நம் தேசியக் கொடி.

பாரத சமுதாயத்தின் அரசியல் விடுதலைக்குப் பாடுபட்ட தியாகிகள் அனைவருக்கும், நன்றியறிதலோடு, நாம் அஞ்சலி செய்யக் கடமைப்பட்டுள்ளோம். பல்லாண்டுகளாக, அவர்கள் செய்த தியாகத்தின் விளைவாகவே, நாம், இன்று சுதந்திரத்தின் பயனை அனுபவித்து வருகிறோம். சிறப்பாக, நமது தேசப்பிதா மகாத்மா காந்தி, நமக்கு வகுத்தளித்த வாழ்க்கை நெறிக்கு ஈடான திட்டம், உலகில், எப்போதும், யாரும் இதுவரை கண்டதில்லை. "சத்தியம், அகிம்சை ஆகிய நேர்மைப் பண்புகளே, மனித வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களாக உலகெங்கும் அமையவேண்டும்" என்பது, அவர் வாழ்ந்து காட்டிய அனுபவ சித்தாந்தம். "அரசியல் வாழ்விலும் சரி, பொருளாதார வாழ்விலும் சரி, கலாசார வாழ்விலும்சரி, இந்த முக்கிய கோட்பாடுகளுக்கு விரோதமாக நடக்கக்கூடாது" என்பது, அவர் வற்புறுத்திச் சொன்ன எச்சரிக்கை ஆகும்.

வெளியிடுவோர்: திரு ஆர். ஏ. கோபாலசாமி, ஐ. ஸி. எஸ்.

ஆசிரியர்: திரு எஸ். வேங்கடசாமி,

எனவே, பாரத நாட்டின் சுதந்திரமும், மூவர்ணக் கொடியும், மனித சமுதாயத்துக்கே, ஒரு முக்கிய செய்தியை உணர்த்துகின்றன. அதுதான், ஒற்றுமை! ஒற்றுமை! ஒற்றுமை! ஏனெனில், ஒற்றுமையே, அமைதிக்கு அடிப்படை. அதாவது, உலகில் சாந்தி நிலவுவதற்கு, சமுதாயத்தில் ஒன்றுபட்ட வாழ்வு தழைக்க வேண்டியது, மிகவும் அவசியம்.

சுதந்திரத்தின் எதிரொலி, நமது பட்டி தொட்டிகளில் எல்லாம், கேட்பதற்கான சேவையில், பிரதமர் நேரு அவர்களின் தலைமையில், நாம் எல்லோரும் செயல்பட்டு வருகிறோம். சமுதாய மேம்பாட்டுக்காகவே, நமது ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாகி, நடைபெற்று வருகின்றன. மனித சமுதாயத்தில், அன்பும், அமைதியும், ஒற்றுமையும் பரவ வேண்டுமானால், பசி, பட்டினி, நோய் முதலியன அடியோடு நீங்கவேண்டும். இவற்றை நீக்குவதற்கு ஏற்ற சாதனமாக, புதிய பஞ்சாயத்து ஆட்சி, பாரத நாடெங்கும் செயல்பட்டு வருகிறது. சிறப்பாக, தமிழ்நாட்டில், நன்றாக வேரூன்றி வருகிறது.

இப்போதுள்ள பஞ்சாயத்து ஆட்சி, அதிகாரத்தின் சின்னமல்ல. அது சேவையின் அறிகுறி ; பொது நலத் தொண்டுக்கு ஏற்ற ஆயுதம் ; ஒற்றுமைக்கு வழிகாட்டும், மூல வித்து. எனவே, அதைச் சரியான முறையில் பயன்படுத்தினால், சமுதாயத்துக்குச் சிறந்த நன்மை ஏற்படச் செய்ய முடியும்.

* * * * * *

"ஜன கண மன" என்று தொடங்கும் நமது "தேசிய கீதம்," பாரதப் பண்பாட்டின், இதயகீதம். இந்தியாவில் உள்ள பல்வேறு மலை, ஆறு, நிலம், நிறம், மொழி முதலிய புறத்தோற்றங்கள், நமது மக்களின் ஒற்றுமை உணர்வைக் கலைக்கவே முடியாது. வடக்கே இமயம் முதல் தெற்கே குமரி வரையிலும், கிழக்கே அஸ்ஸாம் முதல் மேற்கே பஞ்சாப் வரையிலும், இன்றுள்ள இந்திய நாட்டுமக்கள் எல்லோர் வாழ்விலும், ஓர் அற்புதமான ஒற்றுமை சக்தி, இயங்கிவருகிறது. அதை யாரும் கலைக்க இயலாது. அப்படி யாராவது கலைக்க முயன்றாலும், கலங்காத உறுதி அதற்குண்டு. எனவே, பிரிவினை மனப்பான்மையை உதறித் தள்ளவும், சகோதர நேயத்தோடு சமுதாயத்தில் வாழவும், தேசியகீதம் நமக்குக் கற்றுத் தருகிறது.

* * * * * *

பதினைந்து ஆண்டுகளாக சுதந்திரத்தை அனுபவித்துவரும் நாம், எதிர்கால சந்ததியாரின் நல்வாழ்வுக்கான சிறந்த திட்டங்களை, நமது பஞ்சாயத்துக்களின் மூலம் வகுத்து, அவற்றைத் திறம்பட நிறைவேற்றும் கடமையை, மன உறுதியோடு செய்வோமாக !

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப ; எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

—திருக்குறள்.

கோ. வேங்கடாசலபதி.

'கிராமநல' இதழ் ஆலோசனைக் குழு

திரு ஆர். ஏ. கோபாலசாமி, ஐ. ஸி. எஸ், பிரதம காரியதரிசி.
திரு கோ. வேங்கடாசலபதி, கிராம அபிவிருத்திக் கமிஷனர்.
திரு குலாம் மகமது பாஷா, ஐ. ஏ. எஸ்., பஞ்சாயத்து வேலைத்திட்ட இயக்குநர்.
திரு கே. சுப்பிரமண்யம், ஐ. ஏ. எஸ்., பஞ்சாயத்து நிதி இயக்குநர்.
திரு எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை, ஐ. ஏ. எஸ்., துணைக் காரியதரிசி.
திரு விஜயராகவன், ஐ. ஏ. எஸ்., துணைக் காரியதரிசி.
திரு ஜி. ராமச்சந்திரன், ஐ. ஏ. எஸ்., கூட்டுக் காரியதரிசி, நிதித்துறை.
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ., பொதுஜனத் தொடர்பு அதிகாரி & ஆசிரியர்.

நமது கொடி

நாட்டிற்கென்று பல சின்னங்கள் உண்டு. அவை, கொடி, அரசாங்க முத்திரை, தேசிய கீதம் என்பன. அச்சின்னங்களுள், சிறப்பு மிக்கது கொடி. தமக்கென்று ஒரு தனிக் கொடி இருத்தல், அந்த நாட்டின் கௌரவத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

ஒரு நாட்டின் கொடி இறக்கப்பட்டு, வேற்று நாட்டுக் கொடி ஏற்றப்படுகின்ற தென்றால், அந்த நாடு வேற்று நாட்டிற்கு அடிமையாகிவிட்டது, என்று பொருள். கொடியினைக் காக்க எத்தனையோ பேர், தம் இன்னுயிரினை ஈந்துள்ளனர். தேச பக்தனுக்கு உணர்வூட்டும் உன்னதப் பொருளாக, நாட்டுக் கொடி காட்சியளிக்கும்.

அமைப்பு

நமது தேசியக்கொடி மூவர்ணக் கொடி, ஒரே அளவுள்ள காவி, வெள்ளை, பச்சை ஆகிய மூவர்ணப் பட்டைகள் அதில் உள்ளன. மேலே காவிப்பட்டை. நடுவே வெள்ளைப்பட்டை, அடியில் பச்சைப்பட்டை, வெள்ளைப்பட்டையின் மத்தியில் கடல் நீல வர்ணத்தில் ஒரு சக்கரம் உள்ளது. அந்தச் சக்கரம் வெள்ளைப் பட்டையின் அகலத்துக்கு ஏறக்குறைய சமமாக உள்ளது. சாதாரணமாக, கொடியின் நீளம், அகலம் 3 : 2 என்ற விகிதத்தில் அமைய வேண்டும்.

பொருள்

காவி நிறம், துறவு மனப்பான்மையையும், பற்றற்ற உள்ளத்தையும் குறிக்கின்றது. வெள்ளை நிறம், நன்னெறி காட்டுகின்ற சத்திய ஒளியைக் குறிக்கும். பச்சை நிறம் நமக்கும், நிலத்துக்கும் உள்ள உறவை எடுத்துக் கூறுகிறது. வெள்ளைப் பட்டையின் மத்தியில் உள்ள சக்கரம் தர்ம சக்கரத்தை உணர்த்தும். அது மட்டுமல்ல ; சக்கரம், சுழற்சியை—ஓட்டத்தைக் காட்டும். ஓட்டத்திலே வளர்ச்சி ஏற்படுகிறது.

முன்னேற்றப் பாதையை நோக்கி விரைவில் செல்லும் அமைதியான மாறுதலையே இந்தச் சக்கரம் உணர்த்துகிறது.

விதி முறைகள்

தேசியக் கொடியை உபயோகிப்பது சம்பந்தமான விதி முறைகளை எல்லோரும் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். அவையாவன :

(1) தேசியக் கொடிக்கு அவமரியாதை ஏற்பட அனுமதிக்கக் கூடாது.

(2) எந்த நபரையும், பொருளையும், தேசியக் கொடியால் தொடக் கூடாது. அதாவது, அதைக் கொண்டு சுட்டிக்காட்டக்கூடாது.

(3) காவி வர்ணம் கீழே இருக்குமாறு கொடியைப் பறக்க விடக்கூடாது.

(4) தேசியக் கொடிக்கு வலப்புறத்திலோ, மேல் உயரத்திலோ வேறு கொடியைப் பறக்க விடக்கூடாது.

(5) தரையையோ, தண்ணீரையோ தேசியக் கொடி தொடும்படி செய்யக்கூடாது.

(6) தேசியக் கொடிக்கு மேல், எந்த வித அடையாளச் சின்னத்தையும் வைக்கக் கூடாது.

(7) தேசியக் கொடியைப் படுதாவாக உபயோகிக்கக் கூடாது.

(8) தேசியக் கொடி இலகுவில் கிழியும்படிக் கட்டக்கூடாது.

(9) உடையாகவோ, விளையாட்டு உடுப்பாகவோ தேசியக் கொடியை உபயோகிக்கக்கூடாது.

(10) தலையணை, மெத்தை, கைக்குட்டை, புடவை, அங்க வஸ்திரம் முதலியவற்றின் மீது கொடியின் உருவத்தை சித்தரிக்கவோ, அச்சிடவோ கூடாது.

(11) தேசியக் கொடியில் எவ்வித எழுத்தையும் பொறிக்கக் கூடாது.

(12) விளம்பரத்துக்காகக் கொடியை உபயோகிக்கக்கூடாது. கொடிக் கம்பத்தில் விளம்பரப் பலகையைத் தொங்கவிடக்கூடாது.

(13) பறக்க விடும் கொடி எப்பொழுதும் கிழிசல், அழுக்கு இல்லாமல், சுத்தமாக இருக்கவேண்டும்.

தேசியக் கொடி, தேசத்தின் பெருமைக்கு ஒரு சின்னம், இளமைப் பருவத்திலேயே பள்ளி மாணவர்களிடையே சீரிய நோக்கங்களையும், நல்ல குறிக்கோள்களையும், ஒருமைப்பாட்டுணர்வினையும் ஏற்படுத்த, கொடி வணக்கம் பெரிதும் துணைபுரியும்.
(விவரம் xxii-ம் பக்கம் பார்க்க.)

கொடிக் கம்பம்

கொடி யேற்றப்படும் கொடிக் கம்பம் கனமானதாகவும், உறுதியானதாகவும் இருக்கவேண்டும். கம்பம் அப்படி உறுதியானதாகவும், கனமானதாகவும் இருக்கிறதா என்பதை முன்னதாகவே நன்றாகச் சரிபார்க்க வேண்டும்.

கொடி கிடைக்கும் இடங்கள்

(1) காதி கிராமோத்யோக் பவன்.
(2) சர்வோதய சங்கக் கதர் விற்பனை நிலையங்கள்.
(3) அரசாங்கக் கதர் விற்பனை நிலையங்கள்.

"நெஞ்சில் உரமும், நேர்மைத்திறனும் படைத்த தலைமை, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் உருவாக வேண்டும்..."

பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்கள் முதல் மாநாட்டில், முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்களின் பேருரை

தலைவர் அவர்களே! பஞ்சாயத்து யூனியன் தலைவர் அவர்களே! இன்று நமது மாநிலத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய மகாநாடு இது. நம்முடைய ராஜ்யத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் அமைத்து சில பஞ்சாயத்துக்கள் ஆறுமாதம் இரண்டு வருடம் போன்ற சிறு அனுபவத்தைப் பெற்றிருக்கின்றன. 2 வருடம், 3 வருடமான பஞ்சாயத்து யூனியன்களும் இருக்கலாம்! இந்த மகா நாட்டின் முக்கிய நோக்கம் நமக்குக் கிடைத்துள்ள இந்த குறுகிய கால அனுபவத்தை வைத்துக்கொண்டு கிராமப் பகுதியிலுள்ள மக்களுக்கு எந்தெந்த வகையில், என்னென்ன முன்னேற்றங்கள், நல்ல காரியங்கள் செய்ய முடியுமென்பதை யோசிப்பதுதான்.

நம்முடைய ராஜ்யத்தில் பஞ்சாயத்து சட்டம் உருவாக்குவதற்கு, சட்ட மன்றத்திலுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றாகச் சேர்ந்து வெகு நாட்களாக யோசனை செய்து, எந்த வகையில், எந்த முறையில் அமைக்க வேண்டுமென்பதற்குப் பெரு முயற்சி எடுத்து இப்படியான ஒரு சட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அத்தகைய ஒரு நல்ல சட்டத்தை உருவாக்கிய பெருமை நமது சீப் செக்ரட்டரி திரு. கோபால்சாமி அவர்களுக்குத்தான் உண்டு. பஞ்சாயத்து ராஜ்யம் நல்ல முறையில் ஏற்பட வேண்டுமென்று அவர் அதற்காக அதிக சிரத்தை எடுத்துக்கொண்டவர், எடுத்துக்கொண்டு வருகிறவர்; இனிமேலும் எடுத்துக்கொள்வார். கிராமங்களில் மக்களுடைய தொடர்பு நல்ல முறையில் இருந்து பஞ்சாயத்துகள் செயல்பட வேண்டுமென்று நாமெல்லாம் ஆசைப்படுகிறோம்; ஆனால் எதற்கும், எந்த அமைப்பிற்கும் ஸ்தாபனத்திற்கும் சட்டத் திட்டம், வரம்பெல்லாம் வேண்டியிருக்கிறது.

ஏன் சட்டத்தை ஏற்படுத்தினார்கள்?

பழைய காலத்தில் பஞ்சாயத்து என்று ஊரில் கூடுவார்கள், பேசுவார்கள், ஏதோ செய்வார்கள். பஞ்சாயத்து சபை என்பது நமது நாட்டில் ரொம்ப நாட்களுக்கு முன்பே இருந்தவைதான். பத்து பேர் சேருவதும், உட்காருவதும், பேசுவதுமாக அப்போது இருந்தது. இப்போது பேசிவிட்டால் மாத்திரம் முடியுமா என்ன? முடியாது. பேசியதை செய்யவும் வேண்டும். ஆகையால் அதற்கு வரம்பு வேண்டியிருக்கிறது. கட்டு திட்டம் எல்லாம் வேண்டியிருக்கிறது. அதனால்தான் அதற்கு ஒரு சட்டத்தை அமைத்து, அதன்படி நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு, நீங்கள் எல்லாம் இங்கு வந்திருக்கிறீர்கள். உங்கள் யோசனையை அந்த சட்ட சம்பந்தமாகத் தெரிவிக்க வேண்டும். சட்டத்தில் மாற்றம் தேவையானாலும், அதை உங்கள் யோசனையை வைத்துக் கொண்டு செய்ய வேண்டியது அவசியம்.

சாதாரணமாக, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் எல்லாம் பேசிக்கொள்வதுண்டு. நான் கேள்விப்பட்ட அளவில் சொல்கிறேன். "என்ன நமக்கு அதிகாரம் இருக்கிறது? எல்லாம் கமிஷனர், கமிஷனர் என்று போட்டுவிடுகிறார்கள். அவர் யாரோ ஒருவர் வந்து உட்கார்ந்துகொண்டு, நாம் எல்லாம் வேகமாகப் போக வேண்டுமென்று நினைத்து காரியங்கள் செய்யும்போது குறுக்கே வந்துகொண்டிருக்கிறாரே" என்று கவலைப் படுகிறார்கள். "எப்படி நாம் நிர்வாகத்தை நடத்த முடியும்? பஞ்சாயத்து சட்டத்தைக் காட்டி நமக்கு எல்லாம் தந்துவிட்டதாக சொல்லிக்கொண்டு, எல்லாவற்றையும் அதிகாரிகளை வைத்துக்கொண்டு நம்மை வெறும் ஆட்களாக வைத்து நடத்துகிறார்கள்" என்று சொல்லுகிறார்கள். நிர்வாகம் இல்லாமல் முடியுமா? அது தவிர்க்க முடியாதது. நிர்வாக அதிகாரிகள் இல்லாமல் நிர்வாகத்தை நடத்த முடியாது.

இப்போது ராஜ்யப் பொறுப்பை, நிர்வாகத்தை நாங்களா நடத்துகிறோம்? எல்லாம் சீப் செகரட்டரிதான் நடத்துகிறார். மந்திரிகளாக இருக்கிற நாங்கள் நிர்வாகம் எப்படி நடக்க வேண்டுமென்று யோசனை செய்து காரியங்களைச் செய்யச் சொன்னால் சீப் செகரட்டரி தலைமையின் கீழ் உள்ள நிர்வாகஸ்தர்கள் எல்லா வேலைகளையும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரிதான், பஞ்சாயத்து யூனியனுக்கும் கமிஷனரும் கீழே இருக்கிற (Extension Officers) விஸ்தரிப்பு அதிகாரிகள், கிராம சேவக்குகள் எல்லாம் கமிஷனர் மேற்பார்வையில் நன்றாகக் காரியங்களைச் செய்யவேண்டுமென்பதுதான் சட்ட அமைப்பின் விதிமுறைகள்.

மனித உள்ளத்தில் வெவ்வேறு விதமான எண்ணங்கள் உதிக்கலாம்; இருக்கலாம். அது நல்லவிதமான காரியங்களுக்காக இருந்தால் பரவாயில்லை. கெட்டதாக இருந்தால் என்ன செய்வது? நிர்வாக அதிகாரிகளை

எடுத்துவிட்டால் மாத்திரம் காரியங்கள் எல்லாம் நன்ருக நடக்குமா? பலவிடங்களில் கமிஷனர்களும் தலைவர்களும் ஒன்ருகச் சேர்ந்து நல்ல வேலைகள் செய்து கொண்டு வருகிருர்கள். சிலவிடங்களில் இரண்டு பேருக்கும் தகராறு. தகராறு ஏற்பட்டால் என்ன ஆகிறது? கமிஷனர் கொஞ்சம் கெட்டிக்காரராக இருந்தால், சேர்மனுக்கு மெஜாரிடி-மைனரிடிக்கு வந்துவிடுகிறது. அதற்கு என்ன காரணம்? இப்போது கிராமத்திற்கு குடி தண்ணீர் வசதி, பள்ளிக்கூடம், ரோடு முதலியவைகள் கமிஷனர் தயவு இருந்தால் வேகமாக நடந்துவிடுகிறது. அதனுல் கமிஷனர் சொன்னுல் கேட்கிருர்கள், மக்கள் அவர் சொல்வதைக் கேட்பார்கள், அதனுல் அவருக்கு செல்வாக்கு இருக்கிறது. அதில் குறைபட்டுக் கொள்ள முடியுமா என்ன? அவருக்கு ஏன் செல்வாக்கு என்று நினைக்கும்போதுதான் தகராறு. அதனுல் காரியங்களில் தடையேற்படுகிறது.

மன மாற்றம்தான் மிகவும் முக்கியம்

சிலவிடங்களில் இரண்டு பேருமே சேர்ந்துகொண்டு, தப்பான காரியங்களையும் ஒற்றுமையாக செய்கிருர்கள். அது மாதிரியும் இருக்கிறதென்று சொல்கிறேன். இருவரும் சேருவதால் நல்லதும் நடக்கிறது; தவறும் நடக்கிறது. இதை தடுக்க சட்டம் செய்ய முடியுமா, என்ன? முடியாது. இது நமக்கு தெரிகிறது. மனம் மாறினுல் தானே மாறும்! நம் கிராமத்தில் நம்முடைய மக்களின் வாழ்கை நலனுக்காக அமைக்கப்பட்ட ஸ்தாபனம் பஞ்சாயத்து. அதனுடைய முன்னேற்றந்தான் நம்முடைய முன்னேற்றமென்ற மனப்பான்மை நமக்கு வேண்டும்.

மேற்பார்வை செய்யும் அதிகாரம் ஜனநாயகத்தில், இருந்துதான் ஆக வேண்டும். வேறு வழியில்லை. உதாரணமாக, கோர்ட் இருக்கிறது. முன்சீப் கோர்ட், அதற்குமேல் ஜில்லா கோர்ட், அதற்கும் மேல் ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட் என்று மேலே இருக்கிறதல்லவா? அதுமாதிரி, மேலதிகாரி இருந்து கொண்டேதான் இருப்பார். அதனுல் மேற்பார்வை அதிகாரிகள் எல்லாம் சரியாக நடக்கிருர்கள் என்று சொல்ல முடியாது. அவர்களும் மனிதர்கள்தானே? அவர்களும் தப்பு செய்யலாம். இருந்தாலும் ஜனநாயகத்தில் தவறில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது மக்கள் கடமைதான். மக்கள் அவர்களைக் கண்காணிக்க வேண்டும். எனவே, பொது மக்கள் நம்முடைய நடவடிக்கைகளைச் சரியாகக் கவனித்துக் கொண்டு வருகிருர்கள் என்ற எண்ணம் இருந்தால், அதை நினைத்து காரியங்கள் செய்தால், நமக்கு பயமே வேண்டியதில்லை. நியாயமாக நடக்கவேண்டும். அல்லது பயந்து நடக்கவேண்டும். அந்த அடிப்படையை நம் மனதில் வைத்துக்கொண்டால், அதிகாரம் யாருக்குப் போகிறது என்ற பிரச்னைக்கே இடமில்லை.

நமக்கு நிறைய பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டியது அவசியம். அரசாங்கத்தில் பண உதவி கொடுக்கிறேம். அதோடு பணம் சம்பாதிக்க வேண்டிய வசதியையும் சட்டத்தில் அமைத்துக் கொடுத்திருக்கிறேம். பல இடங்களில் புதிய வரிகளைப் போட்டுக்கொண்டு வருகிருர்கள். புதிய வரி போட்டால், என்ன, பஞ்சாயத்து தலைவர் நமக்கு வரி போட ஆரம்பித்து விட்டாரே என்கிற நிலைமை ஏற்படும். அந்த மாதிரி எண்ணத்தை சிலர் உண்டாக்கவும் செய்வார்கள்; அதற்கு முயற்சியும் செய்வார்கள். எவ்வளவு குறைந்த வரியாக இருந்தாலும், ஒரு ரூபாயாக இருந்தாலும் வரி போட்டு விட்டார்களே என்றுதான் மனதில் நினைக்கிருர்கள். வரி இல்லாமல் காரியங்கள் நடந்தால் நல்லதுதான். முடிகிறதா? வரி போடாமல் இருந்தால் நல்லது என்றுகூட பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் நினைக்கலாம். எங்களுக்கு எல்லாமே, கிராண்டாகக் கொடுத்துவிட்டால் நல்லது என்றும் நினைக்கலாம். பஞ்சாயத்து யூனியனில் நீங்கள் வரி போடாமல், சர்க்காரில் வரி போட்டாலும் இரண்டும் ஒன்றுதானே? ஒருவர் பையில்தானே எல்லோரும் கையைப் போடுகிறேம்? ஆகையால் நமது வாழ்க்கை வசதி அதிகமாக, நாம் வரி போட வேண்டியிருப்பதை யோசிக்க வேண்டியது அவசியம். ஆனுல் வரி விதிப்பின் மூலம் மக்களிடத்தில் அதிக அதிருப்தி சம்பாதிக்காமல் நமக்கு வேண்டிய நல்ல காரியங்களை அதிகமாகச் செய்யவேண்டிய பொறுப்பும் உங்களுக்கு இருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் யோசனை செய்யவேண்டியது அவசியம்.

உங்களுக்கு என்னென்ன சிரமங்கள் இருக்கின்றன? அதை எப்படிப் போக்குவது? அதற்கு சட்டத்தை எப்படி மாற்றுவது? என்பதையெல்லாம் நீங்கள் சொல்ல வேண்டும். கிராம மக்களுக்குச் செய்யவேண்டியவைகளை கொள்கைகளாக வகுத்துக்கொண்டு, வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். ரோடு வசதி, குடி தண்ணீர், பள்ளிக்கூடம், மின்சார விளக்கு இப்படி எத்தனையோ இருக்கின்றன. அதோடு தொழிலும் வளர வேண்டும்.

பொருளாதாரஉயர்வு—நமது குறிக்கோள்

விவசாயிகள்தான் கிராமத்தில் அதிகமாக இருக்கிருர்கள். விவசாய உற்பத்திக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டியது அவசியம். விவசாய உற்பத்தியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதற்கு அரசாங்கத்தில் பல்வேறு திட்டங்களை வைத்திருக்கிருர்கள். அந்தத் திட்டங்கள் சரியாக இருக்கின்றனவா என்று பரிசீலனை செய்ய வேண்டும். சரியாக நடக்கவில்லையென்ருல் அதற்கு என்ன காரணம் என்று நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். பல உதவிகளை விவசாயிகளுக்குச் செய்துகொண்டிருக்கிறேம். அதில் குறைபாடுகள் இருந்தால் அதுபற்றி யோசிக்க வேண்டும். அதோடு கிராமத்தில் தொழில் வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டுமென்று யோசிக்க வேண்டும். நம்முடைய வேலை ரோடு போடுவது, தண்ணீருக்காக கிணறு வெட்டுவது, பள்ளிக்கூடம் கட்டுவது மாத்திரமல்ல. பொருளாதார வாழ்வில் உயர வேண்டாமா?

சுதந்திரம் அடைந்ததால் என்ன ஆயிற்று என்று கிராம மக்கள் கேட்கமாட்டார்களா? வாழ்க்கையில் ஏதாவது சாப்பாட்டுக்கு வசதி உண்டாக்கியிருக்கிறதா, வரும்படி பெருகியிருக்கிறதா, அதற்கு ஏதாவது செய்திருக்கிறோமா என்று பார்க்க வேண்டும். இல்லையென்றால், அதற்கு என்ன செய்யவேண்டுமென்று நாம் யோசிக்கவேண்டும்.

பொருளாதார உயர்வு என்பது திடீரென்று ஒரு நாளில் ஏற்பட்டுவிடாது. ரோடு போடலாம். வரி அதிகமாகப் போட்டால் பள்ளிக்கூடங்கள் கட்டலாம். மற்றும் எல்லாம் செய்யலாம். ஆனால் பொருளாதார உயர்வை அப்படி உடனே செய்துவிட முடியாது. பொருளாதார உயர்வு ஏற்படும்போது, சமுதாயத்தில் எற்றத் தாழ்வு இருந்துகொண்டுதானிருக்கும். இந்த எற்றத் தாழ்வு போக நாம் முயற்சி எடுத்துக்கொண்டேயிருக்க வேண்டும்.

இல்லையென்ற நிலை இல்லை என்றாகவேண்டும்

நம்முடைய நாடு பரந்த நாடு. பெரிய தேசம். நாம் ஒன்றாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். அதில் நமக்கு வித்தியாசம் எதுமில்லை. பல்வேறு பிரிவினை முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கெல்லாம் காரணமென்ன? இதையெல்லாம் யார் செய்கிறார்கள்? பட்டினி கிடப்பவர்களுக்கான பிரச்னையா இது? சாப்பாட்டுக்கு இல்லாதவன் பாவம் தனக்கு நல்ல வாழ்வு வேண்டுமென்று நினைக்கிறான். மேலேயிருக்கிறவன் "நீ பட்டினியாய் இருக்கிறாய், அதற்கு அதுதான் காரணம், இதுதான் காரணம்" என்று ஜாதி வேற்றுமை, இன வேற்றுமைகளைக் காட்டுவார்கள். எழை என்ன செய்வான்? தவறான பாதையைக் காட்டினால் அவனும் அதிலேயேதான் போவான். காரணம், அவனுடைய தாழ்ந்த நிலைமை தான். அது மாறினால் ஒழிய, அவன் நிலைமை உயர்ந்தாலொழிய, நாம் எவ்வளவுதான் ஐக்கியத்திற்கு பாடுபட்டாலும் ஒன்றும் முடியாது. அதுவரையில், ஜாதி இன, மொழி வேற்றுமைகளைக்காட்டி பிரிவினையை உண்டாக்க குழப்பங்களை செய்து கொண்டுதான் இருப்பார்கள். அதற்கு முடிவு கட்டவேண்டுமானால் பொருளாதார எற்றத்தாழ்வு சமுதாயத்தை விட்டுப்போக வேண்டும். அதற்கு நீங்கள் யோசனை செய்ய வேண்டும். அது இல்லாமல் நீங்கள் பெரிய காரியம் ஒன்றும் செய்ய முடியாது. புதிய சமுதாயத்தை உருவாக்கும் பெரிய கடமை, பொறுப்பு நமக்கிருக்கிறது. இது கட்சி பிரச்னை அல்ல. பொருளாதார எற்றத் தாழ்வு போக வேண்டுமென்று எல்லா கட்சிகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இதில் கட்சி பிரச்னை இருக்கிறதா என்ன?

பஞ்சாயத்து தலைவர்கள் பள்ளிக்கூடம், ரோடு, கிணறு எல்லாம் செய்து கொடுக்க வேண்டியதுதான். ஆனால் அது தானா நமது லட்சியத்தின் முடிவு? லட்சியம் என்ன? புதிய சமுதாயத்தை அமைப்பது. நமது பஞ்சாயத்துத் தலைவர்களும், யூனியன் தலைவர்களும் ஒற்றுமையாக இருந்தால்—அங்கத்தினர்கள் ஒற்றுமையாக இருந்தால் காரியங்கள் சரியாக நடக்கும். அந்த உணர்ச்சியில்லையென்றால், அந்த மனப்பான்மையில்லை என்ற நிலையில் இந்த சண்டைகளைத் தீர்க்கவே வேலை சரியாகிவிடும்.

எல்லோரும் கூடி சேர்ந்து வேலை செய்யக்கூடிய இடங்களில் வேலை நன்றாக வேகமாக நடக்கிறது. வேலையில்லாமல் இருந்தால் என்ன நடக்கும்? வேலையில்லையென்றால் ஒருவருக்கொருவர் சண்டை போடுவார்கள்.

புதிய சமுதாயத்தை அமைக்க நாம் எண்ணி இடைவிடாமல் காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தால் இந்த சச்சரவுக்கெல்லாம் இடமிருக்காது.

புறம்போக்கு நிலங்களையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாறுதல் செய்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. சில ஊர்களில் அப்படிக் கொடுக்கவே இல்லையென்கிறார்கள் சில ஊர்களில் கொடுத்துவிட்டதாக நினைத்துக் கொண்டு எற்கெனவே அதில் உள்ளதையெல்லாம் மாற்றுகிறார்கள். நேற்று நான் வரும்போது ஒரு இடத்தில் புறம் போக்கு நிலத்திலிருந்து ஒரு முன்னாள் ராணுவத்திலிருந்தவரை **(Ex Service Man)** அப்புறப்படுத்த வேண்டுமென்று பஞ்சாயத்து யூனியனில் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்களாம். பதினைந்து வருடத்திற்கு முன் நிலம் கொடுத்திருக்கிறார்கள். அதில் எதோ குடிசை போட்டிருக்கிறார். அந்த நிலத்திற்கு பட்டா வாங்கவில்லை. அதனால் போகச் சொல்கிறார்கள் என்றார். வட ஆற்காடு ஜில்லாவாம். அவருக்கும் ஒரு தைரியம், நாம் சிப்பாய் என்று. பட்டா இல்லாததால் பஞ்சாயத்து யூனியன் தலைவர் நோட்டீஸ் கொடுத்துவிட்டார் என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் சரிதானா என்று பார்க்க வேண்டும். சொல்வதை அப்படியே நம்ப முடியுமா என்ன? சட்டமிருக்கலாம். அவரைப் போன்ற எழைகளை அப்படி செய்தால் அவர் என்ன செய்வார்? வேறு தொழில் எதாவது இருந்தால் வசதியாயிருந்தால் பரவாயில்லை. வேறு வீட்டுவசதியிருந்தாலும் பரவாயில்லை. சேர்மன் என்று அவர்களுக்கு அதிகாரம் வந்துவிட்டது என்று அவரைப் போகச் சொல்வது நியாயமா? சட்ட மன்றத்தில் கூட இதைப்பற்றி இன்னொன்றும் கேட்டார்கள். இப்படியே குடிசை போட்டுக் கொண்டு போகிறார்களே அதைத் தடுக்கவோ எடுப்பதற்கோ அதிகாரமில்லையா என்று கேட்கிறார்கள்.

ஏழைகளைத் தொந்திரவு செய்யவேண்டாம்

பல விடங்களில் எனக்குத் தெரியும். புறம்போக்கு என்று சும்மா போட்டு கணக்கு வைத்திருப்பார்கள். அதில் விவசாயம் நடந்து கொண்டிருக்கும். பட்டும் படாமலிருப்பார்கள். பின்னால் தெரிந்து விட்டால் அதற்கு இதற்கு அரிஜனுக்கு காலனி என்று மனு கொடுக்க ஆரம்பித்து விடுவார்கள். அதில் எனக்கு

கொடுக்கவில்லை உனக்கு இல்லை என்று வரும். தொந்திரவான பிரச்னை இது. சில பேர்கள் இதையே பிரச்னையாக வைத்துக் கொண்டுமிருக்கிறார்கள். நிலத்தை யாருக்கும் கொடுக்க முடியாமல் சட்டமிருக்கிறது என்பதற்காக இதையே வைத்துக் கொள்ளக் கூடாது. அதிலும் ஏழைகளைத் தொந்திரவு செய்யக் கூடாது. அதிக வருவாய் இருந்தால் பரவாயில்லை. வருவாயுள்ளவர்களிடத்தில்தான் நாம் போக மாட்டோமே! இதுமாதிரி பல பிரச்னைகளுண்டு. இந்தப் பிரச்னைகளை எல்லாம் யோசிக்கத்தான் மகாநாடு கூடியிருக்கிறது.

பள்ளிக்கூடப் பிரச்னை இருக்கிறது. பல மாதிரி பிரச்னைகள் இது சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியனுக்கு வந்துகொண்டேயிருக்கும். பள்ளிகளை (recognize) அங்கீகாரம் செய்வது, புதிதாக வகுப்பு ஆரம்பிப்பது போன்றவை இருக்கின்றன. சில இடங்களில் மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடமிருக்கிறது. ஐந்தாவது வகுப்பிலிருந்து 6-வது வகுப்புக்குப் போக நிறைய பேர் இருக்கிறார்கள். இருந்தாலும் பர்மிஷன் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள் என்பதாக சிலர் சொல்கிறார்கள். இது எவ்வளவு உண்மை என்று தெரியவில்லை. குழந்தைகள் எல்லாம் படிக்க வேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோம். அதனால் மானேஜ்மெண்டுகளில் நாம் அதிகமாகத் தலையிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். அதிகாரத்தை வைத்துக் கொண்டு அதனை மீறி விடக்கூடாது. அப்படியெல்லாம் செய்தால்தான் நிர்வாகத்தின் மேலேயே ஜனங்களுக்குக் கோபம் வருகிறது.

இன்னொரு இடத்தில் பஞ்சாயத்து யூனியன் தலைவர் வாத்தியாரையே போய் பள்ளிக் கூடத்தில் பார்த்துப் பிள்ளைக்கு இத்தனை மார்க் போட வேண்டுமென்று சொன்னாராம். நான் கேள்விப்பட்டதுதான் இது. ஜனங்களுக்கு ஒருவர்மீது பொறாமை வந்தாலும் ஏதாவது அப்படிச் சொல்வார்கள். ஆகையால் கூடுமானவரையில் ஜாக்கிரதையாக நாம் இருக்க வேண்டும். இது மாதிரி பல பொறுப்புகள் நமக்கு இருக்கிற நேரத்தில் கெட்ட பெயர் வராமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மக்கள் கவனிக்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட....

ஜனங்கள் குற்றங்களைக் கண்டு பிடிப்பார்கள் என்ற பயம் இருப்பதுதான் ஜனநாயகம். ஜனநாயகத்தில் ஜனங்கள் நம்மைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள் என்ற பயத்தோடு காரியங்களைச் செய்ய வேண்டும். அந்த பயத்தால் நடக்க வேண்டிய காரியத்தை விட்டு விடக்கூடாது. நாம் நடத்துகிற காரியங்கள் நியாயமானதாக இருக்கிறதா என்று தீர்மானம் செய்ய வேண்டும். அப்படி நடந்துகொள்ள நாம் முயற்சி எடுத்துக்கொண்டால் பஞ்சாயத்து ராஜ்யம் சரியாக நடக்க முடியும். நம் நாட்டில் ஜனநாயகம் நன்றாக நடக்கவேண்டுமென்றால் பஞ்சாயத்து நன்றாக நடக்க வேண்டும். ஒருவருக்கு குறைந்த வசதியும் ஒருவருக்கு அதிகமான வசதியும் இருப்பது கூடாது. அது பரவலாக இருக்க வேண்டுமென்கிறோம். அது மாதிரி அதிகாரமும் பரவலாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதில் ஜனங்களுக்குள்ள நம்பிக்கை போய்விடும். இப்போது கிராமப் பஞ்சாயத்து இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. நாம்தான் எல்லாம். அதிகாரம் எல்லாம் நமக்கிருக்கிறது என்ற மனப்பான்மை நமக்கிருக்கிறது. அப்படியில்லாவிட்டால் "என்ன ஜனநாயகம், எங்கோ உட்கார்ந்துகொண்டு ஏதோ செய்கிறார்கள்" என்று போய் விடுவார்கள். அதிகம் பேருக்கு இன்னும் அந்த பொறுப்புணர்ச்சி வந்து விடவேண்டும். அதற்கு மனப்பக்குவப்பட வேண்டும்.

இப்போது இரண்டு காரியங்களை நடத்த வேண்டுமென்று சொல்லுகிறோம். ஒன்று, அதிகாரம் பரவலாக இருக்க வேண்டுமென்பது, மற்றொன்று பொருளாதார வளர்ச்சி பரவலாக இருக்க வேண்டுமென்பது. இப்போது அதற்காக அஸ்திவாரம் போட்டிருக்கிறோம். மேற்கொண்டு கட்டிடத்தைக் கட்டவேண்டிய நிலையில் இருக்கிறோம். அதை யோசித்து உங்களுடைய அபிப்பிராயம் அதையொட்டி அமையவேண்டியது மிக முக்கியம். யோசித்து ஒரே நாளில் செய்ய வேண்டும் என்பதில்லை. அது அவ்வளவு சீக்கிரம் முடியாது. உங்கள் மனத்திலுள்ள குறைபாடுகள் எனக்குத் தெரியும். கமிஷனருக்கு, ஜீப்பா? தலைவருக்கு ஜீப்பா? என்ற கேள்வியிருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் யோசிக்க வேண்டியது அவசியம். யோசித்து நல்ல முடிவுக்கு வர வேண்டும். உங்கள் ஊர் பஞ்சாயத்து யூனியன் எப்படி நடக்கிறது. கட்சியில்லாமல் நடக்கிறதா, சேர்மன் மெஜாரிட்டி—மைனாரிட்டி ஏற்படுகிறதா, ஏன் அப்படி ஏற்படுகிறது? பணச் செலவு அதிகமில்லாமல் தேர்தலை எப்படி நடத்துவது? என்பதையெல்லாம் பேசி முடிவு காண வேண்டும். தேர்தலுக்குப் பணம் செலவழிக்கிறார்கள் என்றால் பஞ்சாயத்தில் மட்டுமா செய்கிறார்கள்? சட்டசபைத் தேர்தலிலும் அது நடக்கிறது. அதற்கென்ன செய்வது? நமக்கு முன்னால் இருந்தவர்கள் எல்லாம் சரியாக இருந்திருந்தால் நாமும் அதே வழியில் போயிருக்கலாம். ஏதோ தப்பாகப் போய் காண்பித்துவிட்டார்கள். நாமும் அதிலேயே போய்க் கொண்டிருக்கிறோம். அதை மாற்ற வேண்டும்.

தமிழ்நாடே இங்கு கூடியிருக்கிறது....

பஞ்சாயத்துத் தலைவர்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள் என்றால் தமிழ்நாடே இங்கு இருக்கிறது என்றுதான் அர்த்தம். இதனால் இரண்டு, மூன்று நாட்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து உட்கார்ந்து பழகுவதற்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. பத்திரிகையில் அவ்வப்போது பார்க்கலாம். இருந்தாலும் ஒருவருக்கொருவர் நேரில் பார்த்து பேசுவது விசேஷம் அல்லவா? இங்கு ஒன்றாகக் கூடுவதால் ஒருவருக்கொருவர் நல்ல பரிச்சயம் ஏற்படும், பழக்கம் ஏற்படும், அதனால் நமக்கு ஒரு நம்

(22-ம் பக்கம் பார்க்க)

"பொதுஜனப் பிரதிநிதிகள் பொறுப்புணர்ச்சி யுடன் பணியாற்றவேண்டும்"

தலைமைச் செயலாளர் திரு. ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்., அவர்களின் சிறப்புரை

"இன்றைக்கு இருக்கின்ற 373 பஞ்சாயத்து யூனியன்களும் சின்ன அரசாங்கங்களாக ஏற்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு அரசாங்கத்திற்கும் சீப் செகரட்டரிக்கும் எந்தவிதமான தொடர்பு இப்போது ஏற்பட்டிருக்கிறதோ, அந்தவிதமான தொடர்பு பஞ்சாயத்து யூனியனுக்கும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கும் ஏற்பட வேண்டும். அதுதான் என் மனதிலுள்ள ஆசை.

பஞ்சாயத்து யூனியன் ஏற்படுத்தியது அதன் தலைவர்கள் யதேச்சாதிகாரமாகக் காரியங்கள் செய்வதற்கு அல்ல. கிராமத் தலைவர்கள் சேர்ந்து உட்கார்ந்து தங்கள் தங்கள் கிராமங்களுக்கு என்ன வேண்டுமென்று யோசிக்க வேண்டும். அந்த மாதிரி 20, 25 பிளாக்குகள் சேர்ந்து ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் என்று ஏற்பட்டிருக்கிறது. பிளாக்குகளுக்கு வேண்டிய அபிவிருத்திகளைச் செய்து விட்டு, அதன்பிறகு ஜில்லா அளவில் செய்தால்தான் அது பிளாக்குகளுக்குப் பிரயோஜனப்படும். பிளாக்குகளுக்குச் செய்தால்தான் அது பஞ்சாயத்துக்களுக்குப் போகும். பொதுஜனங்களுக்குப் பிரதிநிதிகளாக ஜில்லா கவுன்சிலில் ஆறு பேர்கள் இருக்கிறார்கள். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை தமிழ்நாடு அரசாங்கம் முதல் மந்திரியோடு கூடி கலந்து பேசுவதைப்போல், ஜில்லா அளவிலும் அந்த மெம்பர்கள் கலெக்டருடன் பேசுவார்கள்.

பஞ்சாயத்துக் காரியங்கள் ஒழுங்காக நடக்கவேண்டுமென்றால், ஜனங்கள் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து ஒழுங்காக நடந்து காண்பிக்கவேண்டும். அரசாங்கம் மாத்திரம் பொறுப்பேற்றுக் கொண்டால் போதாது.

சமநீதி வழங்க அரசியல் சட்டம்

அரசாங்கம் என்பது தொன்று தொட்டு ஏற்பட்டது. ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவு இல்லாமல், தகராறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள அரசாங்கம் ஏற்பட்டது. அதற்குப் பின்னும் இப்போதும் சண்டைகள் இருக்கிறது. ஒருவருக்கொருவர் கலகம் செய்யாமல் இருக்க சட்டத்தையும் ஒழுங்கையும் (Law and Order) நிலைநிறுத்தச் செய்வதற்கும், அவர்களுக்கு சம்பளம் கொடுப்பது, வரி வசூல் செய்வதற்கும் அரசாங்கம் இருந்தது. இப்போது ஜனங்களுடைய ஒவ்வோரு சௌகரியத்துக்கும் நாம் செய்ய வேண்டியது என்ன என்று அரசியல் சட்டத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நியாயமாக நடப்பதற்காக, அரசியல் சட்டம், ஏழைகளை உயர்த்த வேண்டியது அரசியல் சட்டம். எல்லாருக்கும் நியாயம் வழங்க வேண்டியது அரசியல் சட்டம் என்ற முறையில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை 1950-ல் எழுதினார்கள். இந்த மாதிரி அபிவிருத்திகள் 10, 15 வருஷங்களுக்கு மாத்திர மல்ல பரம்பரை பரம்பரையாக வர வழி செய்வது அரசியல் சட்டம். நீங்கள் அதை நடத்திக் காட்டுகிறவர்கள். ஐந்து வருஷங்களுக்குப் பிறகு அதை எந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஆலோசித்துப் பார்த்து எதைச் செய்ய முடியாது, எதைச் செய்வது என்பதை ஏற்பாடு செய்து கொடுத்து இருக்கிறார்கள். இதை ஆரம்பிக்கும் போது எந்த மாதிரி பிளான் போடவேண்டும், எந்த விதத்தில் அமைப்புக்கள் வேண்டும் என்பதை நமக்கு புத்தகத்தில் எழுதிக் கொடுக்க வில்லை. நம்முடைய அறிவால் ஒருவருக்குருவர் பேசிக் கொள்வதாலும் எந்த குறிக்கோளை நாம் அடையவேண்டுமென்பதையெல்லாம் நாமே கண்டு பிடித்துக்கொண்டு இன்று மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறோம். இங்கு வந்திருக்கிற பஞ்சாயத்துத் தலைவர்களும் வராமல் இருக்கிற பஞ்சாயத்துத் தலைவர்களும் தங்கள் வேலை என்னவென்று ஆலோசிக்கும்போது, முதன் முதலாக இந்தியன் கான்ஸ்டிடியூஷனை அதிலுள்ள கோரிக்கைகளை பார்த்து வைத்துக்கொள்ள வேண்டியதுதான் முதல் காரியம். எல்லாக் கிராமங்களுக்கும் அதிகாரம் போகவேண்டும். இந்த மாதிரி மனிதர்களை வைத்து நடத்தவேண்டுமென்று வரும்போது மேலேயிருந்து சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வேண்டிதான் இருக்கிறது. சர்க்கார் உத்திரவுகள் இருந்தாலும் ஜனங்களுடைய மனதை அதற்குத் தகுந்தமாதிரி மாற்றக்கூடிய மனிதர்கள் வேண்டும். எப்படி ? கான்ஸ்டிடியூஷன் என்பது என்ன ? பிளான் என்பது என்ன ? அதில் நம் பங்கு என்ன என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறவேண்டுமென்றுதான் பஞ்சாயத்து சட்டத்தை செய்தார்கள். முதல் அத்தியாயம் கான்ஸ்டிடியூஷன். இரண்டாவது அத்தியாயம் பஞ்சாயத்துச் சட்டம். அதற்குக் கீழ் அமைப்புவிதிகள்.

இந்தப் பஞ்சாயத்து சட்டத்திலும் சரி எந்தவிதமான ஏற்பாடுகளைச் செய்தாலும் அதை பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் போடும்போது இதில் என்ன திருத்தம் செய்ய வேண்டுமென்று ஆலோசனை செய்ய உரிமை இருக்கிறது, செய்வது நல்லது என்பது என்னுடைய அபிப்ராயம். இப்போது 1958-ம் வருஷச் சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டப்படி பஞ்சாயத்துக்களை,

பஞ்சாயத்து யூனியன் அமைப்புகளை உருவாக்கி யிருக்கிறோம். 1959-ல் பஞ்சாயத்துக்கள் ஆரம்பித்தோம். 1964–65-க்கு முன்பே ஒரு மாற்று அமைப்பு தமிழ் நாடு பூராவும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இதைச் செய்வதற்கு முன்னதாக என்னென்ன விஷயங்கள் செய்ய வேண்டுமென்று யோசனை செய்யவேண்டும். 1963-ல் யோசித்து 1964-ல் நடக்கும்படிசெய்யவேண்டும்.

அளவுள்ள குடும்பம்—அவசியம் அல்லவா ?

இப்போது இவ்வளவு பேர்கள் பேசிக்கொண்டிருந்த போது எனக்கு வருத்தமான காரியம் ஒன்றைச் சொல்லப் போகிறேன். ரோடு போடுவது, சிமிண்டு இல்லாதது, கல்வி பற்றி எல்லாம் பேசினார்கள். ஆனால் குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஒரு வார்த்தைக்கூட ஒருவரும் பேச வில்லை என்பதுதான் எனக்கு வருத்தம். சர்க்கார் செய்யக் கூடியதைச் செய்யலாம். சிலவற்றை நீங்கள் தான் செய்ய வேண்டும். சர்க்காரால் நடத்தமுடியாத சில காரியங்களை பஞ்சாயத்துத் தலைவர்களும் மெம் பர்களும் மனது வைத்தால் நிச்சயமாக நடத்திக் காட்டமுடியும். அது இந்த விஷயம்தான்.

1953–54-ல் இந்திய அரசாங்கம் இது செய்ய வேண்டியது அவசியம் என்று ஒப்புக் கொண்டிருக் கிறார்கள். இது சம்பந்தமாக பலகோடி ரூபாய்களை செல வழித்து வருகிறார்கள். முப்பது வருஷங்களுக்குப் பிறகு உங்கள் குழந்தைகள் உங்களைப் போல இங்கு வரப் போகிறார்கள். வறுமையில் அடிபடாமல் அவர்கள் வாழ்ந்து இங்கு வரவேண்டும். இதை மறந்து விட்டால், நாம் எத்தனை கோடி திட்டங்களுக்கு என்று செலவழித்தாலும் மிச்சம் இருக்காது. இப்போது இருக்கும் நிலையிலேயே இருந்தால் பரவாயில்லை. இன்னும் மோசமாகப் போய்விட்டால், இதற்குக் கீழே போய்விட்டால் அது மிகவும் கஷ்டமாகிவிடும்.

பஞ்சாயத்துத் தலைவர்களும் பெருந்தலைவர்களும் தங்கள் தங்கள் கிராமங்களில் கணக்குப் பார்த்து இந்த வருஷம் 90 சத விகிதம் அடுத்த வருஷம் 80 சத விகிதம் என்று குறைத்து 5 வருஷத்திற் குள் சரிபாதிக்குக் கொண்டுவர வேண்டும். இந்த மாதிரி அரசாங்கத்தின் உதவி இல்லாமல் 10 வரு ஷத்தில் ஜப்பானில் செய்திருக்கிறார்கள். நமக்கு அவ் வளவு காலம் வேண்டியதில்லை. சரி, வேண்டுமானால் பத்து வருஷமே வைத்துக் கொள்ளுங்கள். ரோடு போடுவது, கிணறு வெட்டுவது யார் வேண்டுமானாலும் செய்யலாம். இந்த விஷயத்தைப் பொருத்தமட்டில் சர்க்கார் எவ்வளவு முயன்று செய்தாலும் உங்கள் ஒத்துழைப்பின்றி நடக்காது. நீங்கள் இந்த விஷயத் தைக் கணக்கெடுத்து மாதா மாதம் வருஷா வருஷம் கணித்துப் பார்த்து வந்தால்தான் நன்றாக இருக்கும். பிற்காலத்தில் சரித்திரத்தில் தமிழ்நாடு பஞ்சாயத்துத் தலைவர்கள் செய்து காட்டிய வழி அவர்களால் காண்பிக்கப்பட்ட வழி என்று குறிக்கப்படும்.

புறம்போக்கு என்பதில் அஸ்ஸெஸ்டு வேஸ்ட், அன்-அஸ்செஸ்டு வேஸ்ட் என்று வேறு வேறாகப் போட்டிருக்கிறார்கள். புறம்போக்கு எதுவாக இருந்தாலும், பொது உபயோகத்திற்கு ஏற்படுகிறதாக இருந் தாலும், தனியாக இருந்தாலும் அது புறம்போக்கு தான். இதை என்ன செய்யவேண்டுமென்று 1½ வரு ஷமாகப் பார்த்து வருகிறோம். இன்னும் பாக்கி யிருக்கிறது. போர்டு மெம்பர் இங்கு வந்து இரண்டு நாட்கள் உட்கார்ந்திருப்பது அதற்கு ஒரு அத்தாட்சி. இது அவர் நடத்தி வைக்கவேண்டிய காரியம். அவராலேயே இது முடிந்துவிடும் என்று நீங்கள் நம்பலாம்.

பஞ்சாயத்து ரோடு, யூனியன் ரோடு பற்றி எம் எல்.ஏ-க்கள் கூட அதிகாரிகளை குறை கூறுகிறார்கள். ஏழை மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண டியவர்களுக்கு சௌகரியங்கள் செய்வதும் வேண்டா தவர்களுக்கு ஒன்றும் செய்வதில்லை என்றும் சொல் கிறார்கள். ஏழைகளுக்கு, ஆக்குபேஷன் இல்லாத பொது நிலங்களை ஒப்படைக்க வேண்டும். ஒரு ஏக்கர் அல்லது பத்து செண்டாக இருந்தாலும் அந்த நிலம் எந்த வகையானது, யார் அதை ஆக்கிரமித் திருக்கிறார்கள், என்ன உபயோகத்தில் அது இருக் கிறது, அது அப்புறப்படுத்தவேண்டிய கேஸ்தானா, பர்மனென்டாக இருக்க வேண்டியதா என்று தீர்மானம் செய்து அத்தனை தேதிக்குள் ஒரு ரிகார்டு செய்து கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு பஞ்சாயத்துக்கு வம்பு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகையால் உங்கள் கையில் ஒப்படைத்த பிறகு அதை உங்கள் சொந்த நிலத்தை பார்த்துக் கொள்வது போல் ஜாக்கிரதையாகப் பார்க்கவேண்டும். பந்தோபஸ்தாகப் பாதுகாக்க வேண்டும். அதற்கு சட்டத் திருத்தம் செய்ய வேண்டுமென்றால் அரசாங்கம் செய்யும்.

பஞ்சாயத்து பிரசிடெண்டை மெம்பர் கண்டிக்கலாம். ஆனால் பஞ்சாயத்து பிரசிடெண்ட் தலைமை வகித்து நடத்தச் செய்ய வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். இரண்டுக்கும் ஏதோ முரண் இருக்கிறது. ஆகையால் ஒரு பிரசிடெண்ட் செய்வது நியாயமா தப்பா என்று சொல்வதற்கு மெஜாரிட்டி வேண்டியிருக்கிறது. மெஜா ரிட்டியாக சொல்கிறவர்கள் சரியாக சொன்னால் பரவா யில்லை. நியாயத்தை அநியாயம் என்றும் சொல்ல லாம். அநியாயத்தை நியாயம் என்றும் அவர்கள் சொல்லலாம். அதுதான் ஜனநாயகம். அனுபவ பூர் வமாகப் பார்த்தால் அது தப்பு. மெஜாரிடியால் மட்டும் அநியாயம் நியாயமாகிவிடாது.

மெஜாரிடி மைனாரிடியைக் கொண்டு அநியாயத்தை நியாயம் என்றும் நியாயத்தை அநியாயம் என்றும் சொல்லக் கூடிய நிலைமையைக் கண்டிக்க ஒரு ஸ்தாபனம் வேண்டும். பஞ்சாயத்து போர்டு தப்பு செய்தால், பஞ்சாயத்து யூனியன் சேர்மென் தப்பு செய்தால், அதை கண்டிக்கவும் திருத்தவும் ஒரு ஸ்தாபனம் அவசியம் தேவை. அரசாங்கத்திற்கு சம்பந்தம் இல்லாமல் உங்களுக்குள்ளேயே யூனியனை ஏற்படுத்தி நியாயத்தால், கண்ணியத்தால், பண்பினால் அதைக் காக்கவேண்டும். அந்த மாதிரி நீங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்."

"உன்னதமான சமுதாயத்தை உருவாக்குவோம்"

கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு கோ. வேங்கடாசலபதி அவர்களின் கருத்துரை

"இந்தப் பஞ்சாயத்து மகாநாட்டில் நானும் ஒருவனாகக் கலந்துகொள்ளுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இதற்குப் பிறகு பல மகாநாடுகள் இதுபோன்று நடக்க இருக்கின்றன. இந்த தேசத்தில் முதன்முதலாகப் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களின் மகாநாடு கூட்டிய பெருமை தமிழகத்திற்குண்டு. இந்த மகாநாடு திருச்சியில் நடப்பதில் ஒரு விசேஷம் உண்டு. 32 ஆண்டுகளுக்கு முன்பு" சுதந்திரத்திற்காக உப்பு சத்தியாக்கிரகம் செய்வதற்காக திருச்சியிலிருந்து நமது தலைவர்கள் கூடி வேதாரண்யத்திற்குப் புறப்பட்டார்கள். அவர்கள் புறப்பட்டநோக்கம் நிறைவேறியது. அதுபோன்று இன்று தமிழ்நாடே இங்கு திரண்டு வந்திருக்கின்றது. இங்குள்ள 12,500 பஞ்சாயத்துக்களுக்குப் பிரதிநிதியாக இருக்கிற 373 பேர்கள் இங்கு கூடியிருக்கிறீர்கள். இந்த மகாநாடு நல்ல முறையில் நடந்து, வருகின்ற மகாநாடுகளுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்பது என் ஆசை.

முதன் மந்திரி அவர்கள் பேசும்போது, "எல்லோருக்கும் செய்வதற்கு வேலை இருந்தால், எல்லோரும் சேர்ந்து வேலை செய்ய வேண்டுமென்று எண்ணம் இருந்தால், சிறிய சிறிய பிரச்னைகளில் ஈடுபடாமல் பெரிய காரியங்களில் ஈடுபடுவோம்" என்று சொன்னார்கள். மகாத்மா காந்தியடிகள் சுதந்திரம் பெற்றது, நாம் அரசாங்கம் நடத்த வேண்டுமென்பதற்காக மட்டுமல்ல, சுதந்திர இந்தியா ஒரு நல்ல சமுதாயமாக அமைந்து, உலகத்திற்கே வழிகாட்டுகின்ற வகையில், உலகத்தில் ஒருவருக்கொருவர் அன்பாக, மனித உள்ளத்தோடு எப்படி வாழ வேண்டுமோ அப்படிப்பட்ட சமுதாயமாக, இந்திய சமுதாயம் ஆக வேண்டுமென்பது காந்தியடிகள் ஆசையாக இருந்தது. அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு லட்சியம் உண்டு. சமுதாய அமைப்பு பற்றி ஒவ்வொரு தேசத்தின் தலைவர்களும் சிந்தித்திருக்கிறார்கள். அமெரிக்கா எப்படி இருக்க வேண்டுமென்று லிங்கன் போன்றவர்களும், ரஷியா எப்படி இருக்கவேண்டுமென்று லெனின் போன்றவர்களும் நினைத்தார்கள். நம்முடைய தேசம் எப்படி இருக்கவேண்டுமென்று மகாத்மா காந்தி நினைத்தார், பேசினார், எழுதிவைத்திருக்கிறார். அந்த உன்னதமான சமுதாயத்தை நிர்மாணிக்கின்ற பொறுப்புத்தான் இன்று பஞ்சாயத்துக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கிராமங்கள் இல்லாவிட்டால் பாரத சமுதாயம் இல்லை. 100–க்கு 85 பேர்கள் இந்தத் தேசத்தில் கிராமங்களில் வாழ்கிறார்கள். பாரத தேசம் எப்படி ஆகவேண்டுமென்று நம்முடைய தலைவர்கள் விரும்புகிறார்களோ, அதைச் செய்து காட்ட வேண்டிய பொறுப்பு இன்று பஞ்சாயத்துக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

பசி பட்டினியைப் போக்குவோம்

இன்று முதன் மந்திரி அவர்களின் பிறந்த தினமாக இருப்பது நம்முடைய பாக்கியம் என்றுதான் நான் நினைக்கிறேன். இந்த தேசம் காந்தியடிகள் நினைத்தபடி உருவாக வேண்டுமென்று கண்ணும் கருத்துமாக இருந்து அதற்காகவே அரசாங்கப் பொறுப்பை மேற்கொண்டு முதன் மந்திரியாக அவர்கள் இருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. காந்தியடிகள் கனவு கண்ட அந்த சமுதாயத்தை உருவாக்குவதில் தமிழ்நாடு மற்ற ராஜ்யங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டுமென்று நமது முதன் மந்திரி அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் பேச்சில் பெரும் பகுதி நாம் பார்த்தால், இந்த நாட்டில் ஏழை, எளியவர்கள் பசியோடு, பட்டினியோடு இருக்கும் வரையில் இந்த நாட்டில் சட்டம் நிலைக்காது, நல்ல சமுதாயம் அமையாது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அதைப் பஞ்சாயத்துத் தலைவர்கள் யோசிக்க வேண்டும். முதன் மந்திரி அவர்களுடைய பிறந்த தினத்தில் மாலைகள் போட்டு மரியாதை செலுத்தினோம். அதை விட இன்னொன்றைச் செய்தால் அவர் இன்னும் மகிழ்ச்சி அடைவார். "தமிழ் நாட்டு முதன் மந்திரி அவர்களே, நீங்கள் மகாத்மா காந்தி காண விரும்பிய சமுதாய அமைப்பு இந்த தேசத்தில் நிர்மாணிக்கபட வேண்டுமென்று பாடுபட்டு வருகிறீர்கள். அதற்குப் பக்கபலமாக நாங்கள் இருந்து, நாங்கள் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற பஞ்சாயத்து யூனியன் பிரதேசங்களில் பசி, பட்டினி இல்லாமல் செய்வதற்கு நாங்கள் பாடுபடுவோம். எங்கள் கிராமங்களில் வேலையில்லை என்ற சொல்லுக்கு இடமில்லாமல் செய்வோம். ஏழை, எளியவர்கள் என்று இல்லாமல் எல்லோரும் வயிறுறச் சாப்பிட்டு நலம்பெற ஏற்பாடு செய்வோம். எங்கள் கிராமங்களில் ஜாதி மத வித்தியாசம் இல்லாமல் ஊரெல்லாம் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல ஒன்றி உறவாடுவதற்கு நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்" என்ற உறுதியை முதன் மந்திரி அவர்களுக்கு நாம் அளிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். இதுதான் அவர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாகும்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

பொதுவாக, நம் நாட்டில் பஞ்சாயத்துக்கள் எங்கும் நன்றாக நடந்துகொண்டிருக்கின்றன. சில இடங்களில் ஒற்றுமை இல்லாமல் இருப்பதால் வேலை சரியாக நடப்பதில்லை. பஞ்சாயத்து யூனியன் மெஜாரிட்டி, மைனாரிடி இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த மாதிரி இடங்

களில் எல்லாம் வேலை சரியாக நடைபெறுவதில்லை. ஒன்று சேர்ந்து வேலை செய்யும் பஞ்சாயத்து மன்றங்களில், சட்டத்திலுள்ளபடி மிக நன்றாக ஒழுங்காக வேலைகள் நடந்துவருகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு உதவியாக இருக்க வேண்டுமென்றுதான் அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். இருந்தாலும் சில பஞ்சாயத்து யூனியன்களில் ஒற்றுமை இல்லாததால் கமிஷனரே சர்வாதிகாரியாக இருந்து காரியங்களைச் செய்கிறார்கள். அது எனக்குத் தெரியும். இரண்டு பேரும் ஒன்றாக இருக்க வேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு, நன்றிது தேர்ந்திடல் வேண்டும், இந்த ஞானம் வந்தால் பின் நமக்கென்ன வேண்டும்?" என்று பாரதியார் பாடினார். அதை நாம் எல்லோரும் உணர வேண்டும். ஜாதி வித்தியாசம், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு எங்கும் இருக்கக் கூடாது. ஒரு ஊரில் 16 ஆயிரம் ரூபாய் செலவில் குடிநீர் தேக்கத் தொட்டி கட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதை எந்தத் தெருவில் கட்டுவது என்பது பெரிய பிரச்னையாக இருக்கிறது. தெற்குத் தெருவில் வைக்க வேண்டுமென்கிறார் ஒரு கவுன்சிலர், மேற்குத் தெரு என்கிறார் ஒரு கவுன்சிலர். கட்ட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி ஆறு மாதங்கள் ஆகின்றன. இருந்தாலும் இன்னும் அந்த ஊரில் அந்த வேலை நடக்கவில்லை. இன்னும் சில இடங்களில் இது போன்ற காரியங்கள் சில்லறை தகராறுகளால் நின்றிருக்கின்றன. நம் கிராமங்கள் எதில் குறைந்தனவாக இருக்கின்றன? கனியும், கிழங்கும் தானியங்களையும் கணக்கின்றித் தருகின்ற நாடு தமிழ்நாடு. கிராமங்களில் ஒற்றுமை இல்லாமல் இருப்பதால், அவை அத்தனையும் பயனற்றுப் போகின்றன.

ஓங்கு புகழ் எய்தி வாழ்வோம்

பஞ்சாயத்து வளர நல்ல தருணம் இது. நமது முதன் மந்திரி அவர்களும் பிரதம காரியதரிசி அவர்களும் மற்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் பஞ்சாயத்துக்களுக்கு அதிகப் பொறுப்பு கொடுத்து செய்ய வேண்டுமென்றுதான் ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகையால் பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது பெரிய ஒரு லட்சியமாகும். இதில் ஈடுபடும்போது பஞ்சாயத்துத் தலைவர்கள் நம்மால் எப்படிச் செய்ய முடியும் என்று நினைக்கக் கூடாது. நமக்குப் பிறகு நம்மை சரித்திரம் பாராட்டுகின்ற பெருமை கிடைப்பது நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சியைப் பொருத்தது. சமுதாயத்தை உயர்வாக்குவேன் என்று முன்வந்து வேலை செய்தால் கடவுள் கூட அவர்களுக்கு முன் வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு உதவி செய்ய ஓடிவருவார் என்று திருவள்ளுவர் சொல்கிறார். "குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம் மடிதற்றுத் தாமுந்துறும்" என்கிறார் அவர். எனவே கடவுள் நம் கண்ணுக்குக் காணமுடியாத ஒரு சக்தி. கண்ணுக்குக் காணுகின்ற சக்திதான் முதலமைச்சர். உங்கள் ஊருக்கு நீங்கள் பாடுபடுகிறீர்கள் என்றால் அதில் நானும் ஒருவனாக இருந்து வேலை செய்ய வருகிறேன் என்று சொல்லக்கூடியவர்.

தமிழ்நாடு தலைசிறந்து விளங்கவேண்டும்

இந்தத் தமிழ்நாடு பாரத தேசத்திலுள்ள பதினைந்து ராஜ்யங்களில் முதன்மையானதாக இருக்க வேண்டும். கல்வி அபிவிருத்தி, மின்சார அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி, இவைகளில் முன்னே இருக்க வேண்டும். உலகத்தில் உள்ள நூறு தேசங்களில் இந்தியா தேசம் முதன்மையாக இருக்க வேண்டும். இதைப் பார்த்து அமெரிக்கா, ரஷியா, சீனா போன்ற நாடுகள் பின்பற்ற வேண்டும். கென்னடியின் பேரன், குருஷேவின் பேரன் எல்லாம் இந்த தேசத்திற்கு வந்து அவர்களுடைய சமுதாயம் நல்ல சமுதாயமாக ஆகவேண்டுமென்றால் அதைக் கற்றுக்கொள்ள இங்குதான் வரவேண்டுமென்று வர வேண்டும். நம்முடைய இஞ்சினியர்கள், டாக்டர்கள் இன்று வெளி நாடுகளுக்குச் சென்று வருகிறார்கள். சில வருடங்களுக்குப் பிறகு மனிதன் மனிதனாக வாழ வேண்டுமென்றால் உலகத்திற்குப் பயப்படாத மனிதன், தன்னைப் பார்த்து யாரும் பயங் கொள்ளக்கூடாத மனிதன், வாழ்வாங்கு வாழுகின்ற மனிதன் வேண்டுமென்றால் அப்படிப்பட்டவர்களை உருவாக்க வேண்டுமென்றால் அதற்கு இந்திய சமுதாய அமைப்புதான் ஏற்றது என்று வெளி நாடுகளிலிருந்து கப்பல் கப்பலாக அவர்கள் இங்கு வந்து இறங்க வேண்டுமென்பதுதான் காந்தியடிகளின் ஆசை. அதுதான் நமது முதன் மந்திரி அவர்களுடைய ஆசையும். அப்படி ஆக்குவோம் என்று நாம் கூறுகிற உறுதிதான் முதன் மந்திரி அவர்களின் பிறந்த தினத்தில் நாம் அவருக்குச் செய்யக்கூடிய மரியாதை என்று நான் நினைக்கிறேன்."

கேள்விச் செல்வம்:

கிராம வானொலி மன்றம்

செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த 'பாக்கம்' பஞ்சாயத்தில் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் தேதியில், கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தேறின. அண்மையில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்கள் மகாநாட்டில் முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு அன்று மாலை 6–45 மணிக்கு ஒலிப்பரப்பாகியது.

பாக்கம் பஞ்சாயத்துத் தலைவர் திரு. இராஜமாணிக்கம் அவர்கள், இந்த மன்றத்தை அமைப்பதில் விசேஷ சிரத்தையுடன் பாடுபட்டார். மதுராந்தகம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. ஜெயராம ரெட்டியார், யூனியன் கமிஷனர், கல்வி வளர்ச்சி அதிகாரி ஆகியோர் இந்த நடவடிக்கைகளில் மிகுந்த அக்கறை காட்டினர். ஒரு பெண்மணி உள்பட, சுமார் 20 அங்கத்தினர்கள் ஒழுங்கான முறையில் கிராம வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டனர்.

சென்னை வானொலி நிலையத்தைச் சார்ந்த திரு. ராமச்சந்திரன், திரு. மஜூருடீன் ஆகியோர் 'பாக்கம்' கிராம வானொலி மன்றத்தின் விசேஷ விருந்தினர்களாக இருந்து நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டனர். "வளரும் தமிழகம்" என்ற தலைப்பில் ஒரு விசேஷ நிகழ்ச்சியை ஒலிப்பதிவு செய்ய அவர்கள் மதுராந்தகம் யூனியனுக்கு வந்திருந்தபோது, இந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டு, கிராம மக்கள் வானொலி நிகழ்ச்சிகளை எவ்வாறு வரவேற்கிறார்கள் என்பதையும் நேரில் கண்டனர்.

கிராம வானொலி மன்றத்தின் தலைமை அமைப்பாளர் திரு. வேங்கடசாமி இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

"நாடு செழிக்க, மக்கள் நல்வாழ்வு வாழ, தியாக உணர்வுடனும், குடும்ப பாசத்துடனும் பணியாற்றுவோம்..."

மத்திய அரசாங்க அமைச்சர் திரு. எஸ். கே. டே அவர்களின் கருத்தாழம் மிக்க பேச்சு

திரு. கோபாலசாமி அவர்களே, நண்பர்களே !

"பஞ்சாயத்து இயக்கம் என்பது மக்களின் சொந்த இயக்கம். அந்த இயக்கத்தில் நானும் கலந்து ஒன்ருகச் சேர்ந்தாலொழிய அதன் தன்மையை பூரணமாக அறிந்துகொள்ளுவது கஷ்டம். ஆகையால், இந்த மாகாணத்தில் பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு மகாநாடு கூட்டுகிருர்கள் என்று தெரிந்தவுடன், நான் அங்கிருந்து இங்கு வந்து கலந்து கொள்ள ஓடோடியும் வந்தேன்.

முன்பு எல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்கள் இருந்தன. ஆனல் அவைகளுக்குப் போதுமான வருமானம் கிடையாது. அவர்களுக்கு முக்கியமான வேலை வெளியிலிருந்து வருகிறவர்களுக்கு மாலை போடுவது, அவர்களை வரவேற்பது என்பதோடு ஊருக்கு விளக்குப் போடுவது, விளக்கு எரிகிறதா என்று பார்ப்பது, சில கிராமங்களில் சுகாதார வசதியைப் பார்ப்பது இவைதான் அப்போது இருந்தது. இதைத் தவிர உற்சாகத்தை அளிக்க கூடிய வேறு வேலைகள் அவர்களுக்கு அப்போது கிடையாது. ஆகையால், உற்சாகமின்றி அவர்கள் இருந்தார்கள். ஆனல் இப்போது அப்படியில்லை. முன்பெல்லாம் பஞ்சாயத்துக்களுக்கு வழிகாட்டுவதாகச் சொல்லி சில உத்தியோகஸ்தர்களுடைய மேற்பார்வையின்கீழ் பஞ்சாயத்துக்கள் நடந்துவந்தன. இப்போது அப்படியில்லாமல் பஞ்சாயத்துக்கள் தங்களுக்குள்ளேயே ஒன்ருக அமைத்துக்கொண்டு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலை மத்திய ஸ்தாபனமாக வைத்துக்கொண்டு அதனுடன் ஒத்துழைத்து தங்களுக்குள்ளாகவே காரியங்களைப் பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். அதே மாதிரி பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் பல ஒன்று சேர்ந்து ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சில் என்று வைத்து அதற்குள்ளாக இருந்து வேலை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அதற்கு கலெக்டர் தலைவராக இருந்து நடத்திக்கொண்டுவருகிருர்.

சுயபலம் பெற்ற ஸ்தாபனம்-பஞ்சாயத்து

இது இடைக்காலத்தில் ஏற்பட்ட ஒரு விஷயம் என்பது தெரியும். ஆகையால் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் ஸ்தாபனம் இப்போது நாடு முழுவதும் அமைந்துவிட்டது. ஒரு விஷயத்தை இங்கு விசாரித்து பரிசீலனை செய்து நான் தெரிந்துகொண்டேன். இந்த மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஒரு கலெக்டர் ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சிலுக்குத் தலைவராக இருக்கிருர். இந்த மாகாணத்தில் உத்தியோகஸ்தர்கள் மற்ற மாகாணங்களில் இருப்பது போல் இல்லாமல் மக்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களுடைய கஷ்டங்களைப் புரிந்து மக்களோடு ஒன்றி வேலை செய்யக்கூடியவர்களாக இருப்பதால் ஜில்லா கவுன்சிலுக்கு கலெக்டர் தலைவராக இருக்கிருர். மற்ற மாகாணங்களில் அப்படி நான் சொல்ல முடியாது. இங்கு அந்த முறையில் நடந்து வருவது தவறில்லை.

ஒவ்வொரு கிராமமும் ஒரு குடும்பம்

இப்போது 2,50,000 பஞ்சாயத்துக்கள் இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றன. அதே மாதிரி 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பஞ்சாயத்து யூனியன்கள் தேசம் பூராவும் இருக்கின்றன. இத்தனையும் ஒன்று சேர்ந்து வேலை செய்து ஒற்றுமையாக இருப்பதன் மூலம் நமது அஸ்திவாரம் பலப்பட்டு நாடு நன்ருக முன்னேற முடியும். இல்லையென்ருல் முன்காலத்தில் 550 சிற்றரசர்கள் தங்களுக்குள் ஒற்றுமையில்லாமல் இருந்து வெளிநாட்டானுக்கு நம்மை அடிமைப்படுத்திய நிலைமைக்குக் கொண்டு போய்விடும் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் செல்வம் கொழித்தது இந்த நாட்டிலே. அன்று உலகத்தில் ஏனைய நாடுகளையெல்லாம் கவர்ச்சி செய்து, அவர்கள் எல்லாம் இங்கு வந்து நம்மைப் பார்த்துப் போகும்படியான நிலைமையில் நாம் வளர்ந்திருந்தோம். அந்த 550 வெள்ளை யானைகள் இங்கு வந்து சிற்றரசர்களாக இருந்ததால், அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய ஜமீன்தார்கள், பாளையப்பட்டுகள், இம்மாதிரி பலருக்கு உணவு கொடுத்து அவர்களை வளர்த்ததன் மூலம் நாம் வறுமை அடைந்தோம். அதனல்தான் நாம் தரித்திரர்களானேம். இது நானூறு ஆண்டுகளுக்கு முன் நடந்துகொண்டிருந்தது. 550 சிற்றரசர்களும், அவர்களுக்குக் கீழே இருந்த பாளையப்பட்டுக்கள் போன்ற ஜமீன்தார்கள் போன்றவர்களுக்கும் ஏற்பட்ட நிலைமை அது என்ருல், நீங்கள் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இரண்டு லட்சத்து ஐம்பதினுயிரம் சிற்றரசர்கள் போன்று பஞ்சாயத்துத் தலைவர்கள் இருக்கிருர்கள். இவர்கள் அத்தனை பேரும் நாட்டுப் பற்றின்றி, தேசப் பற்று இன்றி, தான் ஒரு தனி ராஜா என்று நினைக்க ஆரம்பித்தால் நம் கதி என்னவாகும் என்பதை யோசிக்க வேண்டும். இந்த நாடு முழுவதுமுள்ள அத்தனை பஞ்சாயத்துத் தலைவர்களும் அப்படி நினைக்க ஆரம்பித்தால், முன்பு இந்த நாட்டுக்கு முன்பு ஏற்பட்ட அழிவைவிட மோசமான அழிவு ஏற்பட்டுவிடும். ஒவ்வொரு கிராமும் ஒரு குடும்பம். அந்தக் கிராமத்தில்

உள்ள மக்கள் எல்லோரும் அந்தக் குடும்பத்திலுள்ளவர்கள். பஞ்சாயத்துத் தலைவர்களும், உப-தலைவர்களும் அந்தக் குடும்பத்திற்குப் பெரியவர்கள். மூத்த சகோதரர் போன்றவர்கள். மூத்த சகோதரர் ஒரு குடும்பத்தை நிர்வகித்து வரும்போது தனக்கு என்று ஏதாவது கூலி பெற்றுக்கொள்ளுகிறாரா, இல்லை. குடும்பத்தில் பலவீனப்பட்ட இன்னொரு சகோதரர் இருந்தால் அவர்களுக்கு வேண்டிய சிகிச்சை செய்து வசதிகள் செய்து கொடுக்கிறார்கள். தங்களுக்கு இல்லாமல் இருந்தாலும் பரவாயில்லை. குடும்பத்தில் கஷ்டப்படுகிறவர்களுக்கு செய்யவேண்டுமென்ற எண்ணம் ஏற்படுகிறது. அதைப் போன்று, பஞ்சாயத்துத் தலைவர்களும் உப தலைவர்களும் தங்களுக்கு என்று எதையும் எண்ணாது கிராம மக்களின் நலனுக்கு தாங்கள் பொறுப்பானவர்கள் என்று ஊழியம் செய்கின்ற பரோபகார எண்ணத்துடன் நடந்துவந்தால்தான், அந்த மேற்சொன்ன அழிவிலிருந்து நாம் தப்ப முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொதுவாக நல்ல, குணமும் கெட்ட குணமும் தனிப்பட்ட ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. இராவணத் தன்மை, இராமத் தன்மை இரண்டும், ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. அவை இரண்டுக்கும் எப்போதும் போராட்டம் நடந்து கொண்டேயிருக்கிறது. இந்தப் போராட்டத்தில் இராவணத் தன்மை தலைகாட்டினால் கெட்ட குணம், ராஜஸத் தன்மை என்பார்கள். பிறரிடமிருந்து எதைக் கவருவது என்பதிலேயே அந்தக் குணம் இருந்துகொண்டிருக்கும். அதே நேரத்தில் இராமன் குணம் என்பது, தியாகம் செய்வதும், தன்னிடமுள்ள எதையும் பிறருக்குத் கொடுத்துவிடவும் தயாராக இருக்கும். இந்தப் போராட்டத்தில், பஞ்சாயத்து ராஜ்யம் என்ற புதிய சோதனையில் இராமன் தன்மை என்ற நல்ல குணம் வெற்றி பெற வேண்டும். பிறருக்கு உழைக்க வேண்டுமென்று நல்ல எண்ணம் மிகுந்து, பிறரிடமிருந்து கவரவேண்டுமென்ற கெட்ட எண்ணம் மறைந்தால்தான், இந்த நாட்டின் அறியாமை அகலும். நாடு முன்னேறும். அதற்கான வழி கோலப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லோர் மனத்திலும் இந்தப் போராட்டமுண்டு. என் மனதிலும் அந்தப் போராட்டம் நடந்துகொண்டு தான் இருக்கிறது. இந்தப் போராட்டத்தில் குறிப்பாகப் பஞ்சாயத்துத் தலைவர்கள், உபதலைவர்கள் மனதில் இப்போராட்டம் நடக்கும்போது இராவணத் தன்மையை அகற்றிவிட்டு, தியாக குணத்தோடு உழைப்பு சக்தியை முன்னர் வைத்து, பிரதிபிரயோஜனம் கருதாது வேலை செய்தால் நாடு முன்னேறும். மக்கள் முன்னேறுவதோடு, நாம் போட்டிருக்கிற திட்டங்கள் எல்லாம் வெற்றி பெற வாய்ப்பு ஏற்படும்.

ஒற்றுமை உணர்வு அவசியம் வேண்டும்

இந்தத் தேசத்தில் பல இடங்களிலும் நான் பார்த்த வரையில் ஒருவிஷயத்தைத் தெரிந்துகொண்டேன். எங்கு போனாலும் பஞ்சாயத்து யூனியன் சேர்மேனுக்கும் அதிலுள்ள சீப் எக்சிக்யூட்டிவ் ஆபீசருக்கும்—இங்கு பி.டி.ஓ. என்று சொல்லுகிறார்கள் அவர்களை—அவர்களுக்கும் தகராறு இல்லாமல் இருப்பது ரொம்ப அபூர்வமாக இருக்கிறது. தேசம் பூராவும் இப்படியே இருக்கிறது. நிறைக் குறைவாக இருக்கும் பி.டி.ஓ. குற்றத்திற்கு எல்லாம் காரணம் சேர்மன்தான் என்பதும், யூனியன் சரியாக நடக்காததற்குக் காரணம் கமிஷனர்தான் என்று சேர்மன் சொல்லுவதும் எங்கும் இருக்கிறது. இரண்டு பேருக்கும் ஒற்றுமை இல்லாமல் இருக்கிறது. சேர்மனாக இருப்பவர் அங்கத்தினர்களின் ஒத்துழைப்பைப் பெற்று மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றிருந்தால் அப்படி நடக்கவே நடக்காது. அப்படி எங்கும் நடப்பதில்லை. கவுன்சிலுக்குள்ளேயே பிரிவினை இருப்பதால்தான் இம்மாதிரி நடக்கிறார்கள். இவர்கள் அப்படியில்லாமல் ஒற்றுமையாக இருந்தால் இந்த நாட்டின் பிரதம மந்திரி அவர்களே மிகவும் பாராட்டுவார்கள். தங்களுக்குள்ளேயே அதிகாரத்தை வைத்துக்கொண்டு தங்கள் இஷ்டம்போல் செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்படுவதுதான் பிளவுக்குக் காரணம்.

மக்களுக்கு நன்மை செய்வதற்காக ஒரு இயந்திரம் தயாரிக்கப்பட்டு அதை கிராம மக்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இயந்திரம் நிலையாக இருந்து அபிவிருத்திக் காரியங்களைக் கவனிக்க வேண்டுமென்று இருக்கிறது. அந்த இயந்திரத்தின் ஒரு பாகம் தான் கமிஷனர். அந்த ஸ்தானம் நிலைத்து நின்று அபிவிருத்தி வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றவர்கள் ஐந்துவருஷங்களுக்கு ஒருவராக வருகின்றவர்கள். இயந்திரம் மட்டும் அதே இயந்திரம்தான். அதை வைத்துக் கொண்டுதான் வேலை நடக்கிறது. தேர்ந்தெடுத்து வருகிறவர்கள் ஒற்றுமையாக இருந்தால் நன்றாக வேலை செய்கிறது. ஒற்றுமை இல்லாமல் இருந்தால் அந்த இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லை.

உதாரணமாக ஒரு குடும்பத்தை எடுத்துக்கொள்ளுவோம். ஆண் பெண் இரண்டும் இருந்தால்தான் குடும்பம் நடைபெறும். ஆணுக்கு அதிக அதிகாரம் வேண்டும், பெண்ணுக்கு அதிகாரம் வேண்டுமென்று ஒருவருக்கொருவர் தகராறு செய்தால் அந்தக் குடும்பம் எப்படி இருக்கும்? குடும்பம் என்றால் தனித்திருந்து வாழ முடியாது. எவ்வளவோ பேர் தனியாக இருக்கிறார்கள் என்றால், அதைக் குடும்பம் என்று சொல்ல முடியாது. ஆணும், பெண்ணும் சமமென்று இந்த நாட்டில் சட்டமியற்றியிருக்கிறோம். ஆணுக்கோ, பெண்ணுக்கோ அதிகாரம் என்று சொல்ல முடியாது. இரண்டு பேரும் சமத்துவம் என்று கருதினால் தான் குடும்பம் திறமையாக நடக்கும். இதை உலகத்தில் பார்க்கிறோம். அதே மாதிரி பஞ்சாயத்து யூனியன் சேர்மேன் மற்ற அங்கத்தினர்களுடன் ஒற்றுமையாக இருந்தால் கமிஷனர் அவர்களுக்குக் கீழே உள்ள உத்தியோகஸ்தர்கள் கொண்ட இயந்திரம் நல்ல முறையில் வேலை செய்து வரும் என்பதில் சந்தேகம் இல்லை.

G. N.—4

ஒன்று மட்டும் எல்லோரும் நன்ருகப் புரிந்துகொள்ள வேண்டும். கொஞ்சம்கூட சந்தேகம் இல்லாமல் மனதில் இறுத்திக்கொள்ள வேண்டும். மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பொறுத்த வரையில் அங்கு நிர்வகித்து வரும் மந்திரி சபைதான் எல்லாவற்றிலும் உயர்ந்த எஜமானன். அதே போன்று மாகாணத்தைப் பொறுத்த வரையில் உத்தியோகஸ்தர்களைப் பொறுத்த வரையில் மாகாண மந்திரி சபைதான் அதற்கு எஜமானன். அதே மாதிரி கிராம அபிவிருத்தி வேலைகளைப் பொறுத்த வரையில் பஞ்சாயத்து யூனியன் உள்பட்ட காரியங்களுக்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்தான் எஜமானன் என்பதை மறந்துவிடக் கூடாது. எல்லோரும் இதை மனதில் கொள்ளவேண்டும். உதாரணமாக ஒரு பிளாக் பஞ்சாயத்துக் கவுன்சிலில் எத்தனை நாளைக்கு ஜீப்பை சேர்மென் வைத்துக்கொள்ள வேண்டும், எத்தனை நாளைக்கு கமிஷனர் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் போன்ற விஷயங்கள் எல்லாம் சின்ன பிரச்னைகள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த மாதிரி பிரச்னை வர இடமே கிடையாது.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் என்பது நாம் எல்லோரும் அந்தந்தப் பிராந்தியத்திலுள்ள மக்களுக்கு சேவை செய்வதற்காக ஏற்பட்ட ஒரு ஸ்தாபனம். அதற்கு உழைக்கக்கூடியவர்கள் நாம். கமிஷனராக இருந்தாலும், விஸ்தரிப்பு அதிகாரிகளாக இருந்தாலும், தலைவராக இருந்தாலும், உப தலைவராக இருந்தாலும் இத்தனை பேருக்கும் தனிப்பட்ட முறையில் சொந்த முறையில் அங்கே வேலை கிடையாது. இத்தனை பேரும் யூனியன் கவுன்சில் அங்கத்தினர்களாகவோ, ஊழியர்களாகவோ இருந்துகொண்டு அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல காரியம் செய்ய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது என்று எண்ணி நடந்தால், இந்த பிரச்னைக்கே இடமில்லை. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஒரு சொத்து என்று நினைத்தால் உடனே அதில் தலைவருக்கு என்ன பங்கு, உப தலைவருக்கு என்ன பங்கு, கமிஷனருக்கு என்ன பங்கு அதற்குப் பிறகு அங்கத்தினர்களுக்கு என்ன பங்கு என்று ஒவ்வொருவருக்கும் அதைப் பிரிக்க வேண்டுமென்ற எண்ணம் வந்துவிடும். அது இல்லாமல் எல்லோரும் சேவை செய்ய இதை ஒரு கேந்திரமாக வைத்துக்கொண்டு, அதன் மூலம் மக்களுக்கு நல்ல காரியம் செய்யவேண்டுமென்ற எண்ணம் உத்தியோகஸ்தர்களுக்கும் உத்தியோகப் பற்றற்றவர்களுக்கும் ஏற்படவேண்டும். சேவை மனப்பான்மை ஏற்பட்டால் இந்தப் பிரச்னைக்கே இடம் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பாரத நாட்டிற்கே வழிகாட்டி—தமிழ்நாடு

நண்பர்களே! அடுத்து முக்கியமான சில விஷயங்களைப் பற்றி உங்களிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்னை மாகாணம், இந்தத் தேசத்திற்கு ஏற்பட்ட பல முக்கிய பிரச்னைகளைத் தீர்த்துவைத்த மாகாணமாக இருந்துகொண்டிருக்கிறது. உதாரணமாக, மதிய உணவுத் திட்டத்தை இந்த தேசத்திற்கு அளித்து வழி காட்டி எல்லா மாகாணமும் அதை மேற்கொண்டு நடத்த வழி காண்பித்தவர்கள் நீங்கள்தான். இரண்டாவதாக, பெற்ருேர் சங்கம் என்று எல்லா இடங்களிலும் ஏற்படுத்தி ஆசிரியர்களுக்கு உதவி மிக உன்னதமான இயந்திரத்தை சிருஷ்டித்துக் கொடுத்து வளரும் கல்விக்கு வழி காட்டியதும் நீங்கள்தான். மூன்ருவதாக மக்கள் பெருக்கக் கட்டுப்பாட்டை நடத்தி வைக்க வேண்டுமென்று அகில இந்திய ரீதியில் தேசமெங்கும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள். இந்த மாகாணத்தில் நீங்கள் நினைப்பதைப் போன்று அல்லாது நான் எண்ணுவதைப் போன்று அவ்வளவு அதிகமாக செய்துவிடவில்லை என்ருலும், தேசத்தில் ஏனைய பகுதிகளைவிட நீங்கள் அதிகமாகச் சாதித்திருக்கிறீர்கள். அதேபோல் பஞ்சாயத்து விஷயத்திலும் நீங்கள் வழிகாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்தை திறம்பட நடத்துவது எப்படி ? பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் நிர்வாகத்தை நடத்துவது எப்படி என்பதை தேசத்தின் ஏனைய பகுதிகளுக்கு நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். அதே மாதிரி, பஞ்சாயத்தோ, பஞ்சாயத்து யூனியனே திறம்பட நடக்காமல், தவறு செய்தால், அந்தத் தவற்றைத் திருத்துவது எப்படி என்பதையும் சொல்லவேண்டும்.

நண்பர்களே! இந்தியாவின் கலாசாரத்தை, பண்பை, பாதுகாப்பதில் தென்னுடுதான் உயிர்க் கேந்திரமாக அமைந்திருக்கிறது. தென்னுட்டால்தான் பண்பையும், கலாசாரத்தையும், பாதுகாக்க முடிந்தது. அதே மாதிரி இந்தப் பஞ்சாயத்து ராஜ்யம் என்ற சிறந்த இயக்கத்தை நன்ருக வளர்த்து, இந்தியா பூராவும் அதைப் பேணிக் காக்க நீங்கள் வழி வகுக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

"கடிதக் கருத்தரங்கு"

பஞ்சாயத்து ஆட்சியின் மறுமலர்ச்சி

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

1962-ம் வருடம் மே மாதம் உதகையில் நடந்த பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டியில் கலந்து கொள்ளச் சென்றேன். உதகைக்கு நான் செல்வது இதுவே முதல் தடவையாகும். மேட்டுப்பாளையத்திலிருந்து ரயில் மூலமோ அல்லது பஸ் மூலமோ உதக மண்டலம் போய்ச் சேரலாம். மலைமேல் ரயிலில் நான் இதற்குமுன் பிரயாணம் செய்ததில்லையாதலால், ரயிலில் செல்வதை விரும்பினேன். மலைச் சிகரங்களுக்கிடையே ரயில் வளைந்து வளைந்து செல்வதும், அடர்ந்த கானல்கள் ஆழ்ந்த அருவிகள், காபி தேயிலைத்தோட்டங்கள், கமுகுத் தோப்புகள், தேயிலை பதனிடும் தொழிற்சாலைகள், அழகிய ஊர்கள் முதலியன கவர்ச்சிகரமான பல காட்சிகள், இப்படிக் கண்கொள்ளாக் காட்சிகளை அனுபவித்து கொண்டு என்போன்ற சில அங்கத்தினர்களும் நானும் மாலை 2-30 மணிக்கு "ஒத்தக மண்டு" ரயில் நிலையத்தைச் சேர்ந்தோம். எங்களைத் தங்கும் இடத்திற்கு அழைத்துச்செல்ல உதகைப்பஞ்சாயத்து யூனியன் கமிஷனரும் மற்றவர்களும் வந்திருந்தார்கள். சர்க்கார் "வான்" மூலம் "தமிழகம்" சென்றோம். இது ஜெயப்பூர் மகா ராஜாவின் பழைய "அரண்மூர்" அரண்மனை. இதைத் தமிழ்நாடு அரசாங்கத்தார் விலைக்கு வாங்கி ஒரு "சர்க்யூட் ஹெவுஸ்" ஆக வைத்திருக்கிறார்கள். அழகான இடத்தில் அழகாகக்கட்டி, அழகாக வைக்கப்பட்டிருக்கிற இந்த மாளிகையில் வசதியான பல அறைகள் உள்ளன. ஒரு அறையில் நாங்கள் 3 பேர் தங்க ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. தேவையான வசதிகளோடு இந்த அறை இருந்தது. எங்களுக்கு நல் உணவும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு

1962-ம் ஆண்டு மே மாதம் 10-ந் தேதி மாலை 2-30 மணிக்குப் பஞ்சாயத்து நிர்வாகம் சம்பந்தமான பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக்கமிட்டியின் முதலாவது கூட்டம் ஆரம்பமாயிற்று. இது ஒரு முக்கியமான மாநில அளவில் இயங்குகிற கமிட்டியாகும். முதல் அமைச்சர் இந்தக் கமிட்டிக்கு சேர்மன். இதர அரசாங்க மந்திரிகள் அனைவரும், 21 பஞ்சாயத்து அபிவிருத்திக் கௌன்சிலின் பொது வேலைக்கமிட்டி சேர்மன்களும், 12 மாவட்ட கலெக்டர்களும், பிரதம காரியதரிசியும், மற்றும் பல அரசாங்க காரியதரிசிகளும், ரெவின்யூ போர்டு மெம்பர்களும், உயர்தர அரசாங்க அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். இந்தக்கமிட்டிக்கு கிராம அபிவிருத்திக் கமிஷனர் காரிய தரிசி. மொத்தம் 49 பேர் கொண்டது இக்கமிட்டி.

"தமிழ்நாடு தலைசிறந்து விளங்கவேண்டும்"....

தமிழ்நாடு கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி அவர்கள் துவக்க உரையுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. கவர்னர் அவர்கள் தமது உரையில் "இதுவரையில் முழு அதிகாரங்களுடன் செயல்புரிந்த பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள் இனி ஆலோசனை கூறும் நிலையில் இருப்பார்கள். முடிவு செய்யும் பொறுப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இருக்கும். மேலும், அதிகாரிகளின் ஆலோசனைகளை நிராகரிக்கும் உரிமை பஞ்சாயத்து மெம்பர்களுக்கு இருக்கும். ஆகவே நிர்வாக அதிகாரிகள் புது நிலைமையை உணர்ந்து அதிகம் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும். அதே போல் பஞ்சாயத்து மெம்பர்கள் கட்சி அல்லது வகுப்பு போன்ற எண்ணங்களால் தூண்டப் படாமல் பாரபட்சமற்ற நிலையில் நடந்து கொள்வது நலம்.

சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் மூலமாகக் கிராமங்களில் பல திட்டங்களை நிறை வேற்றுவதில் கிராம வாசிகள் சம்பந்தப்பட்டிருப்பது முன்னேற்றத்துக்கான குறிப்பிடத்தக்க அம்சம். ஜனநாயகத்தைப் பரப்பும் கொள்கையையொட்டி, அந்நிய ஆட்சியில் மறைந்து போன பஞ்சாயத்து ஆட்சிக்குப் புத்துயிர் அளிப்பது சர்க்காரின் முக்கிய வேலையாக அமைந்து இருக்கிறது.

பஞ்சாயத்து ஆட்சியின் வெற்றி நிர்வாக அதிகாரிகளும் பஞ்சாயத்து மெம்பர்களும் திறமையுடனும் கௌரவ நாணயத்துடனும் பாரபட்சமின்றிச் செயல்படுவதைப் பொறுத்திருக்கிறது. ஜனநாயகத்தைப் பரவலாக்கும் இப்புது முயற்சியை வெற்றிகரமாக நடத்த பஞ்சாயத்து அதிகாரிகளும் மெம்பர்களும் சம நிலையில் பங்காளிகளாகச் செயலாற்ற வேண்டும். நிர்வாகத்தில் நல்ல பெயர் வாங்கியுள்ள இந்த ராஜ்யம் பஞ்சாயத்து ஆட்சி நிர்வாகத்திலும் தலைசிறந்து விளங்கவேண்டும்" என்று கூறினர்.

கவர்னர் அவர்கள் உரைக்குப்பின் கமிட்டியின் நோக்கத்தைப் பற்றி பிரதம காரியதரிசி விளக்கினார்கள். கிராம வேலைத்திட்டத்தில் குடி தண்ணீர் வசதி செய்தல், ரோடு போடுதல், பள்ளிக்கூடம் கட்டுதல் முதலியவைகளுக்குத்தான் தற்சமயம் இடமளிக்கப்பட்டுள்ளது. வேறு வேலைகள் செய்ய வேண்டுமா ? அப்படியானால் என்ன காரணத்திற்காக ? பஞ்சாயத்து மூலம் இந்த வேலைகளைச் செய்வதில் உள்ள நன்மை தீமைகள் அங்கத்தினர்களுக்குள்ள அனுபவம் இவைகளை விளக்கிக் கூறுமாறு காரியதரிசி கூறினார். முறைப்படி ஒவ்வொரு மாவட்டத்தின் அங்கத்தினர்கள் சொல்லி முடித்தபின், அந்த மாவட்ட கலெக்டர்கள் பதில் கூறி, தங்கள் கருத்துக்களையும் சொன்னார்கள். அவசியமேற்பட்டபோது, முதலமைச்சரும், பிரதம காரியதரிசியும் மற்ற மந்திரிகளும் குறுக்குக் கேள்விகள் கேட்டு விளக்கம் கோரினார்கள்.

பல மெம்பர்களும் பல அபிப்பிராயங்களை எடுத்துச் சொன்னார்கள். மதுரை தெற்கு மாவட்ட அங்கத்தினர் திரு எ. எம். நல்லதம்பி கிராமங்களில் ஊரணிகள் அவசியமானது என்று கூறினார். கிராம வேலைத்திட்டத்தில் ஊரணிகள் வெட்டுவதற்கும் சாக்கடைகள் கட்டுவதற்கும் அனுமதி தேவை என்று வற்புறுத்தினர். மன மகிழ் மன்றம், பஞ்சாயத்து ஆபீஸ் கட்டுவதற்கு சகாயத் தொகை வேண்டுமென்று கூறினார். திருச்சி வடக்கு மாவட்ட அங்கத்தினர் திரு. எஸ். வரதராசன், பி.எ., பி. எல்., பள்ளிகளுக்குப் பாடப்புத்தகங்கள் செலக்ஷன் செய்வது பெரிய உபத்திரமாக இருக்கிறதென்றும் ஜில்லா அபிவிருத்தி கூட்டத்தில் இதை செய்து விட்டால் நலமென்றும் பல டிபார்ட்டுமெண்ட்டுகளால் செய்யப்படும் சிறு நீர்ப்பாசன வேலைகளை சம்பந்தப்பட்ட யூனியனைக் கலந்து செய்ய வேண்டுமென்றும் இந்த வேலைகளை பஞ்சாயத்து மூலம் செய்யாமல் ஆயகட்டுக்காரர்கள் மூலம் செய்தால் நல்லது என்றும் பள்ளி மதிய உணவு விஷயத்தில் பூரண அதிகாரம் யூனியனுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும், முக்கியமாக குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் அதிகாரம் யூனியனிடம் இருக்க வேண்டும் என்றும் சொன்னார். கிராம வேலைத் திட்டத்தில் பிரசவ விடுதிகள் கட்ட சகாயத்தொகை வேண்டும் என்று கலெக்டர் திரு. இ. சி. பி. பிரபாகர் அவர்கள் கூறினார். செங்கல்பட்டு மெம்பர் திரு. கே. சமலக் கண்ணன் பல புது ரோடுகள் அமைக்கப்படுகின்றன, ஆனால், சரியான நிலையில் பராமரிக்கப்படாமல் இருப்பது வருந்தத்தக்கது. இதை கவனிக்க வேண்டும் என்று சொன்னார். உதகை மெம்பர் திரு. எம். கெ. நஞ்சா கவுடர், நீலகிரி ஜில்லாவில் ரோடு வேலைகளுக்கு அதிக சகாயத்தொகை கொடுக்கவேண்டும். குடி தண்ணீர் வேலைகளுக்கு சர்க்கார் மானியம் போதாது. மலை ஜில்லாவாகிய நீலகிரிக்கு ஸ்பெஷல் சலுகைகள் வேண்டும் என்று வற்புறுத்தினர்.

பஞ்சாயத்து ஆட்சி வளர பயனுள்ள கருத்துக்கள் . . . .

" மதுரை மாவட்டத்தில் ஆத்தூர் பிர்க்காவில்தான் வட்டார வளர்ச்சித் திட்டம் முதலாவது துவக்கப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டது. வடக்கு மதுரையில் பஞ்சாயத்து யூனியன்பரிட்சார்த்தகமாக முதலில் ஏற்படுத்தப்பட்டது. இதுவும் நல்ல பலனளித்தது. பின்ன தமிழ்நாடு முழுவதிலும் பஞ்சாயத்து ராஜ்யம் அமுலுக்கு வந்தது. இந்த பெருமை எங்களுக்கு உண்டு. கிராமங்களில் உண்மையாகவே சுயராஜ்யத்தின் பலனை நாங்கள் இப்பொழுதுதான் உணருகின்றோம். காந்திஜி சொன்ன கிராம ராஜ்யம் இப்பொழுதுதான் எங்களுக்கு கிடைத்து இருக்கிறது என்று ஜனங்கள் மகிழ்ச்சி கொண்டுள்ளனர். கிராமங்களில் புதிய தண்ணீர் கேணிகள் மேல் நிலை தண்ணீர் தொட்டிகள் ரோடுகள், பள்ளிகள் நிறுவப்படுவதை மக்கள் பெரிதும் நன்றியோடு பாராட்டுகிறார்கள். இந்த மூன்று முக்கிய வேலைகளோடு, மேல் நிலை தண்ணீர்தொட்டிகள் உள்ள இடங்களிலாவது ஜல தாரை கக்கூஸ் கட்டுவதர்க்கு நிதியும், பஞ்சாயத்து ஆபீஸ் அல்லது பொழுதுபோக்கு மன்றம் கட்ட ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் சகாயத்தொகையும் கலெக்டர் கூறியபடி பிரசவ ஆஸ்பத்திரி கட்ட நிதியும் கொடுக்கலாம். நீலகிரி மெம்பர் கூறியது மலைப் பிரதேசங்கள் எல்லாவற்றிற்கும் குறிப்பாக நீலகிரி மாதிரி உள்ள கொடைக்கானலுக்கும் பொருந்தும். பள்ளிகள் கட்ட மேலும் பணம் வேண்டும். தற்சமயம் 100 பிள்ளைகள் படிக்க வசதியுள்ள கட்டிடம் கட்ட சுமார் 9,500 ரூபாய் ஆகிறது. ஆனால், 4,000 ரூபாய் தான் சர்க்காரிலிருந்து கிடைக்கிறது. இதனால்தான் பள்ளிகள் கட்ட அதிகமாக ஒருவரும் முன் வருவதில்லை. மேலும் தனியார் பள்ளிகள் கட்ட பஞ்சாயத்திலிருந்து சகாயத்தொகை கொடுக்க இயலாதபடியால் தனியார் பள்ளி மானேஜர்கள் கட்ட முடியவில்லை. கிறிஸ்தவ மிஷின்கள் மாதிரியுள்ள ஸ்தாபனங்கள் மூலம் நடக்கும் பள்ளிகளை விட்டுவிட்டு, தனியார் பள்ளிகளை யூனியனில் எடுத்துக்கொண்டால் பள்ளிகள் கட்ட பஞ்சாயத்து சகாயத்தொகை கொடுத்து அதிகமாக பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டலாம். சாலை விஷயத்தில் ரூபாய் 40,000 (ரூபாய் நாற்பதினாயிரம்) வரை ஒரு கிராம ரோடு சிறிய பாலம் கட்டி அமைக்க வாய்ப்பு இருக்கிறது. அதைக்காட்டிலும் முக்கியமான யூனியன் ரோட்டிலோ அல்லது புதிதாக எடுத்துக்கொள்ளப்பட்ட பஸ் போகும் ஹைவேஸ் ரோட்டிலோ அம்மாதிரி ஒரு பாலம் கட்ட வாய்ப்பு இல்லை என்பது கவனிக்கவேண்டிய விஷயம். யூனியன் ரோடு ஹைவேஸ்ரோடுகளின் ஒருபாலம் கட்ட ரூபாய் 40,000 வரை செலவு செய்ய சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். சில பஞ்சாயத்துக்கள் ரூபாய் 1,000 கூட வருமானம் இல்லாது இருக்கின்றன. சில பஞ்சாயத்துக்கள் இருபதினாயிரம் அல்லது இருபத்தைந்தாயிரம் வருமானமுள்ளதாக இருக்கின்றன. எல்லா பஞ்சாயத்துகளும் சமமான வருமானம் உள்ளதாயும் சமமான ஜனத்தொகையும் இருந்தால் வசதிகளை சமமாக அடைவார்கள். பணமில்லாத பஞ்சாயத்துக்களுக்கு யூனியனிலிருந்து அட்வான்ஸ் தான் கிடைக்கிறது. இது பிரயோஜனம் இல்லை. அரசாங்கத்திலிருந்து கடன் எதிர்பார்பதற்கில்லை. கிராமத்தார்கள் பஞ்சாயத்துக்கு டிபாசிட்டாக பணம் கொடுத்தால் பெற்றுக்கொள்ள அனுமதி வேண்டும். லிஸ்டெட் ரோடு

நிதி ஒதுக்கி உள்ளதை இந்த வருஷமாவது அங்கீகரிக்க வேண்டும். இருபத்து மூன்று நீர்பாசனங்களுக்கு எங்கள் யூனியனில் ரூபாய் 150 ஒதுக்கியுள்ளது. இது மிகவும் குறைவு. இதை வைத்து என்ன மராமத்து செய்ய முடியும். பஞ்சாயத்துக்கள்மூலம் வேலை செய்வதுதான் நல்லது. வருஷா வருஷம் ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் எங்கள் பஞ்சாயத்து மூலம் வேலை செய்கிறோம். பஞ்சாயத்தில் கணக்கு வைப்பது கஷ்டம். அதனால் சப் காண்ட்ராக்ட் விட்டு விடுகிறோம்" என்று நான் சொல்லியது மற்றவர்களை கவர்ந்தது.

அடுத்த நாள் கூட்டம் காலை 9·30 மணிக்கு ஆரம்பமாயிற்று. பிரதம காரியதரிசி கிராம வேலைத்திட்டம் நிதியிலிருந்து ரூபாய் 40,000 வரையில் ஒரு யூனியன் ரோட்டிற்குச் செலவு செய்ய அனுமதி வழங்கினர். கிராம பஞ்சாயத்துக்கள் டிபாசிட் வாங்கிக்கொள்ள அனுமதி அளிப்பதாகவும், லிஸ்டெட் ரோடுகளுக்கு அனுமதி வழங்கப்படுமென்றும் சொன்னர். பஞ்சாயத்து யூனியனில் ஜனத்தொகை அடிப்படையில் பிரதி நிதித்துவம் இருக்க வேண்டும் என்று முதல் அமைச்சர் சொன்னர். முதல் நாள் நடவடிக்கை போலவே கருத்துகள் பறிமாறிக் கொள்ளப்பட்டன. கூட்டம் சுமார் 3 மணி நேரம் நடந்தது. அன்று மாலையில் கவர்னர் எங்களுக்கு ஒரு தேனீர் விருந்து ராஜபவனத்தில் கொடுத்தார்.

மூன்ருவது நாள் காலை 9-30 மணிக்குக்கமிட்டிக் கூட்டம் ஆரம்பமாயிற்று. ஜில்லா அபிவிருத்திக் கமிட்டிக்கூட்டங்கள், தாலுகா (Staff) மீட்டிங்குகள் கிராம உத்தியோகஸ்தர்களின் வேலைகள் பஞ்சாயத்து கூட்டங்கள் பற் பற்றிய விவாதம் நடந்தது. இந்த கடைசிக்கூட்டம் பிரதம காரியதரிசியின் நன்றி உரையோடும், எங்கள் சார்பில் திரு. எம். குமாரசாமி நன்றி உரையோடும் முடிவடைந்தது.

அன்று மாலை நாங்கள் குந்தா மின்சார திட்ட வேலையை பார்க்கச்சென்ருேம். மலைச்சிகரங்களுக்கு இடையே பல அழகிய காட்சிகளை கண்டு களித்துக்கொண்டு குந்தாவை அடைந்தோம். அவலாஞ்சி, குந்தா ஏரிகள் அணைக்கட்டுகள் முதலியவைகளும் பல மலை ரோடுகளும் மனிதனின் அறிவையும் முயற்சியையும் திறமையையும் விளக்குபவையாயிருந்தன.

மனித முயற்சியின் மகத்தான சாதனை

அன்று மாலை குந்தாவை கண்டு களித்தோம். மனிதனின் அறிவுக்கும் திறமைக்கும் சக்திக்கும் ஓர் எடுத்துக்காட்டு இந்த குந்தா மின்சாரத்திட்டம். பல மலை ரோடுகளும் அணைக்கட்டுகளும் கீழே இருக்கும் மின்சார நிலையத்தையும் (Power House) பார்த்தோம். மின்சார நிலையத்தின் செயல் முறையை எங்களுக்கு விளக்கப்பட்டது. ஆனல் எங்களுக்கு புரியத்தான் இல்லை. பாரதியார் சொல்வது போல் தெய்வம் மனிதனின் அறிவிலும் உழைப்பிலும், சக்தியிலும் தான் இருக்கிறதென்பதை கண்கூடாகப்பார்த்துப் பரவசம் அடைந்தோம். நமது பிரதமர் நேருஜி இந்த மாபெரும் வேலைத்திட்டத்தை ஒரு தொழிலாளியைக்கொண்டு துவக்கிவைத்ததில் 'எவ்வளவு பொருள் புதைந்து இருக்கிறது என்று சிந்தித்தோம். கனடா தேசத்தினர் உதவியாக 12 கோடி ரூபாய் கொடுத்தார்கள். மொத்தம் இந்த நிர்மாண வேலைக்கு 60 கோடி ரூபாய் செலவு ஆகும் என்றும் மேலும் பல திட்டங்கள் பரிசீலனையில் இருக்கிறது என்றும் சொன்னர்கள். இந்தப்பஞ்சாயத்து யூனியன் கமிஷனரும் நண்பர்களும் எங்களுக்கு சிற்றுண்டி வழங்கினர்கள். பிறகு அவர்களிடம் விடைபெற்று சுமார் 6 மணி அளவில் உதகை புறப்பட்டு வந்தோம். இருளில் ஆங்காங்கே மின் விளக்குகளின் காட்சிகளும் ஊர்களும், மலைச்சிகரங்களும் உருளைக்கிழங்கு தேயிலை தோட்டங்களும், அடர்ந்த கானல்களும், அருவிகளும் இந்த அழகிய காட்சிகளிடையே மனிதனின் சாமார்த்தியமான பல சாதனைகள் பற்றிய சிந்தனைகளும் வெகு சீக்கிரத்தில் எங்களை உதகைக்கு வந்து சேரும்படி செய்தன. பிரயோஜனம் இல்லாமல் வீணய் போய்க் கொண்டிருந்த நீரை மிகவும் உபயோகமானதாக மனிதன் பயன்படுத்தியிருக்கும் இந்த திட்டமானது ஒரு மாபெரும் சாதனை. நேரில் பார்த்தால் தான் இதன் பெருமையை சற்ருவது உணரலாம். மறுநாள் பைக்காராவிற்குச் செல்ல ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனல், நாங்கள் அதிக நாள் உதகையில் இருந்துவிட்டபடியால் அவரவர் ஊர்களுக்கு திரும்ப விரும்பியதாலும், இந்த யாத்திரை கைவிடப்பட்டது.

உதகைப் பயணத்தை முடித்துக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தேன். நல்ல பயனுள்ள யாத்திரை. பஞ்சாயத்து ராஜ்யம் வளர்க !

அன்புள்ள,

ஆர். திருமலைசாமி,
தலைவர், ரெட்டியார் சத்திரம்
பஞ்சாயத்து யூனியன்.

சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்

திரு சொ. சந்தானம்

[கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள அரியப்பம்பாளையம் பஞ்சாயத்தும், கிராம மக்களும் கூட்டாக நின்று செய்துள்ள பணிகளை விவரிக்கிறது இக்கட்டுரை. —ஆசிரியர்.]

அரிய உழைப்பால் ஆற்றிய பணிகள்

கிராம வளர்ச்சிப் பணிகளில் அரிய செயல்களைச் செய்திருக்கிறது **அரியப்பம் பாளையம் பஞ்சாயத்து.** கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலத்திலிருந்து ஈரோடு செல்லும் நெடுஞ்சாலையில் 1½ மைலில் அமைந்துள்ளது இப்பஞ்சாயத்து. உழைப்பின் மேன்மையில் ஊறித்திளைத்துள்ள கோவை மாவட்டத்தின்கண் வாழும் மக்களின் சிறந்த பண்புக்கும், அயராத உழைப்புக்கும், கூட்டு முயற்சிக்கும் உதாரணமாக விளங்குகிறது இப்பஞ்சாயத்து. கூட்டுறவுவே நாட்டின் நல்வாழ்வுக்கு அடிப்படை என்ற கொள்கையை லட்சியமாகக் கொண்டு, ஊரை உயர்த்தும் உன்னதப் பணியில் பெரியவர்களும், இளைஞர்களும் ஒன்றுபட்டு உழைத்து வருகின்றனர். இவ்வூர் பஞ்சாயத்து பகை இல்லாது ஆக்க வேலைகளுக்கு ஊக்கமளித்து வருகிறது. கிராம வளர்ச்சிப் பணிகளில் அரசாங்கத்தின் திட்டங்களைத் தன்னால் இயன்ற அளவு முயற்சி செய்து நிறைவேற்றியும் இன்னும் பல திட்டங்களை நிறைவேற்றும் பணிகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

விவசாயத் துறையிலே விருது பெற்ற சாதனைகள்

அரியப்பம்பாளையம் பஞ்சாயத்து ஒன்பது கிராமங்களைக் கொண்டது. இப் பஞ்சாயத்து 1930-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் தொகை புதிய கணக்கின்படி 5,625-தான். எல்லாக் கிராமங்களும் மூன்று மைல் சுற்றளவுக்குள் அடங்கி யிருக்கின்றன. விவசாயத் துறையில் இக் கிராமங்கள் நவீன சாகுபடி முறைகளின் மூலம் பெரிதும் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. இப் பஞ்சாயத்தில் விவசாயம் செய்யப்படுகிற நிலம் நஞ்சை 3,065 ஏக்கர்களும், புஞ்சை 1,521 ஏக்கர்களும் ஆகும், சாகுபடிக்கு இயலாத பரப்பு 196·93 ஏக்கர்கள் ஆகும். இங்குள்ள பெரும்பாலான நிலங்களும் இக் கிராமங்களின் மக்களுக்கே சொந்தமாக இருக்கின்றன. இப் பஞ்சாயத்தில் மொத்தம் 1,352 குடும்பங்கள் உள்ளன. நல்ல உழைப்புத் திறன் படைத்த மக்களும், ஆக்க வேலைகளில் ஊக்குவிக்க பஞ்சாயத்தும் வட்டார வளர்ச்சி அலுவலகப் பணியாளர்களின் சீரிய ஒத்துழைப்பும் ஒன்று சேர, இக் கிராமங்களின் தேவைக்குமேல் உற்பத்தி செய்து ஊரின் பொருளாதாரத்தை உயர்த்தியிருக்கிறார்கள். கிராமங்களில் ஏராளமான நல்ல தழை அளிக்கும் மரங்களை நட்டு இருக்கிறார்கள். பெரும்பாலோர் பசுந்தாள் உரத்தையே போட்டு விளைவு கண்டு வருகின்றனர். இங்கு பாதிக்கு மேற்பட்ட நஞ்சை நிலங்களில் ஜப்பான் முறை சாகுபடி மூலம் நெல் விளைச்சலில் அதிக மகசூல் கண்டு வருகின்றனர். அரியப்பம்பாளையத்தைச் சேர்ந்த திரு. ஏ. கே. காசிக் கவுண்டர் என்பவர் சென்ற ஆண்டில் ஏக்கருக்கு 7,160 பவுண்டு நெல் (6 நெ. T. K. M 6) ஜப்பான் முறை மூலம் விளைவைப் பெருக்கி கோபி தாலுகா பரிசும், பிர்க்கா பரிசும் பெற்ற பெருமைக்குரியவர். இங்கு 'லோயர் பவானி' அணைக்கட்டின் மூலமும், கிணற்றுப் பாசனங்களின் மூலமும் தண்ணீர் தட்டுப்பாடே இல்லாமல் இருக்கிறது. லோயர் பவானி அணைக்கட்டின் மூலம் இங்குள்ள புஞ்சை நிலங்களெல்லாம் நல்ல நஞ்சை வயல்களாகக் காட்சியளிக்கின்றன. விவசாயத்திற்கு பயன் இல்லாமல் வீணாக ஓடிக்கொண்டிருந்த ஓடைத் தண்ணீரை, பொது மக்கள் கூட்டாக முயற்சி எடுத்துத் தடுத்து நிறுத்தி சுமார் 60 ஏக்கர்கள் பாசன வசதி யளிக்கும் வகையில் சீர்திருத்தி இருக்கிறார்கள். இம்மாதிரி கூட்டு முயற்சியின்றி நாட்டில் எவ்வளவோ ஓடைகளில் தண்ணீர் வீணாக ஓடிக்கொண்டிருக்கிறது என்றால் மிகையாகாது.

சுகாதாரமே சுகத்திற்கு ஆதாரம்

அரியப்பம்பாளையத்தில் ஹரிஜனக் குடிகளுக்காக ரூ. 2,200 செலவில் ஒரு பொது கக்கூஸ் கட்டியிருக்கிறார்கள். வட்டார வளர்ச்சித் துறையின் உதவியுடன் இப்

(20-ம் பக்கம் பார்க்க)

ஆரம்பக் கல்வி—தொடர் கட்டுரை 2 :

புதிய பஞ்சாயத்து ஆட்சியில்

கல்வி வளர்ச்சி

சுத்தம்

பள்ளிக்கூடத்தின் தோற்றம் கவர்ச்சிகரமாகவும், சுற்றுப்புறம் வனப்பு மிக்கதாயும் அமைவது நல்லது என்று முதல் கட்டுரையில் பார்த்தோம்.

பள்ளிக்கூடத்தின் வெளிப்புறம் மட்டுமன்றி, உட்புறமும் சுத்தமாக இருத்தல் அவசியமாகும்.

கட்டடத்தை சுத்தமாக வைப்பது, பிள்ளைகள் சுத்தமாக இருப்பது, ஆசிரியர்கள் நல்லவண்ணமாய் இருப்பது யாவும் கவனிக்கற்பாலது.

கட்டடம் என்று எடுத்துக்கொண்டால், தரை, சுவர், கூரை யாவும் சுத்தமாய் இருக்க வேண்டும்.

தரையை தினமும் பெருக்க வேண்டும். தினமும் சேரும் குப்பை கூளத்தைப் போட தோட்டத்தின் ஒரு மூலையில் எருக்குழி இருக்க வேண்டும். அதில் குப்பை கூளத்தைக் கொட்டிவரச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். காலையில் பள்ளிக்கூடத்தை பெருக்கிவிடுவது மட்டும் போதாது. அதனால் நாள் முழுவதும் தரை சுத்தமாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. காகிதத் துண்டுகள், மணிலாக் கொட்டை தொலும்பு முதலியவை தரையில் அடிக்கடி காணப்படுவதுண்டு. சில நல்ல பழக்க வழக்கங்களை பிள்ளைகள் கையாளாததே அதற்குக் காரணமாகும். பிள்ளைகளுக்கு நல்ல பழக்கம் ஏற்பட்டால்தான், தரை எப்பொழுதும் சுத்தமாயிருக்கும்.

ஏதேனும் காகிதத்தைக் கிழித்தால் அப்படியே கண்ட கண்ட இடத்தில் போடும் பழக்கம் நம்மவர் பலருக்கு உண்டு. இதைப்பற்றி பிற நாட்டார் கையாளும் பழக்கத்தை அறிந்துகொள்வது நலம். ஜப்பானைப் பற்றி கதை கதையாகச் சொல்கிறார்கள். தெருக்கதவுக்கு அருகே குப்பை போடும் தொட்டி வீட்டினுட்புறம் இருக்குமாம். கிழிந்த காகிதம் தெருவில் கிடந்தால் அதை எடுத்து பையில் போட்டுக்கொள்வான் ஜப்பான்காரன். வெளி வேலை முடிந்து வீடு திரும்புங்கால் வீட்டினுள் நுழையும்போதே குப்பைத் தொட்டியில் தன் பைக்குள் கசக்கிப் போட்ட காகிதக் கிழிச்சல்களை போட்டுவிடுவான். "குப்பையே மாணிக்கம்" "குப்பையே கோடி தனம்" என்னும் புதை பொருளை அன்றாட பழக்க வழக்கத்தில் நாம் நினைவில் வைப்பதில்லை. ஆனால் ஜப்பான்காரன் அன்றாட வாழ்க்கையில் இதை நினைவில் வைத்து இருக்கிறான்.

காகிதத் துண்டோ மணிலாத் தொலும்போ எங்காவது ஒன்று கீழே கிடந்தால் கூட அது கண்ணை உறுத்த வேண்டும். அதை உடனே எடுத்து குப்பைத் தொட்டியில் போடும் பழக்கம் வரவேண்டும். சிறுகச் சிறுகச் சொல்லி, நெடுநாள் சொல்லி, அடிக்கடி சொல்லி, இப்பழக்கத்தை சிறுவரிடம் ஏற்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு துணுக்கு காகிதத்தைப் போடுவதற்கும் ஒரு முறை எருக்குழிவரை போவது நடவாத காரியம். ஆகையால் பள்ளிக்கூடத்திலேயே குப்பை போட ஒரு குப்பை போடும் கூடை அல்லது தகர டப்பா போன்றவை, வைக்க வேண்டும். அது வைக்கப்படும் இடத்திற்கு மேலே "இங்கே குப்பை போடு" என்று எழுதி மாட்டலாம். கூடையோ தகரமோ கிடைக்காவிட்டால் ஒரு அட்டையை ஒரு மூலையில் இரு சுவர்களை அடைக்கும் வகையில் வைத்துவிட்டால் போதும். கூடை மாதிரி அமைந்துவிடும் எந்த கிழிசல் காகிதத்தையும் தொலும்பையும் பிள்ளைகள் இந்த குப்பைக் கூடையிலேயே போடப் பழக்க வேண்டும்.

தரை மண் தரையானால் வாரம் ஒரு முறை சாணம் போட்டு மெழுக வேண்டும். தரை கல் தரையாயிருந்தால் வாரம் ஒரு முறை தண்ணீர் விட்டுக் கழுவுவது நல்லது.

சுவர்களில் படங்களை ஒட்டி அவற்றின் மீது தூசு, தும்பு, ஒட்டடை படியும்படி விடுவது நல்லதல்ல. படங்கள் கிழிந்து தொங்கிக்கொண்டிருப்பதும் நல்லதல்ல. எதற்காக இந்த படம் இருக்கிறது என்று சொல்லக்கூடாத வகையில் பல படங்களை குவித்து வைத்திருப்பது சரியாகாது. பிள்ளைகளுக்கு பாடம் கற்பிக்க உதவும் படங்கள் மிகச் சிறந்தவை. அவற்றை எப்பொழுதும் மாட்டி வைத்திருப்பதற்குப் பதில் தேவையானபோது எடுத்து மாட்டுவதும் கற்பிக்கையில் உபயோகிப்பதும் நல்லது.

சில பள்ளிகளில் சுவர்களில் பழமொழிகள், அறிவுரைகள் என்று எழுதுகின்றனர். கருத்து ஒருபுறமிருக்க, எழுத்துக்கள் அழகாக இல்லாமல் மேலும், கீழுமாக, கோணல் மாணலாக இருக்கின்றன. பார்க்க விகாரமாய் இருக்கிறது. எழுதினால், நன்றாக எழுத வேண்டும்.

படங்களை அடிப்பதில்கூட சேர்ந்தாற்போல் ஒரே வரிசையில் எல்லாப் படங்களையும் ஒரே இடத்தில் மாட்டுவதற்குப் பதில், இடம் விட்டு, இங்கு ஒன்று, அங்கு ஒன்றாக ஒரே உயரத்தில் நாற்புறமும் மாட்டுவது அழகாயிருக்கும்.

ஆண்டுக்கொரு முறை கட்டடத்திற்கு சுண்ணும்பு அடிப்பது நல்லது. வாடகை வாங்குவோர் எல்லோரும் இதை ஒழுங்காக செய்வார்கள் என்று சொல்ல முடியாது. ஆசிரியர் முயற்சி எடுத்து செய்யச் செய்ய வேண்டும்.

அடுத்தபடி கூரை சுத்தமாயிருக்க வேண்டும். ஒட்டடை இங்கும் அங்கும் தொங்குவதும் மூலைமுடுக்குகளில் சிலந்தி கூடு கட்டுவதும் நல்லதல்ல.

வாரத்திற்கொரு முறை சுத்தமாக இவற்றைக் களைதல் நலம்.

பிள்ளைகள் சுத்தம் இரு வகைத்து { (1) உடை. (2) உடல்.

“ கந்தையானுலும் கசக்கிக் கட்டு ”, “ கூழானுலும் குளித்துக்குடி ” என்பது பழமொழி. துணிகளை வீட்டில் துவைத்து உலர்த்தி தூய்மையாகக் கட்ட நாள்தோறும் சொல்ல வேண்டும். உடல் சுத்தம் என்றுல், தலை, கை, கால், நகம், முதலியவை சுத்தமாயிருத்தல் வேண்டும். ஒரு வாளி தண்ணீர் வைத்து பள்ளிக்கூடம் தொடங்கு முன்பே, வகுப்புத் தலைவனே, சுத்தக் குழுத் தலைவனே, மேற்பார்வை செய்து துப்புரவாயில்லாத பிள்ளைகளை அழுக்குப் போக கைகால்களைத் தேய்த்துக் கழுவச் செய்ய வேண்டும். சீப்பு, கண்ணுடி, சோப்பு, பள்ளியில் இருப்பது நல்லது. தலையை நன்கு வாரச் செய்ய வேண்டும். பெண்களுக்காவது உதவ பிந்து, குங்குமம் கூட வைக்கலாம். பிள்ளையைப் பெற்ற தாயோ, தந்தையோ தலை சீவாமலும், அழுக்குக் கை கால்களுடன் பள்ளிக்குச் சென்ற தம் குழந்தைகள் பொலிவுடனும், எழிலுடனும் பள்ளியிலிருந்து திரும்புவதைக் காணுங்கால் நன்கு வாழ கற்றுக்கொடுக்கும் “ வாழ்க்கைப் பயிற்சிச்சாலை” யாக பள்ளிக்கூடம் மாறுகிறதே என்று பூரிப்பு அடைவார்கள்.

பிள்ளைகள் மட்டும் தூய்மையாக இருந்தால் போதாது. ஆசிரியர்கள் முன்னேடிகளாக, வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். கண்யமும் பெருந்தன்மையும் மதிப்பும் பெறத்தக்க வகையில் ஆடை அணிய ஆசிரியர்கள் பழகுவது நல்லது. இதன் பொருள் கோட்டு, தலைப்பாகையுடன் காட்சியளிப்பது என்பது அல்ல. பார்க்க பெருந்தன்மையாக இருக்கத்தக்கவாறு உடையணிய வேண்டும். துடைக்கும் துவாலை போன்ற மிகச் சிறிய துண்டுகளை தோள்மீது தொங்கவிடுவதைவிட, துண்டுகளே அணியாதிருத்தல் நலம். ஷர்ட் காலர் வேர்வைபட்டு கெடாமலிருக்க சிலர் கைக்குட்டையை ஷர்ட்டிற்கும் கழுத்திற்கும் இடையே செருகி வைக்கின்றனர். ஆனுல் அம்முறை ஆசிரியர்களுக்கு பொருத்தமாகத் தெரியவில்லை. “ Cleanliness is next to Godliness” என்ற ஆங்கிலப் பழமொழியின் பொருள் “ தூய்மை தெய்வத் தன்மைக்கு அடுத்தது ” என்பதாம். இம் மொழியைப் பேணும் வகையில் நடப்போமாக. [தொடரும்]

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சாயத்தில் 900 அடிக்கு கிராமத்தைச் சுற்றி சிமிட்டி ரோடுகளும், 1¼ மைல் மண் ரோடுகளும் இருந்து வருகின்றன. எல்லாக் கிராமங்களுக்கும் நல்ல வசதியான போக்கு வரத்து வசதிகள் இருக்கின்றன. மாட்டு வண்டிகள் மட்டும் 176-ம், சைக்கிள்கள் 216-ம் இருக்கின்றன. இவைகளின் மூலம், பஞ்சாயத்துக்கு, ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல், வாகன வரியாக வருமானம் வருகிறது.

வேகமான வளர்ச்சிக்கான புத்துணர்ச்சி

இவ்வாண்டு மார்ச் மாதத்தில் மட்டும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் மூலம் ரூபாய் 5,000 மதிப்புள்ள அரசாங்கப் பரிசுபத்திரங்கள் இப்பஞ்சாயத்து கிராமங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இப்பஞ்சாயத்தில் எல்லாக் குடும்பங்களிலும் அரசாங்க பரிசுப் பத்திரங்களை வாங்கியுள்ளனர். அரியப்பம்பாளையம் ஹரிஜனச் சேரியில் மட்டும் ரூபாய் 100 பொது நிதியாக வசூலித்து அதற்குப்பரிசுப் பத்திரங்களை வாங்கி பஞ்சாயத்துத் தலைவரிடம் ஒப்படைத்து பரிசு கிடைத்தால் அதை சேரியின் நன்மைக்குப் பயன்படுத்த ஏற்பாடு செய்துள்ளனர். கிராமத்தில் சிறு பூசல்கள் இருந்தாலும் அதை பெரிய மனிதர்கள் தீர்த்துவைத்து விடுகின்றனர். இப்பஞ்சாயத்து 1·50 ஏக்கரில் ஒரு பழத் தோட்டம் வைத்து அதன்மூலம் பஞ்சாயத்துக்கு வருமானம் வர திட்டமிட்டுச் செய்து வருகின்றனர். சாகுபடிக்கு லாயக்கில்லாத புறம் போக்கு நிலம் 3.50 ஏக்கர் பரப்பில் விறகுக்கான காடு வளர்க்கவும முயற்சி செய்து வருகிருர்கள். ஆறு பக்கமாக ஓடுவதால் மண் அரிப்பைத் தடுக்க ஓரங்களில் கிழே வேளான் விதை 2 மைல் நீளத்திற்கு, போட திட்டம் செய்திருக்கிருர்கள். இம்மாதிரி பல திட்டங்களுக்கு முன்னேடியாக இருந்து, வேலைசெய்து வரும் அரசாங்க அலுவலர்களும், பஞ்சாயத்துத் தலைவர் திரு. ஆர். எஸ். அண்ணுமலைக் கவுண்டர் அவர்களும் கிராம மக்களால் பெரிதும் பாராட்டப்படுகிருர்கள். இவர்களுடைய சீரிய ஒத்துழைப்பும், மக்களின் உழைப்பும் ஒரு சேர இருந்து வருவதால்தான், பல பொதுக் காரியங்களை திட்டமிட்டப்படி நிறை வேற்றி வைக்க முடிகிறது. இப்பஞ்சாயத்து, பகையின்றி எல்லோரும் ஒற்றுமையாக இருந்து செயல் படுவதால், பொது மக்களிடம் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இக் கிராம மக்கள் இன்னும் பல திட்டங்களை மேற்கொண்டு ஊக்கத்துடன் உழைத்து ஊரை உயர்த்தி நாட்டுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்குவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பல பஞ்சாயத்துகளுக்கு இது ஒரு கலங்கரை விளக்காக விளங்குகிற சிறப்பான செயல்களைச் செய்து காட்டியிருக்கிறது என்று உறுதியுடன் கூறலாம்.

பல பெரிய காரியங்களை மக்களே மனமுவந்து செய்யும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தந்திருப்பது, புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் மேன்மையும் பெருமையுமாகும்.

"புதிய பஞ்சாயத்து ஆட்சியின் வலுவுள்ள அங்கங்கள் பஞ்சாயத்து யூனியன்கள்"

தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன்கள் பெருந் தலைவர்களின் முதல் மாநாடு

வரலாற்றுப் புகழ் படைத்தது திருச்சி மாநகரம். தமிழ் நாட்டின் பெருமைக்கு உறைவிடமாக உறையூர் திகழ்ந்தது என்பதை சிலப்பதிகாரம் கூறுகிறது. தேசியப் போராட்டக் காலத்திலும் திருச்சிக்கு விசேஷ இடமுண்டு. ஒரு தலைமுறைக்கு முன்னால், அதாவது சுமார் 30 வருடங்களுக்கு முன்பு, திருச்சியிலிருந்துதான், வேதாரண்யம் உப்பு சத்தியாக்ரகத்தில் கலந்துகொள்ள, நிர்மாணத் தொண்டர்களின் கட்டுப்பாடான ஐக்கிய அணிவகுப்பு புறப்பட்டுச் சென்றது. அதே திருச்சியில், நாடு விடுதலை பெற்ற பிறகு, கிராமத் திருப்பணிகளை கட்டுப்பாடான முறையில் நிறைவேற்றித் தருகின்ற பொறுப்பு வாய்ந்த பெருந் தலைவர்களின் திருக்கூட்டம் ஒன்று திரண்டது வியப்பூட்டும் செய்தியாகும். கடந்த ஜூலை 15, 16, 17 தேதிகளில், தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன்களின் பெருந் தலைவர்கள் மகாநாடு திருச்சியில் கூடியதைத்தான் குறிப்பிடுகிறோம். எல்லா இன்னல்களையும் எதிர்த்து தேசியப் போராட்டத்தில் அன்று வெற்றி கண்டது போலவே, இன்று புதிய பஞ்சாயத்து ஆட்சியின் வெற்றிகரமாக செயல்படுத்திவைப்பதில் தமிழ்நாடு வெற்றி பெறும் என்பதை இது சுட்டிக் காட்டியது. குறிப்பாக, மக்கள் சேவையையே தமது உயிர் மூச்சாகக் கொண்டு, அல்லும் பகலும் அயராது பணியாற்றுகின்ற சீரிய தொண்டர் ஒருவரின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவும், இம் மாநாட்டு நிகழ்ச்சியோடு இணைந்து அமைந்தது, நல்ல உள்ளம் படைத்த எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய மற்றொரு விசேஷ நிகழ்ச்சியாகும். தொண்டருக்குத் தொண்டராகவும், தலைவருக்குத் தலைவராகவும், பணியாற்றி வரும் பேறு பெற்றுள்ள நம்முடைய முதலமைச்சர், இம் மாநாட்டினைத் துவக்கி வைத்ததன் மூலம், புதிய பஞ்சாயத்து ஆட்சியின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமே துவங்கி உள்ளது.

ஒன்றுபட்ட உணர்வின் சின்னம்

இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய மூன்று மதத்தினரும் திருச்சியில் பெருவாரியாக வசிக்கிறார்கள். கங்கையில் புனிதமான காவிரி தன் அன்புக் கரங்களை நீட்டி, பயிர்களுக்கு நீரூட்டி அதன் பயனாக, விளைவைப் பெருக்கி, மக்களை மகிழ்விக்கிறாள். காவிரித் தாயின் வளத்தையெல்லாம் உறிஞ்சிக் குடித்து நெற் பயிர் சூல் கொண்டு மரகதக் கம்பளம் விரித்ததுபோல் அழகாகச் சாய்ந்து கிடக்கும் அற்புதக் காட்சியைத் திருச்சியைச் சுற்றிலும் எங்கும் காணலாம். உச்சிப் பிள்ளையார் கோயில், அருகில் திருவரங்கம், திரு ஆனைக் கோயில், அதுமட்டுமன்றி, வானளாவ ஓங்கி உயர்ந்து கம்பீரமாக நிற்கும் மாதா கோயிலும், பெரிய மசூதியும், கிருஸ்தவர்களால் நடத்தப்படும் செயின்ட் ஜோஸப் கல்லூரி, இஸ்லாமிய சகோதரர்களால் நடத்தப்படும் ஜமால் மகமது கல்லூரி எல்லாம் திருச்சியில் உள்ளன. எல்லா மதத்தினரும், சகோதரர்கள் போல ஐக்கியபாவத்துடன் வாழ்கின்ற ஒருமைப்பாட்டுணர்வுக்கு இலக்கணமாகத் திகழும் திருச்சியில் தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் பெருந் தலைவர்கள் மகாநாடு நடைபெற்றது மிக மிகப் பொருத்தமாகும்.

மக்கள் குரல் வானொலியில்..

அது மட்டுமல்ல; மக்கள் குரல் வானொலியில் ஒலிக்கச் செய்வதற்காக, **கிராம வானொலி மன்ற** ஏற்பாடுகளையும் முதல் அமைச்சர் 1962-ம் ஆண்டு, ஜூலை மாதம் **15-7-62-ல்** திருச்சியில் ஆரம்பித்து வைத்தார். இந்த ஆரம்ப விழாவில் திருச்சி வானொலி நிலைய பெரிய அதிகாரி திரு நடராஜன், திரு ஆர். ஏ. கோபாலசாமி தம்பதிகள், உணவு உற்பத்திக் கமிஷனர் திரு எஸ். ஆர். கெய்வார், ஐ.சி.எஸ்., கிராம அபிவிருத்திக் கமிஷனர், திரு கோ. வெங்கடாசலபதி ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர்.

புதிய பஞ்சாயத்து ஆட்சியினை நடத்துவதில் ஏற்படுகின்ற நடைமுறைச் சிக்கல்களை தக்கவர்கள் மூலம் அரசாங்கத்திற்கு அறிவித்து தக்க பரிகாரம் காண முயல்வதே இந்த புதிய முயற்சியின் நோக்கமாகும்.

மாநாட்டிற்கு தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் தலைவர் **திரு. கே. ராஜாராம்** அவர்கள் தலைமை வகித்தார். ஜூலை 15-ல், ஜமால் மகமது கல்லூரியில், "பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டும்" என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கவிதை, இறை வணக்கமாக பாட, மகாநாடு துவங்கியது.

வரவேற்புக் குழுத் தலைவர் **திரு. வரதராசன்** மாநாட்டின் வரவேற்புரையை நிகழ்த்தினார். பாரத ராஷ்டிரபதி டாக்டர் இராதாகிருஷ்ணன், திரு. ஜெயப் பிரகாஷ் நாராயண் ஆகியோரிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன.

பின்னர், மாநாட்டைத் திறந்துவைத்து, தமிழக முதலமைச்சர் **திரு. காமராஜ்** பேருரை ஆற்றினார். (முதலமைச்சரின் சொற் பொழிவு 4-ம் பக்கம் காண்க.)

தமிழ்நாடு அரசாங்கத் தலைமைச் செயலாளர் திரு. ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்., கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு. கோ வெங்கடாசலபதி ஆகியோர் மாநாட்டில் சொற்பொழிவாற்றினார்கள்.

பிற்பகல் கூடிய மாநாட்டில், வங்க முதலமைச்சர் டாக்டர் பி. சி. ராய், உத்தரப் பிரதேச முன்னாள் சபா நாயகர் புருஷோத்தமதாஸ் தாண்டன் ஆகியோர் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேறின.

பயனுள்ள தீர்மானங்கள்—பண்பட்ட கருத்துக்கள்

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளை மாநாட்டுத் தலைவர் திரு கே. ராஜாராம் அவர்கள் தொடங்கிவைத்துப் பேசினார். தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் என்ற ஸ்தாபனத்தின் வரலாற்றை அவர் விரிவாக எடுத்துரைத்தார். பிறகு, பன்னிரண்டு தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டன. தீர்மானங்களின் பேரில், பஞ்சாயத்து யூனியன் பெருந் தலைவர்கள் தம்முடைய கருத்துக்களை தெரிவித்தார்கள். பஞ்சாயத்து நிர்வாகம் சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயங்களையும், கடந்த ஓரிரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட அனுபவங்களையும் ஒட்டியே, தீர்மானங்கள் உருவாகியிருந்தன.

"உண்மையான 'கிராமக் குடியரசு' உருவாகிறது"

மாநாட்டின் மூன்றும் நாள் நிகழ்ச்சிகளில் மிக முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது மத்திய அரசாங்கப் பஞ்சாயத்து சமுதாய நல-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு **எஸ். கே. டே** அவர்களின் சொற்பொழிவாகும். (திரு டே. அவர்களின் சொற்பொழிவின் சுருக்கம் 12-ம் பக்கம் பார்க்க). தலைவர் திரு ராஜாராம் அவர்கள், முடிவுரையாக, பயனுள்ள சில கருத்துக்களைக் கூறினார்.

மூன்று நாட்கள் சீருடனும் சிறப்புடனும் நடைபெற்ற மாநாடு நன்றி கூறல் நிகழ்ச்சியுடன் நிறைவெய்தியது. இந்த மாநாடு பொலிவுடன் நடந்தேறப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு பாடுபட்ட வரவேற்புக் குழுவினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும், பார்வையாளருக்கும் எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தார்கள். "சோழ வள நாடு சோறுடைத்தது" என்பது முதுமொழி. தமிழ் நாட்டின் விருந்தோம்பல் முறைக்கு சான்றாக மாநாட்டில் படைக்கப்பட்ட உணவு அமைந்திருந்தது. அன்புடனும், கனிவுடனும் முக்கனியோடு அறுசுவை உண்டி அளிக்க வரவேற்புக் குழுவினர் மிகவும் சீரிய முறையில் ஏற்பாடு செய்திருந்ததை பாராட்டவேண்டும்.

திருச்சி மாநாடு புதிய பஞ்சாயத்து ஆட்சி தமிழ் நாட்டில் மேன்மேலும் வலுவுடன் திகழும் என்பதற்கு நல்லதோர் எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது. அண்ணல் காந்தியடிகள் கனவுகண்ட உண்மையான "கிராமக் குடியரசு" தமிழ் நாட்டில் நல்ல முறையில் உருவாகி வருகிறது என்ற எண்ணம்தான் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு திரும்பிவரும்பொழுது எனக்குத் தோன்றியது.

"**திரு அருள்**"

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கை ஏற்படும். அந்த நம்பிக்கை அதிகமாகவும் வழி ஏற்படுகிறது. சேலத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். திருநெல்வேலியிலிருந்தும் வந்திருக்கிறீர்கள். சேலத்துக்காரர்கள் திருநெல்வேலிகாரர்களைப் பார்க்கும்போது பஞ்சாயத்து ராஜ்யம் இரண்டு இடங்களிலும் நடைமுறையில் இருக்கும்போது இரண்டு பேருக்கும் ஒரு நம்பிக்கை, பலம் ஏற்படுகிறது. அப்படி ஒரே கொள்கையில் இயங்குவதால் தான் இந்தியா ஒன்றாக இருக்க முடிந்தது. டில்லி சட்ட சபைக்குப் போகிறோம். வேறு பல வேலைகளுக்கும் போகிறோம். அங்கிருக்கிறவர்களுடன் ஒன்றாக இருக்கிறோம், பழகுகிறோம். ஒருவருக்கொருவர் ஒருவர் மீது ஒருவருக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. அவர்களுடன் பழகாதவர்கள் அவர்கள் மீது குற்றம் சொன்னால் நம்பமுடியுமா? ரொம்ப நல்லவர், நியாயமாக நடப்பவர், கெடுதல் செய்ய மாட்டார் என்ற நம்பிக்கை நமக்கு உறுதியாக இருக்கிறது. அது இல்லாதவர்கள் அவர்களைக் கண்டு பயந்து கொண்டு அவர்கள் தப்பாகச் செய்வார்கள் என்று சொல்கிறார்கள். காரணம் என்ன? அவர்கள் கூடிப்பழகாததுதான். அதுமாதிரி, நாமும் பழகாமல் இருந்தால் அந்த நிலைதான் ஏற்படும்.

கூடிப் பழகுகின்ற வாழ்வு நெறி

பழைய காலத்தில் நான் சிறுவனாக இருக்கும்போது, தஞ்சாவூர் பக்கங்களிலிருந்து மதுரை-ராமனாதபுரம் பக்கங்களுக்கு வருகிறவர்கள், நாங்கள் சோழ தேசம் என்று சொல்வார்கள். கோயம்புத்தூர்காரர்கள் கொங்குநாடு கொங்கனர் என்றுதான் சொல்வார்கள். இதையெல்லாம் பழைய காலத்தில் சொன்னார்கள். இப்போது அப்படி சொல்கிறார்களா? அதையெல்லாம் வைத்துக் கொண்டு ஆரியன்-திராவிடன் வடக்கு-தெற்கு என்று ஆரம்பித்து விடலாமா? ஒருவருக்கொருவர் பழகாவிட்டால் இது போகாது. சினேகத்தால் வருவதுதான் இவையெல்லாம். கூடிப்பழகாமல் இருந்தால் வேறுவேறாக நினைக்கும்படி இருக்கும். சாதாரணமாக நம் ஊர்களில் கோவில், திருவிழா என்று ஏன் வைக்கிறோம்? அப்போது எல்லாரும் ஒன்று சேருகிறோம். நமக்கு ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. குடும்பத்தைப் பாருங்கள். அது எப்படி யிருக்கிறது? கல்யாணம், திருவிழா பண்டிகை என்றெல்லாம் வைக்கிறார்கள் அல்லவா? அப்போது தான் எல்லோரும் ஒன்றாகச் சேரமுடிகிறது. பழக முடிகிறது. அது மாதிரி வருஷத்துக்கு ஒரு தடவையோ இரண்டு தட்வையோ நமக்கு கூடிப்பழக சந்தர்ப்பம் இதுபோன்ற மகாநாடுகளால்தான் ஏற்படுகிறது. இது ரொம்ப நல்லது. ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நம்பிக்கை உண்டாக்குவது சாதாரண காரியமா என்ன? அது பெரிய காரியம்தான். அப்போது இந்த வேற்றுமைகளை நம்பமாட்டோம்.

மனிதனின் மனப்பான்மையில் சுயநலம் ஜாஸ்தியிருக்கிறது. நல்லது செய்தாலும் நாம் ஒத்துழைக்க மாட்டோம் என்கிறோம். அந்த எண்ணம் போகவேண்டுமென்றால் நாம் ஒவ்வொருவரும் சேர்ந்து கூடி விவாதிப்பதன் மூலம்தான் நல்ல எண்ணத்தை உண்டாக்க முடியும். அதற்கு ஏதுவாக இந்த மகாநாடு அமையும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித் துக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்."

திருச்சியில் மூன்று நாள்....

தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்கள்

முதல் மகாநாடு

1962 ஜூலை 15, 16, 17 தேதிகளில், திருச்சிராப்பள்ளியில், தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்கள் முதல் மகாநாடு சிறப்பாக நடைபெற்றது. மகாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கு எல்லா வசதிகளும் அருமையான முறையில் செய்து தரப்பட்டிருந்தன. போக்குவரத்து, தங்க வசதியான இடம், அருமையான சாப்பாடு எல்லாவற்றையும் பாராட்டத்தக்க வகையில் ஏற்பாடு செய்திருந்தனர் வரவேற்புக் குழுவினர். விருந்தோம்பலுக்கு புகழ்பெற்ற சோழ நாட்டில் வரவேற்புக்கும், உபசாரத்திற்கும் கேட்கவேண்டுமா ?



மகாத்மா காந்தி கனவு கண்ட உண்மையான 'இராம ராஜ்யம்' தமிழ் நாட்டில் நனவாகிக்கொண்டு வருகிறது. பொறுப்புணர்ச்சியும், 'தொண்டுள்ள'மும் கொண்ட புதிய தலைமை கிராமங்களில் உருவாகியுள்ளது.... தமிழ்நாடு பல துறைகளிலும் முன்னோடியாக இருப்பது போலவே, பஞ்சாயத்து ராஜ்யத்தை அமைத்து நடத்துவதிலும், மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக உள்ளது.... திருச்சியில், கடந்த ஜூலை மாதத்தில் நடைபெற்ற தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்கள் மகாநாடு இந்த எண்ணத்தை மேலும் வலியுறுத்திக் காட்டுகின்ற நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. "தமிழ்நாடே இங்கே வந்து கூடியிருக்கிறது" என்று முதல் அமைச்சர் திரு காமராஜ் தன்னுடைய சொற்பொழிவில் குறிப்பிட்டார்கள் என்றால், இந்த மகாநாடு எவ்வளவு முக்கியமானது என்பது நன்றாகப் புலனாகிறது....

படம்—1. மகாநாட்டில் கலந்துகொள்ள பிரதிநிதிகள் ஆர்வத்துடன் வருகிறார்கள்.

படம்—2. 'பாலைவனம் சோலைவனம் ஆகவேண்டும்' என்ற கவிமணியின் பாடல் இறைவணக்கமாகப் பாடப்பெற்றது.

படம்—3. பிரதமச் செயலாளர் திரு. ஆர். எ. கோபாலசாமி பேசுகிறார்.

படங்கள்—4-5. பிரதிநிதிகள் பேசுகிறார்கள்.

படம்—7. முதல் அமைச்சர் திரு. காமராஜ் பேருரை ஆற்றுகிறார்.

படங்கள்—6-ம் 8-ம்: திரளாகக் குழுமியிருந்து, பிரதிநிதிகளின் சொற்பொழிவுகளை ஆர்வத்துடன் கேட்கின்றனர்.

[விவரம்—பக்கங்கள் 21—22 பார்க்கவும்]







தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்கள் முதல் மாநாடு



கிராம வானொலி மன்றம்

துவக்க விழா

படம் 1—மக்கள் குரல், வானொலியில் ஒலிக்கச் செய்வதற்காக, கிராம வானொலி மன்றம் துவக்கப்பட்டுள்ளது. 'அறிவொளி' பரப்பும் நோக்கத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராம வானொலி மன்றத்தை, முதல் அமைச்சர் திரு. காமராஜ், திருச்சியில் துவக்கிவைத்தார். திரு. ஆர். எ. கோபாலசாமி தம்பதிகள், திரு. கோ. வேங்கடாசலபதி, திருச்சி வானொலி நிலைய நிர்வாகி திரு. நடராஜன் ஆகியோர் துவக்க விழாவில் கலந்துகொண்டனர்.

படம் 3—திருச்சி ஜமால் மகமது கல்லூரி யில் 15—7—62-ல் நடந்த விழா ஒன்றில் முதல் அமைச்சர் காமராஜ் முஸ்லீம் பிரமுகர்களுடன்....

படம் 2—பஞ்சாயத்து யூனியன் பெருந் தலைவர்கள் அந்தக் கல்லூரி மண்டபத் தில் இளைப்பாற வசதி செய்து தரப் பட்டிருந்தது.



கிராம நலம் பகுதி-௨

பஞ்சாயத்து அரசிதழ்

GRAMA NALAM PART - II

PANCHAYAT GAZETTE

இந்திய யூனியன் தேசியக் கொடியைப் பள்ளிகளில் பறக்க விடவும், உபயோகிக்கவுமான முறைகளும், விதிகளும்

1. தேசியக் கொடியை சூரிய உதயம் முதல் மறையும் வரைதான் பறக்கவிட வேண்டும். அரசாங்கத்தாரால் குறிப்பிடப்பட்ட தேசிய விடு முறை நாட்களிலும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாட்களிலும், மற்றும் விசேஷ சந்தர்ப்பங்களிலும் பறக்கவிட வேணடும். கொடியை ஏற்றும்போது உற்சாகத்துடனும், அதை இறக்கும்போது நிதானமாகவும், விசுவாசத்துடனும் இறக்க வேண்டும்.

2. இதர கொடி அல்லது கொடிகளுடன் ஊர்வலமாகச் செல்லும்பொழுது தேசியக் கொடியானது ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கு வலதுபுறத்திலும், இதர கொடிகள் வரிசையில் இருக்குமானால், அவ்வரிசையின் நடுப் பகுதிக்கு முன்னாலும் தூக்கிச் செல்லப்பட வேண்டும்.

3. ஒரு சுவரில் மற்ற கொடிகளுடன் பறக்க விடும்பொழுது, தேசியக் கொடி மற்ற கொடிகளின் வலது புறத்தில் இருக்கும்படியும், அதன் கொடிமரம் மற்ற கொடிமரங்களுக்கு முன்னால் இருக்கும்படியும் பறக்க விடப்படவேண்டும்.

4. கொடிமரங்களில் மற்ற கொடிகளோடு பறக்க விடப்படும்போது தேசியக்கொடி, நடுவிலாவது உயரமான இடத்திலாவது வைக்கப்படவேண்டும்.

5. மற்ற சமஸ்தான கொடிகளோடாவது, சங்கங்களின் சிறு கொடிகளோடாவது குறிப்பிட்ட மதிற் சுவர் எல்லைக்குள் பறக்க விடப்படும்போது, தேசியக்கொடி மற்ற கொடிகளை விட உயரத்தில் பற்க்கவிடப்படவேண்டும். மற்ற கொடிகளுடன் ஒரே வரிசையில் பறக்கவிடப்படும் பொழுது, தேசியக்கொடி முதலில் பறக்கவிடப்படவேண்டும் ; கடைசியாக தாழ்த்தப்பட வேண்டும். வேறு சமஸ்தானக் கொடியோ, சங்கங்களின் சிறு கொடியோ, தேசியக் கொடிக்கு வலது புறத்தில் பறக்க விடப்படக்கூடாது.

6. சன்னலின் கீழ்ப்படியிலிருந்தாவது, மாடியின் முகப்பிலிருந்தாவது, கட்டடங்களின் முன் புறத்திலிருந்தாவது, படுக்கை வாட்டத்திலோ அல்லது சாய்வுவாட்டத்திலோ கொடிமரத்தில் தேசியக் கொடியைப் பறக்க விடும்பொழுது, கிச்சிலி நிறம் உச்சியில் இருக்குமாறு பறக்கவிடவேண்டும்.

7. கொடிமரங்களில் அல்லாமல், மற்ற வகையில் தேசியக் கொடியை, கட்டடங்களின் உட்புறத்திலோ, வெளியிலோ விரிக்கவேண்டுமானால் தட்டையாக விரிக்க வேண்டும். ஒரு சுவரிலிருந்து செங்குத்தாகவாவது படுக்கை வாட்டத்திலாவது கொடியை விரிப்பதானால் கிச்சிலி நிறம் மேற்புரமாக இருத்தல் வேண்டும்.

விழாக்களில் பச்சை, வெள்ளை, கிச்சிலி வண்ணத் தோரணங்கள், மாலைகள் ஆகியவற்றுக்காக தேசியக் கொடியை உபயோகிக்காமல் வண்ணத் துணிகள் உபயோகிக்கவேண்டும்.

8. கிழக்கு மேற்கு வீதிகளில் தேசியக் கொடிகள் தொங்க விடப்படவேண்டுமானால், குங்கும நிறம் வடக்கு நோக்கி இருக்குமாறும், வடக்கு தெற்கு வீதிகளில் தொங்க விடப்பட்ட கொடிகளின் குங்கும வண்ணம் கிழக்கு நோக்கி இருக்குமாறும் தொங்கவிடப்பட வேண்டும்.

9. பேச்சு மேடைகளில் தேசியக் கொடியை பறக்க விடவேண்டுமானால், அது பேசுகிறவர்களுக்குப் பின்னால் உயர்த்தப்படவேண்டுமேயொழிய மேசையை மறைக்கும்படி பறக்கவிடக்கூடாது. கொடி மரத்தில் பறக்க விடப்பட்டால் பேசுகிறவர்களின் வலதுபுறத்தில் பறக்க விட வேண்டும்.

10. உருவச்சிலைகளைத் திறக்கும்போது தேசியக் கொடிக்குத் தனிப்பட்ட இடத்தைக் கொடுக்க வேண்டும். உருவச்சிலையை மூடுவதற்கு தேசியக் கொடியை உபயோகிக்கக்கூடாது. கொடிச் சிலைக்கான துணியை உபயோகிக்கவேண்டும்.

11. கொடிமரத்தின் பாதிபாகத்தில் தேசியக் கொடியை பறக்க விட வேண்டுமானால், கொடியை முதலில் பூராவாக உயர்த்தி மறுபடியும் நடுவேகொண்டு வரவேண்டும். மாலையில் கொடியைக்கீழே இறக்குவதற்கு முன் உச்சிக்கு உயர்த்தி பிறகு தாழ்த்த வேண்டும்.

நினைவு நாட்களில் மட்டும் கதிரவன் தோற்றம் முதல் நடுப்பகல் வரை கொடிமரத்தின் பாதியிலும் அதன் பிறகு கதிரவன் மறையும்வரை உச்சிக்கு உயர்த்தப்பட்டும் பறக்கவிடவேண்டும்.

12. நிலையாக நடப்பட்ட கொடி மரங்களில் உள்ள கொடிகள் துக்கம் கொண்டாடும் தினங்களன்று பாதிமரத்துக்கு இறக்கிப் பறக்க விடவேண்டும். அச் சமயங்களில் ஊர்வலமாக கொடிகளை சிறு கொடிமரங்களில் தாங்கிச் செல்லும்போது இரண்டு கறுப்புத்துணிகளை கொடி மரத்தின் உச்சியிலிருந்து கட்டித் தொங்கவிட வேண்டும். இத்துணிகளை அரசாங்க உத்தரவு பெற்று தான் உபயோகிக்கவேண்டும்.

13. தெய்வ வணக்கம் செய்யும் காலங்களில் கொடியை கொடிமரத்தில் கட்டி ஜனங்களின் வலது பக்கத்தில் தூக்கி நிறுத்தவேண்டும். மற்ற கொடிகள் இடதுபுறத்தில் இருக்கவேண்டும். மேடையில் வைக்கப் பட்டால் அக் கொடி தெய்வ வணக்கம் செய்யும் தலைவரின் வலது பக்கத்தில் இருக்கவேண்டும். மற்ற கொடிகள் இடது பக்கத்தில் இருக்கவேண்டும்.

14. தேசியக் கொடிகள் உபயோகப்படுத்த முடியாதபடி பழுதாகப் போய்விட்டால் அதை எறிந்து விடக் கூடாது; மரியாதையுடன் அழித்துவிடவேண்டும்.

கொடி வணக்கம்

15. அணி வகுப்பில் கொடியைத் தாங்கிச் செல்லும் போது எல்லோரும் கொடியைப் பார்த்து நின்று வணக்கம் செய்யவேண்டும். சீருடை **(Uniform)** அணிந்தவர்கள் வலது கையால் வணக்கம் செய்ய வேண்டும். கொடி தாங்கிச் செல்லும் அணிவகுப்பை எதிர்நோக்கிவரும் எவரும் உடனே வணக்கம் செய்ய வேண்டும்.

கொடியின்முன் உறுதி மொழி எடுத்துக்கொள்ளும் முறை

தேசியக் கொடி முன் உறுதி மொழி எடுத்துக்கொள்ளும்பொழுது பள்ளியில் கடைபிடிக்கவேண்டிய முறைகள் வருமாறு :—

எல்லோரும் கைகட்டி நின்று கொண்டு, கீழ்க்கண்ட உறுதி மொழியை எடுத்துக் கொள்ளவேண்டும்:

"பிரிக்க முடியாததும், எல்லோருக்கும் நீதியுடன் சுதந்தரமாக இருப்பதுமான இந்திய அரசாங்கத்தின் சின்னமாக விளங்கும் இத் தேசியக் கொடிக்கு நான் என்றும் விசுவாசமாக இருப்பதாக உறுதி மொழி அளிக்கிறேன்".

பள்ளிகளில் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு பின்பற்றவேண்டிய விதிகளாவன :—

1. பள்ளிப் பிள்ளைகள் பாடசாலைக்கு வெளியில் சதுரமாக நிற்கவேண்டும். அவ்வாறு நிற்கும்போது மூன்று பக்கங்களில் பிள்ளைகளும், நான்காவது பக்கத்தின் மத்தியில் கொடி மரமும் அமைந்திருக்கவேண்டும் கொடி மரத்துக்குப்பின்னால் மூன்றடி தூரத்தில் பள்ளியின் தலைமை ஆசிரியரும், மாணவர் தலைவரும், கொடியேற்றுபவரும் (தலைமை ஆசிரியர் அல்லாத வேறு எவராவது இருந்தால்) நிற்கவேண்டும்.

2. பிள்ளைகள் பாடசாலையின் சங்கியைக்குத் தக்கவாறு வகுப்புவாரியாக பத்துப்பத்து பேர்களாக, வரிசை வரிசையாக அணிவகுத்து நிற்கவேண்டும் வரிசைகள் ஒன்றன் பின் ஒன்றாக இருக்கவேண்டும் அந்தந்த வகுப்பு மாணவர் தலைவன் அவன் வகுப்பின் முதல் வரிசையின் வலது பக்கத்தில் நிற்க வேண்டும். வகுப்பு ஆசிரியர் அவர் வகுப்பின் கடைசி வரிசைக்குப் பின்னால் மத்தியில் மூன்றடி தூரத்தில் நிற்க வேண்டும். மேற்படி சதுரத்தில் பிள்ளைகளை நிற்கவைக்கும்போது வலது பக்கக்கோடியிலிருந்து வகுப்புக்களின் இறங்கு வரிசையில் பிள்ளைகளை நிறுத்தவேண்டும்.

3. ஒவ்வொரு வரிசைக்கும் இடையிலுள்ள தூரம் குறைந்தது முப்பது அங்குலம் இருக்கவேண்டும். ஒரு வகுப்பிற்கும், மற்றொரு வகுப்பிற்கும் இடையிலுள்ள தூரமும் அதே அளவு இருக்கவேண்டும்

4. ஒவ்வொரு வகுப்பும் சரிவர நிறுத்தப்பட்ட பின் வகுப்புத் தலைவன் முன்னால் வந்து தேர்ந்தெடுத்த மாணவர் தலைவனுக்கு வணக்கம் செய்யவேண்டும். எல்லா வகுப்பும் தயாரான பின்னர் பள்ளியின் மாணவர் தலைவன் தலைமை ஆசிரியருக்கு எதிரில் சென்று வணக்கம் செய்யவேண்டும். பிறகு கொடியை ஏற்ற வேண்டும் பள்ளியின் மாணவர் தலைவன் உதவி செய்யலாம். கொடி பறக்க விடுவதற்கு முன் பள்ளிக்கூடப் படைத் தலைவன், படையில் உள்ளவர்களைத் தயாராக இருக்க எச்சரித்து கொடி பறக்கும் பொழுது வணக்கம் செய்ய உத்தரவிடவேண்டும். அப்படையில் அத்தலைவன் வணக்கத்தைச் சொல்லும் வரையில் சிறிது நேரம் அவர்கள் வணங்கிய வண்ணமாய் இருத்தல்வேண்டும்.

5. கொடி வணக்கத்தின் போது "ஜனகனமன" என்ற தேசிய வாழ்த்தைப் பாடவேண்டும். படையில் உள்ள மாணவர்கள் அப்போது அமைதியாக இருக்க வேண்டும்.

6. கொடியின் முன் உறுதிமொழி செய்துகொள்ளும் சந்தர்ப்பங்களில் எல்லாம் தேசிய கீதம் பாடப்படவேண்டும். உறுதி மொழி செலுத்தும்போது மாணவ கூட்டத்தினர் அமைதியுடன் இருக்கவேண்டும். தலைமை ஆசிரியர் மெதுவாகவும், விசுவாசமாகவும் உறுதி மொழி எடுத்துக்கொள்வார். மாணவர் கூட்டத்தினரும் அதைப் பின்பற்றிச் சொல்லவேண்டும்.

எச்சரிக்கை

(1) தேசியக் கொடியை எவரும் அவமதிக்க அனுமதிக்கக்கூடாது.

(2) தேசியக் கொடியை வேறு எந்தக் காரியத்திற்கும் உபயோகித்தல் கூடாது.

(3) தேசியக் கொடியை கிச்சிலி வண்ணம் கீழ்ப்புறம் இருக்கும்படிப் பறக்கவிடக்கூடாது

(4) தேசியக் கொடிக்கு மேலே உயரத்திலாவது வலது புறத்திலாவது வேறெந்தக் கொடியையும் வைக்கக் கூடாது.

(5) பூமியையோ, தரையையோ, தண்ணீரையோ தொடும்படியாக தேசியக் கொடியை வைக்கக்கூடாது.

(6) தேசியக் கொடி மேல் எவ்வித உருவங்களும் பொறிக்கப்படக்கூடாது.

(7) தேசியக் கொடிகளைத் தோரணங்களுக்காக உபயோகித்தல் கூடாது.

(8) தேசியக் கொடியைக் கிழிந்து போகும் அளவுக்கு இறுக்கிக்கட்டக்கூடாது.

(9) வாகனங்களின் எந்தப் பாகங்களிலும் தேசியக் கொடியைக் கட்டித் தொங்கவிடக்கூடாது. மோட்டார் வண்டியில் தேசியக் கொடியைப் பறக்கவிடும்பொழுது கொடிமரத்தை மோட்டாரின் இரும்புச் சட்டத்திலாவது, எஞ்சினின் முன்புறத்திலாவது இறுக்கிக்கட்டவேண்டும்.

(10) கூரைக்கு மூட, தேசியக் கொடியை உபயோகிக்கக் கூடாது.

(11) தேசியக் கொடியைத் தட்டையாகவோ, படுக்கை வாட்டமாகவோ தூக்கிச் செல்லக்கூடாது. ஆனால் அணிவகுப்பில் எடுத்துச் செல்வதுபோல் எப்போதும் தூக்கிச் செல்லவேண்டும்.

(12) தேசியக் கொடியை சாதாரண உடைக்கோ, விளையாட்டு உடைக்கோ, அல்லது மெத்தை, கைக்குட்டை முதலியவைகளில் வைத்துத் தைப்பதற்கோ உபயோகிக்கக் கூடாது.

(13) தேசியக் கொடியின் மீது எவ்விதமான எழுத்துக்களும் எழுதக்கூடாது.

(14) தேசியக் கொடியை எவ்வித விளம்பரத்திற்கும் உபயோகித்தல் கூடாது. இக் கொடி மரத்தில் எவ்வித விளம்பர அட்டைகளையும் தொங்க விடக்கூடாது.

(15) தேசியக் கொடியை அழுக்கடையும்படியாகவோ, கிழிந்து விடும்படியாகவோ கையாளுதலும், வைத்திருத்தலும் கூடாது.

(கல்வித் துறையின் 2-3-1948 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 409.)

மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் பொதுக் குழு அமைப்பு பற்றிய ஆணை திருத்தம்

Madras District Development Councils Act, 1958—District Development Councils—Formation of a General Committee of the District Development Councils—Orders for Modification—Issued.

[Memorandum No. 40144, R.D. & L.A., dated 13th APRIL 1962.]

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 3389-க்கு கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப் படுகிறது :

திருத்தம்

அரசாங்க ஆணையின் 5-வது பாரா இரண்டாவது வாக்கியத்திற்குப் பதிலாக கீழ்க்கண்ட வாக்கியத்தைச் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்:

"ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்தி மன்றமும், மாவட்டக் கலெக்டரைத் தலைவராகவும், ஐந்து நிலைக் குழுக்களின் தலைவர்களையும் உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு பொதுக் குழுவை சட்டப்படி அமையாத அடிப்படையில், அமைக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர்".

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 13-4-1962 தேதியிட்ட அறிக்கை எண் 40144.)

பஞ்சாயத்து வரி வசூல் தொகைகளைப் பஞ்சாயத்து யூனியன் பணப்பெட்டகத்துக்கு அனுப்பி வைத்தல் பற்றிய விளக்கங்கள்

Panchayat Development—Village Officers—Specification of duties—Tax Collections—Remittance into Panchayat Union Cash Chest—Further Classification of.

[Memorandum No. 26734, R.D. & L.A., dated 6th MARCH 1962.]

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 24-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1428-ல், பஞ்சாயத்துத் தலைவர் அல்லது கிராம அதிகாரிகளால் வசூலிக்கப்படும் எல்லா பஞ்சாயத்து வருவாய்களும், அவ்வப்போது (பொருத்தமான கால இடைவெளிக்குப் பின்) அதாவது, மாதத்துக்கொரு முறையாவது

சாயத்து யூனியன் பணப்பெட்டகத்துக்கு அனுப்பி அங்கு வரவு வைக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், வசூல் தொகை ரூ 100-க்கு மேல் சேர்ந்த உடனே பஞ்சாயத்து யூனியன் பணப்பெட்டகத்துக்கு அனுப்பி வரவு வைக்கப்படவேண்டும். கிராம நலதல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ந் தேதியிட்ட அறிக்கை 139119-ல், கிராம அதிகாரிகள், பஞ்சாயத்து வருவாய்களை, பஞ்சாயத்து யூனியன் பணப்பெட்டகத்தில், வாரத்துக்கு ஒரு முறையோ அல்லது அந்தத் தொகை ரூ 250-க்கு மேல் போகும்போதோ, இவற்றுள் எது முன்னால் நிகழ்கிறதோ அதன்படி, சேர்ப்பிக்க வேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது.

2. சிறு தொகைகளைப் பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்கு அடிக்கடி எடுத்துச் செல்லவேண்டி வருவதால், கிராம அதிகாரிகளின் அன்றாட வேலைகள் பாதிக்கப்படுகின்றன என்றும், வசூல் தொகை ரூ 500 சேர்ந்த பின்னர் அல்லது மாதம் ஒரு முறை பணத்தை அனுப்பி வைக்கின்ற முறை கோயம்புத்தூர் மாவட்டத்தில் இப்பொழுது பின்பற்றப்படுகிறது என்றும், கோயம்புத்தூர் மாவட்டக் கலெக்டர் அறிவித்திருக்கிறார். இந்த நடைமுறை திருப்திகரமாக செயல்படுவதால் இதை அரசாங்கம் அங்கீகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.

3. அரசாங்கம் கோயம்புத்தூர் மாவட்டக் கலெக்டரின் ஆலோசனைகளை ஒப்புக்கொண்டு, இது விஷயத்தில் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை ஒதுக்கிவைத்து, கிராம அதிகாரிகள் வசூல் செய்யும் பஞ்சாயத்து வருவாய்களை, ரூ 500 சேர்ந்ததும் அல்லது மாதத்தின் கடைசி நாளில், இவற்றில் எது முன்னால் நிகழ்கிறதோ அதன்படி பஞ்சாயத்து யூனியன் நிதிகளுக்கு அனுப்பிவிட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிறது.

4. மேற்படி நடை முறைக்கு அரசாங்க அங்கீகாரத்தை எதிர்பார்த்து, கிராம அதிகாரிகள் அதைப் பின்பற்ற அனுமதித்த கோயம்புத்தூர் கலெக்டரின் செயலும் அங்கீகரிக்கப்படுகிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 6-3-1962 தேதியிட்ட அறிக்கை எண் 26734.)

கிராமிய மனித சக்தியைப் பயன்படுத்த வேலைத்திட்டம்—1962-63-ம் ஆண்டில் நிறைவேற்ற வகுக்கப்பட்ட பஞ்சாயத்து மண்வளப் பாதுகாப்புத் திட்டம்

Works Programme for Utilisation of Rural Man Power—Panchayat Soil Conservation Scheme—Formulated for implementation during 1962-63.]

[G.O.Ms. No. 689 R. D. and L. A., dated 22nd March, 1962]

சமுதாயத்தின் சக்தியை உற்பத்திப் பெருக்கத்துக்கான நிரந்தர சக்தியாக உருவாக்கும் வகையில், கிராமப்பகுதிகளில் மனித சக்தியைப் பயன்படுத்தும் இணைப்புத்திட்டம் ஒன்றை உருவாக்கி நிறைவேற்றவேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்து இருக்கிறது. கிராம நலதல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு பிப்ரவரி 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 276-ல் 1961–62 ஆண்டு காலத்தில் கிராமவேலைகளின் முன்னோடித் திட்டத்தை (Pilot Programme) தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து வட்டாரங்களில் நிறைவேற்ற ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த முன்னோடித் திட்டத்தில் எடுத்துச் செய்யப்பட்ட வேலைகளுள், எளிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், மண்வளப் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள், மரம் நடுதல், பாதை போடுதல், கட்டடம் கட்டுதல் முதலியன இடம் பெற்றன. இந்த வேலைகள் 1961–62ம் ஆண்டில் வேலையில்லா பருவத்தில் மாநிலத்தின் இதரப் பகுதி மக்களில் ஒரு கணிசமான அளவினருக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்தன.

2. அத்தகையதொரு திட்டத்தை 1962–63-ம் ஆண்டின் வேலையில்லாப் பருவத்திற்கென்று நிறைவேற்றுகின்ற விஷயத்தை அரசாங்கம் பரிசீலனை செய்துள்ளது. கிராமப் பகுதியின் உற்பத்துப் பெருக்கத்திற்கு நிரந்தரமான சேர்க்கையாக அமைகின்ற, சமுதாயத்திற்குத் தொடர்ந்து பலனளிக்கும் கிராமிய வேலைத் திட்டமாயின் அது எடுத்துச் செய்யப் பட வேண்டும். என்று அரசாங்கம் கருதுகிறது. நிலங்களின் உற்பத்திப் பெருக்கத்தை உயர்த்த, மண்வளப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியத் தேவைகளில் ஒன்று என்று அரசாங்கம் கருதுகிறது. குறிப்பாக, மழைக் குறைவும், நிச்சயமின்மையும் நீர்ப்பாசன வசதிகள் குறைவு அல்லது இல்லாமை ஆகிய காரணங்களால் ஒரு ஏகர் நிலத்தின் உற்பத்தி சக்தி மிகவும் குறைவாக இருக்கும் பகுதிகளைப் பொறுத்த விஷயத்தில் மேற்கொள்ள வேண்டியது. மிகவும் முக்கியமாகும். இப் பகுதிகள் பெரிய புஞ்சை நிலப் பரப்புகளில் நில வளைவுகளில் கரைகட்டும் வேலை, அந்தப் புஞ்சை நிலங்களில் உயர்தரச் சாகுபடிக்கான மொத்த வேலையின் தொடக்கமாக விளங்கும். இக் கரைகளை அமைப்பதன் பயனாக மண்ணில் உள்ள ஈரத்தன்மை காப்பாற்றப்படுவதும், அதிகமாகப்படுவதும் நேரடியான பலனாகும். நிலவளைவுக் கரைகள் அமைப்பது, மண் அரிப்பைத் தடுப்பதன்மூலம், மண்ணையும் மண் சத்தையும் காப்பாற்றுவதுடன், நில

பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோருக்குப் பயணப்படி வழங்குவதற்கான விதிகளில் திருத்தம்

[Rules—Madras Panchayat Act, 1958—Panchayat Union Councils—Payment Of Travelling Allowance by Panchayat Union Councils to their Chairmen, Vice—Chairmen, Members, and Members of their Committees—Amendments]

[G.o. M.s. No. 1204, R.D. and L.A., dated 24-5-62]

பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர், துணைத்தலைவர் உறுப்பினர்கள், குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோரின் பயணப்படி வழங்குவதற்கான விதிகளுக்கு சில நகல் திருத்தங்கள், பொது அறிவிப்பாகவும், ஆய்வுக்காகவும், 1962-ம்ஆண்டு மார்ச் மாதம் 18-ம் தேதிய செய்ன்ட்ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியிடப்பட்டது.

2. தலை நகரத்திலிருந்து போய் நான்கு மணிக்கு மேல் ஆகி ஆறு மணிக்கு மேல் ஆகாமல் இருந்தால் அரை தினப்படி அனுமதிக்கப்படலாம் என்றும், ஆறு மணி நேரத்திற்கு மேற்ப்பட்டாலோ முழு தினப்படி அனுமதிக்கபடலாம் என்றும் ஓமலூர் பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர் ஆலோசனை கூறியுள்ளார். தினப்படியைக் கணக்கிடுவதற்கு, தலை நகரத்தில் இல்லாமலிருந்தலை மணிக்கணக்கில் கணக்கிடப்படக்கூடாது என்றும் நேரக் கணக்கின்றி ஒரு முழு நாளாகவே கணக்கெடுத்துக்கொகொள்ளப்பட வேண்டும் என்றும் பரமத்தி பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர் யோசனை கூறியுள்ளார். அரசாங்கம் மேற்படி யோசனைகளை நன்கு பரிசீலனை செய்தது, ஆனல் அவைகளை ஏற்க முடியவில்லை.

இணைப்பு

விளம்பரம்

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் சென்னைச் சட்டம் 35/1958) 178-வது பிரிவு (2) துணைப் பிரிவு (x) உட்பிரிவின் கொடுத்துள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், கிராம நல-தல நிர்வாகத் துறையின் (தல நிர்வாகம்) 1960-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 8-ம் தேதியிட்ட விளம்பரம் எஸ்.ஆர்.ஓ. எண் 385/1960-உடன் வெளியிடப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள், குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோரின் பயணப்படி சம்பந்தப்பட்ட விதிகளுக்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை இதனல் செய்கிறர்.

திருத்தங்கள்

மேலே கூறப்பட்ட விதிகளில் (1)-வது விதியில், "விதிகள் 2 முதல் 8 வரை" என்ற சொற்கள், எண்கள் ஆகியவற்றுக்குப் பதிலாக "விதிகள் 2 முதல் 9 வரை" என்ற சொற்களும் எண்களும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.

(2) விதிகள் 3, 4, 5, 6, 7, 8, ஆகியவைகளின் எண்கள் முறையே 4, 5, 6, 7, 8, 9 ஆக மாற்றப்பட வேண்டும். அவ்வாறு 4-வதாக திருத்தப்பட்ட விதிக்கு மேல் கீழ்க்கண்ட விதி சேர்க்கப்பட வேண்டும். அதாவது—

"3. விதி 1. உட்பிரிவு (a), (b) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள், வட்டார ஜீப்பிலோ அல்லது இதர அரசாங்க வாகனத்திலோ கட்டணம் செலுத்தாமல் பயணம் செய்து அதே நாளில் வட்டாரத் தலைநகருக்குத் திரும்பி வந்துவிடும் பட்சத்தில், அவர்களுடைய தினப்படி (Daily allowance) கீழ்க் கண்டவாறு கணக்கிடப்படும்:

(a) தலைநகரத்தில் இல்லாத நேரம் நான்கு மணி நேரத்துக்கு மேற்படாமல் இருந்தால்.	இல்லை.
(b) தலைநகரத்தில் இல்லாத நேரம் நான்குமணி நேரத்திற்கு மேற்பட்டும், ஆறுமணி நேரத்திற்கு மேற்படாமலும் இருந்தால்.	மூன்றில் ஒருபகுதி தினப்படி.
(c) தலைநகரத்தில் இல்லாத நேரம் ஆறு மணிநேரத்திற்கு மேற்பட்டும் பன்னிரண்டு மணி நேரத்திற்கு மேற்படாமலும் இருந்தால்.	அரைதினப் படி.
(d) தலைநகரத்தில் இல்லாத நேரம் பன்னிரண்டு மணி நேரத்திற்கு மேற்படாமல்.	முழு தினப் படி.

குறிப்பு.—ஒருவர், ஒரு காலண்டர் நாளில், அல்லது தமிழ்நாடு பயணப் படி விதிகள் விதி 2 (b) (ii)-யில் "நாள்" என்பதற்குக் கூறப்பட்ட இலக்கணத்தின் கீழ், 24 மணி நேரத்திற்குள், ஒரு பயணத்திற்கு மேல் செய்வாரேயானல், ஒவ்வொரு பயணத்திலும் தலைநகரத்தில் இல்லாத நேரம் நான்கு மணி நேரத்திற்கு மேற்படவில்லை என்றால், அவருக்கு தினப்படி அளிக்கப்படமாட்டாது.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 24-5-62 தேதியிட்ட அரசாங்க ஆணை 1204]

கிராம வேலைகள் திட்டத்தில் சிற்றூர்களை—மதுராக்களை இணைக்கும் பாதைகளுக்கு வகை செய்தல்—கிராம நல—தல நிர்வாகத் துறையின் 27—7—62 தேதியிட்ட அறிக்கையில் (எண் 14847) வெளியிடப்பட்ட விளக்கங்கள் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் பொருந்தும் என்ற விளக்கம்

Works—Village Works Programme—Provision of roads linking hamlets—Instructions in Memorandum No. 484712 dated 27-2-62—Applicability to Village Panchayats—Instructions-Issued.

[Memorandam No. 77162, R.D. and L.A. dated 28-5-62]

நகரப் பஞ்சாயத்துகளுக்குள் அமைந்துள்ள சிற்றூர்களை (Hamlets) இணைக்கும் பாதைகளுக்கு வகை செய்தல் பற்றிய விளக்கங்கள், கிராம-நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ம் தேதியிட்ட அறிக்கை எண் 14847-ல் வெளியிடப்பட்டுள்ளன. தென்னார்க்காடு மாவட்டக் கலெக்டர், தம்முடைய 1962 எப்ரல் மாதம் 21-ம் தேதிய கடிதத்தில், மேற்படி அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள விளக்கங்கள் வகுப்பு II பஞ்சாயத்துக்களுக்கும் பொருந்துமா என்று விசாரித்துள்ளார். வகுப்புப் பஞ்சாயத்துக்கள் என்பவை இப்போது இல்லா II மையால், குறிப்பிடப்பட்டிருப்பது கிராமப் பஞ்சாயத்துக்களே என்று கருதப்படுகிறது. எல்லா கிராமிய மாவட்டக் கலெக்டர்களும், கிராம வேலைகள் திட்ட நிறைவேற்றத்துடன் சம்பந்தப்பட்ட மற்ற எல்லா அதிகாரிகளும், மேற்படி அறிக்கையில் (அறிக்கை எண் 14847) வெளியிடப்பட்டுள்ள விளக்கங்கள் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் பொருந்துவனவாகும் என்று அறிவிக்கப்படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 18–5-62 தேதியிட்ட அறிக்கை எண் 77162.)

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்—கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை தாலுகாவிலும் உள்ள வட்டாரங்களுக்கு பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத்திட்டம் பொருந்துவது பற்றிய விளக்கம்

[Third Five Year Plan—Blocks in Kanyakumari District and Shencottah Taluk of Tirunelveli District—Panchayat Development Schematic Budget—Application of—Instructions—Issued.]

(G.O. Ms. No. 973., R.D. and L.A., dated 18-4-62)

கிராம நலத் துறையின் 1960-ம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 664-ல், மாநிலம் முழுவதற்குமாக, ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தித் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் அமைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த வரவு செலவுத் திட்டம், வட்டார நிலையில் திட்டமிடுவதற்குக் கிடைக்கத்தக்க பொருளாதார வருவாய்களையும், பஞ்சாயத்துக்களுக்கும், பஜ்சாயத்து யூனியன்களுக்கும் அரசாங்கம் அளிக்கும் பொருளாதார உதவிகளின் ஒருங்கிணைந்த மாதிரியையும் வரையறுத்துக் கூறுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வட்டாரங்களுக்கும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை தாலூகாவுக்கும், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தை விரிவுபடுத்துவதை நிறுத்தி வைத்ததால், இந்த வரவு-செலவு திட்டம் அந்தப் பகுதிகளுக்குப் பொருந்தாமல் இருந்தது. 1961-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் (மாற்றப்பட்ட பிரதேசங்களுக்கு விரிவுபடுத்தல்), பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (முதல் அமைப்புச் சட்டத்திற்குத் சிறப்பாக வகை செய்தல்) திருத்தச் சட்டம்—இனிமேல் சட்டமாக்கப்பட்டுவிட்டது. மேற்படி சட்டம் துணைப் பிரிவு 3 (2)-ன் படி, அரசாங்கம் விளம்பரப்படுத்திக் குறிப்பிடும் தேதியிலிருந்து, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை தாலூகாவிலும் அமுலுக்கு வரும். கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் திருநெல்வேலி மாவட்ட செங்கோட்டை தாலூகாவிற்கும் 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தை விரிவு படுத்தி 1962-ம் எப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து அமுலாக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2. பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள வழிவகைகளை, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒம்பது பஞ்சாயத்து யூனியன்களுக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை பஞ்சாயத்து யூனியனுக்கும் விரிவுபடுத்துவதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்தது. கிராம நலத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 664-ல் வெளியிடப்பட்டுள்ள பஞ்சாயத்து

அபிவிருத்தித் திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் முழு அமைப்பும் அப்படியே இந்தப் பகுதிகளுக்குப் பொருந்துவதாக இல்லை. அதற்குக் காரணம், இந்தப் பகுதிகளில் விசேஷ நிலைமை நிலவுவதும் சிறப்பாக பஞ்சாயத்து யூனியன்களிடம் ஆரம்பக் கல்வி பற்றிய பொறுப்பை மாற்றுவதுமே ஆகும். இது சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் அரசாங்கம் கவனமாகப் பரிசீலனை செய்த பின்னர், பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டம், கீழ்க்கண்ட இனங்களைப் பொறுத்த வரையில் இந்த வட்டாரங்களில்செல்லுப்படியாகும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(i) கிராம வேலைகள் மானியம்.

(ii) விவசாய மானியம்.

(iii) சமூகக் கல்வி மானியம்.

(iv) மாதர் குழந்தைகள் நல மானியம்.

(v) தல நீர்ப்பாசன மானியம்.

இந்த இனங்களின் செயல்முறை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கிராம வேலைகள் மானியம்

கிராம நலத்துறையின் 1960-ம் வருஷம், ஆகஸ்ட் மாதம், 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 664-லும், 1961-ம் வருஷம், ஜனவரி மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 211-லும் கூறியுள்ளபடி, வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும், ஐந்தாண்டுக் காலத்தில் நான்கு லட்சத்திற்கும், குறைந்த அளவு இரண்டு லட்சத்திற்கும் என்ற வரையறைக்குட்பட்டு, இணைப்புப் பாதைகள், நீர் வழங்கு வேலைகளுக்கு, இரண்டாவது திட்டத்தில், ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கும் செலவு போக 6.67 லட்சங்கள் என்ற அடிப்படையில் கிராம வேலைகள் மானியம் வகுக்கப்பட்டுள்ளது. இது 1961-ம் ஆண்டிலிருந்து 1966-ம் ஆண்டு வரை வகை செய்யப்பட்டுள்ள மானியமாகும். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மீதியிருக்கும் ஆண்டுகளுக்கு வேலைத்திட்டத்தை வகுக்கும் பொழுது, 1961–62 ஆண்டுக் காலத்தில் இணைப்புப் பாதைகள், நீர் வழங்கு வேலைகள் ஆகியவற்றுக்குச் செய்யப்பட்ட செலவுகளையும் சேர்த்துக் கணக்கிடுதல் வேண்டும். இந்த மானியத்தின்கீழ் செய்யப்படும் செலவுகள் முழுதும் கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1961-ம் வருஷம் ஜூலை மாதம், 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2103-லும், பின்னர் வெளியிடப்பட்ட விளக்கங்களிலும் முறைப்படுத்தப்பட்டுள்ளன. நீர் வழங்கு வேலைகள், இணைப்புப் பாதை வேலைகள், மட்டுமே இத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படலாம். கன்னியாகுமரி மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஆரம்பக் கல்வியை ஒப்படைக்காததால், ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களுக்கு செய்யப்பட்டுள்ள நிதி வசதிகள், இவைகளுக்கும் பொருந்தா.

விவசாய மானியம்

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்து ஐந்தாண்டுகளுக்கும் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபாய் இரண்டு லட்சமாகும். ஏற்கெனவே ஓராண்டுத் திட்டம் முடிந்து விட்டதால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் இப்பொழுது கிடைக்கத்தக்க தொகை ரூபாய் 1.60 லட்சமாகும். கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1961-ம் வருஷம், செப்டம்பர் மாதம், 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-ல் கூறியுள்ளபடி இந்த மானியம் பயன்படுதப்படவேண்டும்.

சமூகக் கல்வி மானியம்

மூன்றுவது திட்டத்தின் மீதி நான்கு ஆண்டுகளுக்கும் ஒவ்வொருவட்டாரமும், ஓராண்டுக்குத் தலைக்கு 0·10 ந.பை.க்குச் சமமான மானியத்தைப் பெறும். கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் வருஷம் பிப்ரவரி மாதம், 6-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 300-ல் கூறியுள்ளபடி, இந்த மானியச் செலவுகள் கண்டிப்பாக ஒழுங்குபடுத்தப்படவேண்டும்.

மாதர்—குழந்தைகள் நலம்

மூன்றுவது திட்டத்தின் மீதி நான்கு ஆண்டுகளுக்கும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஓராண்டுக்குத் தலைக்குக் 0·26 ந.பை என்ற வீதத்தில் கணக்கிடப்பட்டு வழங்கப்படும். இந்த மானியத்தைக் பயன்படுத்துவதற்கான வேலைத் திட்டம், கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962-ம் வருஷம், ஜனவரி மாதம், 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 150-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளின் அடிப்படையில் வகுக்கப்படும்.

தல நீர்ப்பாசன மானியம்

இது விஷயத்தில், தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு எப்ரல் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 711 முழுதும் பொருந்தும். அந்த ஆணையின் அடிப்படையிலேயே இந்த மானியம் பெறத் தகுதியுடைய ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் வரையறுக்கப்படும்.

கதர்

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் வருஷம் டிசம்பர் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 3387-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகள் முழுதும், இந்தப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பொருந்தும்.

மேற்படி ஆறு திட்டங்களின் கீழ் நிறைவேற்றப்படுவது குறித்து வெளியிடப்பட்டுள்ள எல்லா ஆணைகளும், விளக்கங்களும் 1962-ம் வருஷம் எப்ரல் மாதம், 1-ம் தேதி முதல் இந்தப் பத்து வட்டாரங்களுக்கும் பொருந்தும். சட்டப்படி வசூலிக்க வகை செய்யப்பட்டுள்ள நன்கொடைகளை அல்லது பல்வேறு இனச் செலவுகளில் பங்கு பெறத்தக்க தாமே முன்வந்தளிக்கும் நன்கொடைகளை வசூலிக்கும் விஷயம் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் விடப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை தாலூகாவிலும் உள்ள பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும், பஞ்சாயத்துக்களும், மேலே, குறிப்பிடப்பட்டுள்ள விளக்கங்களின்படி மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மீதி இருக்கும் நான்கு ஆண்டுகளுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து நிறைவேற்ற வேண்டும்.

1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 66-வது பிரிவின்கீழ், சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தை, இணைப்பு 1-ல் கூறப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன்களிடம் 1962-ம் வருஷம் எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் ஒப்படைத்து ஆணை பிறப்பிக்கிறது. ஆணையின் முன் பாராக்களில் கூறப்பட்டுள்ளதற்கொப்பவும், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 838-ல் கூறப்பட்டுள்ள நடைமுறை விளக்கங்களின்படியும் இந்த ஒப்படைப்பு செய்யப்படுகிறது.

இணைப்பு—I

கன்னியாகுமரி மாவட்டம்

1. ராஜாக்கமங்கலம்.
2. மேல்புரம்.
3. கிள்ளியூர்.
4. குருந்தங்கோடு.
5. தோவாளை.
6. அகஸ்தீஸ்வரம்.
7. மஞ்சிரா.
8. திருவத்தார்.
9. தக்காலி.

திருநெல்வேலி மாவட்டம்

10. செங்கோட்டை.

[கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு எப்ரல் மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 973.]

பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர் தேர்தல் விதிகளில் திருத்தம்—உறுதி செய்யப்படுகிறது

(Rules—Madras Panchayats Act, 1958—Election of Chairmen to Panchayat Union Councils—Amendment—Confirmed)

(G.O Ms. No. 1409, R. D. and L. A., Dated 21st June 1962.)

1960-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (தலைவர், துணைத் தலைவர் தேர்தல்) விதிகள் சம்பந்தப்பட்ட சில திருத்தங்களின் நகல், பொது அறிவிப்புக்காகவும் ஆய்வுக்காகவும் 1962-ம் வருஷம் எப்ரல் மாதம் 25-ம் தேதியிட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியிடப்பட்டது. எந்த ஒரு ஆட்சேபனையோ அல்லது ஆலோசனையோ கூறப்படாததால் அந்தத் திருத்தங்கள் இதன் மூலம் உறுதி செய்யப்படுகின்றன.

இணைப்பு

விளம்பரம்

1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் பிரிவு 36, துணைப் பிரிவு (2)-ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக்கொண்டு, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், கிராம நல-தல நிர்வாகத்துறையின் (தல நிர்வாகம்) 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ம் தேதியிட்ட விளம்பரம் -எஸ்.ஆர்.ஓ.எண். ஏ-367/1960 உடன் வெளியிடப்பட்ட 1960-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (தலைவர், துணைத் தலைவர் தேர்தல்) விதிகளில், கீழ்க்கண்ட திருத்தங்களை இதன் மூலம் செய்கிறார்கள்.

திருத்தங்கள்

மேலே சொல்லப்பட்ட விதிகளில்—

(i) விதி 4, துணை விதி (1) உட்பிரிவு (ii)-ல் "பதினைந்து நாட்கள்" என்ற சொற்களுக்குப் பதிலாக "முப்பது நாட்கள்" என்ற சொற்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

(ii) விதி 13-ல் கீழ்க்கண்ட வாக்கியம் நீக்கப்பட வேண்டும். அதாவது,

"பல்வேறு அமைப்புள்ள ஓட்டுச் சீட்டை உபயோகிப்பது, ஓட்டெடுப்பின் ரகசியத் தன்மையை மீறுவதாக அமையும்."

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 21—6—62 தேதியிட்ட அரசாங்க ஆணை 1409.)

" கிராம வானொலி மன்றம் " அமைத்தல்

Panchayats—Installation of Radio Sets—Organisation of Radio Rural Forums

(G. O. Ms. No. 1527, R. D. and L. A., dated 7—7—62)

கிராம நல-தல நிர்வாகத் துறையின், 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 725-லும் 1962-ம்ஆண்டு மார்ச்மீ 31-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 800-லும் "பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்" 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம், 2-ம் தேதிக்குள்ளாக எல்லா பஞ்சாயத்துக்களிலும், ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் வானொலிப் பெட்டி அமைக்கும் வேலையை முடிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்களில் மக்களின் ஆர்வத்தைப் பெருக்குதல், ஆக்கப் பணிகள், அது சம்பந்தமான நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய அவர்களுடைய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுதல் ஆகிய குறிக்கோள்களுடன் கிராமங்களில், " கிராம வானொலி மன்றங்கள் " (Radio Rural Forums) (நிகழ்ச்சிகளைக் கேட்டு, அவைபற்றிக் கூடிப் பேசி—செயல்படும் குழுக்கள்) அமைக்க ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

2. அரசாங்கம் இது விஷயத்தைப் பரிசிலனை செய்தது. மாநிலத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் "கிராம வானொலி மன்றங்கள் " அமைக்கவேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. அதனுடைய முதல்படியாக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கிராமத்தில் ஒரு வானொலியும், அதன் கிராமிய நிகழ்ச்சிகளை முறையே கேட்டுவரும் ஒரு குழுவும் இருக்கும்படி, வேர்ந்தெடுக்கப்படும் கிராமத்தில் " கிராம வானொலி மன்றம் " அமைக்கப்பட வேண்டும். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவருடன் கலந்தாலோசித்து, ஒவ்வொரு, வட்டாரத்திலும் வானொலி இருக்கும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, பஞ்சாயத்துத் தலைவர், கல்வி வளர்ச்சி அலுவலர் ஆகியோரின் துணையுடன், அந்தக் கிராமத்தில், உடனடியாக ஒரு " கிராம வானொலி மன்ற "த்தை அமைக்க, சென்னை நீங்கலாக ஏனைய மாவட்டக் கலெக்டர்கள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு விளக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொரு " கிராம வானொலி மன்ற "மும் குறைந்தபட்சம் இருபது நிகழ்ச்சிகளைக் கேட்பவர்களையும், அவர்களில் ஒருவரை அமைப்பாளராகவும் கொண்டு இயக்கவேண்டும். அவ்வாறு கிராமங்களில் அமைக்கப்பட்ட கிராம வானொலி மன்றங்கள், முதலாவதாக அவைகளுக்கென்று திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து, 1962-ம் ஆண்டு, ஜூலை மாதம், 24-ம் தேதி முதல் ஒவ்வொரு வாரமும், செவ்வாய்க் கிழமைதோறும் ஒலிபரப்பப்படும் பேச்சுக்களை கவனமாக கேட்டுவரும் மன்ற அமைப்பாளரும், கல்வி வளர்ச்சி அதிகாரியும் மன்றத்தின் இதர உறுப்பினர்களுடன், நிகழ்ச்சி நேரத்தில் ஆஜராக இருந்து அகில இந்திய வானொலியினால் ஒலிபரப்பப்படும் மேற்படி சொற்பொழிவுகளைக் கேட்பார்கள். ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சி முடிந்த பின்னர், மன்ற அமைப்பாளர்களும் ஒன்றாக அமர்ந்து, சொற்பொழிவின் முக்கிய விஷயங்களைப் பற்றி விவாதித்து, அவைகளைக் குறித்து, அவர்களுடைய கருத்துக்களை எழுதி, அடுத்த செவ்வாய்க் கிழமைக்கு முன்னதாக, திருச்சிராப்பள்ளி, அகில இந்திய வானொலி நிலைய இயக்குநருக்கு அனுப்பிவைக்கவேண்டும். அதன் பின்னர், நிலைய இயக்குநர், கிராம நல-தல நிர்வாகத் துறையின் பொது ஜனத் தொடர்பு அதிகாரி (அவர் கிராம வானொலி மன்றங்களின் தலைமை அமைப்பாளர், என்கின்ற பதவி வகிப்பவர்) யுடன் தொடர்பு கொண்டு, கிராம வானொலி மன்றங்களின் விமர்சனங்களுக்கு ஏதாவது பதில்கள் தேவைப்பட்டால் அவரிடமிருந்து பெறுவார்.

3. மேலே குறிப்பிட்டபடி, " கிராம வானொலி மன்றங்கள் " தத்தம் மாவட்டங்களின் எல்லா வட்டாரங்களிலும் அமைக்கப்பட்டு விட்டனவா என்பதைக் கலெக்டர்கள் 1962-ம் ஆண்டு, ஜூலை மாதம், 20-ம் தேதி அளவில் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இது சம்பந்தமாக தேவையான நமூனாக்கள் தமிழில் அச்சடிக்கப்பட்டுவருகின்றன. அவை 1962-ம் ஆண்டு, ஜூலை மாதம் 15-ம் தேதி அளவில் விநியோகிக்கப்படும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 7—7—62 தேதியிட்ட அரசாங்க ஆணை 1527,)

'பொது சுகாதாரப் பொறியியல்—நகரமன்றங்களின் வேலைகள் துறை' என்ற தனித் துறை அமைப்பு

(Engineering—Sanitary and other Urban works—Constitution of a separate ' Department of Public Health Engineering and Municipal Works '—Orders passed.)

[G. O. Ms. No. 1500, R.D. and L.A., dated 2—7—62]

ஸ்தல ஸ்தாபனங்களுக்கு, அதாவது, கிராமப் பகுதிகளில் பஞ்சாயத்து யூனியன்கள், கிராமப் பஞ்சாயத்துக்கள், நகரப் பஞ்சாயத்துக்கள், வெளி மாவட்டங்களிலுள்ள நகராட்சிகள் (Municipalities) சென்னை நகரிலுள்ள சென்னை மாநகராட்சி ஆகியவற்றுக்குத் தேவைப்படும் பொறியியல் பணிகளைத் திருத்தி அமைக்கும், பிரச்சினை சில காலத்துக்கு முன்னர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இருந்தது. 1958-ம்

ண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்ட நிறைவேற்றம், பஞ்சாயத்து நிர்வாகத்துக்கு, சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித்திட்ட ஒப்படைப்பு ஆகியவற்றின் விளைவாக நெடுஞ்சாலைத்துறையை, நெடுஞ்சாலைகள்—கிராம வேலைகள்துறை என்று திருத்தியமைக்கப்பட்டது. மாவட்டக் கழகங்கள் கலைக்கப்பட்டு, கிராமப்புரங்களில் பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் செயல்படத் தொடங்கிய பின்னர் அந்த பஞ்சாயத்து ஆட்சிக்கொப்ப மேற்படி நெடுஞ்சாலைத்துறை திருத்தியமைக்கப்பட்டது. நெடுஞ்சாலைத்துறை தலைமை எஞ்சினியரின் பதவி தலைமை எஞ்சினியர், (நெடுஞ்சாலைகள், கிராம வேலைகள்) என்று திருத்தி அமைக்கப்பட்டது.

1. நகரப் பகுதிகளில், நகராட்சிகளுக்குத் தேவைப்படும் பொறியியல் பணிகளை எப்படி திருத்தி அமைப்பது, நகராட்சிகளுடன் சம்பந்தப்பட்ட நகர அமைப்புத் துறையை பொதுப்பணித்துறையுடன் ஒன்று சேர்த்துவிடலாமா என்ற பிரச்சினைகள் அப்போது முடிவு காணாமல் விடப்பட்டன.

2. துப்புறவுப் பொறியியல்துறை முழுதும் ஒரு அரசாங்க அமைப்பேயானபோதிலும், சிறப்பாக நீர் வழங்கு வேலைகள், சாக்கடை வடிகால் வேலைகள், ஆகியவற்றைக் கவனித்துக்கொள்ள ஸ்தல ஸ்தாபனங்களுக்குகென்று அமைந்ததாகும். இந்த துப்புரவுப் பொறியியல் துறை (Sanitary Engineering Department), 1949-ல் திருத்தி யமைக்கப்பட்டு, அதுவரை பொதுப்பணித்துறை கவனித்துவந்த நீர் வழங்கு வேலைகள், சாக்கடை வடிகால் வேலைகள், இந்தத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. இது தற்காலிகமான ஏற்பாடாக செய்யப்பட்டது. இந்த வேலைகளுக்கென்று பொதுப்பணித்துறையிலிருந்து ஒரு சூப்ரண்டிங் எஞ்சினியர் எடுத்துக்கொள்ளப்பட்டார். துப்புரவு, எஞ்சினியரும், பொதுப்பணித்துறையின் தலைமை எஞ்சினியரின் கீழ் பணியாற்றுமாறு செய்யப்பட்டார்.

3. குறிப்பிடப்பட்ட நகராட்சிகளில் மட்டும் நகர மன்ற எஞ்சினியர்கள் (Municipal Engineers) உள்ளனர். மற்ற நகராட்சிகளிலும், குறிப்பிடப்பட்ட நகராட்சிகளிலும், சம்பந்தப்பட்ட நகர மன்றங்களின் அலுவலகப் பணியாளர்களில் பொறியியல் பணியாளர்களும் உள்ளனர். நகர மன்ற எஞ்சினியர்களுக்கு அரசாங்கச் சார்பற்ற பணித்துறை 1936-ம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட நகர மன்றங்களுக்கு என்று அமைக்கப்பட்டது. அந்தப் பணிப்பிரிவு துப்புறவு எஞ்சினியரிடம் (Sanitary Engineer) ஒப்படைக்கப்பட்டது. 1952-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிலிருந்து, நகர மன்ற எஞ்சினியர்கள் அரசாங்கப் பணியாளர்களாக ஆக்கப்பட்டனர். அவர்கள் கீழ்க்கண்டவாறு, பல்வேறு துறைகளின் கீழ் அவற்றுக்கென அமைந்த மாநில அரசாங்கப் பணிகளில் உறுப்பினர்களாகத் தொடர்ந்து இருந்து வருவர் :—

(i) நிர்வாக விஷயங்களில்—

துப்புறவு எஞ்சினியரின் உடனடி மேற்பார்வையிலும், அவர் மூலம் சென்னை பொதுப்பணித்துறை தலைமை எஞ்சினியர்—பொது. அவர்களின் மேற்பார்வையின் கீழும் பணி புரிவர்.

(ii) தொழில் நுட்ப விஷயங்களில்—

(a) பாதை, பாலங்கள் ஆகிய வேலைகள் சம்பந்தப்பட்ட வரையில் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளின்மேற்பார்வையிலும்,

(b) நீர் வழங்கு, சாக்கடை வடிகால் வேலைகள் சம்பந்தப்பட்ட வரையில், பொதுப்பணித்துறையின் துப்புறவுத் பொறியியல் பகுதி அதிகாரிகளின் மேற்பார்வையிலும்,

(c) கட்டட வேலைகளைப் பொறுத்த மட்டில் பொதுப் பணித் துறை எஞ்சினியர்களின் மேற்பார்வையிலும் பணி புரிவர்.

இந்த முறைகளினால், சில நகர மன்றங்கள் தங்கள் வேலைகள் தாமதமாகின்றன என்று அதிருப்தி தெரிவிப்பதுடன் தம் எஞ்சினியர்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்றும் கேட்கின்றன. அந்தக் குறைகள் தீர அதிக அதிகாரங்கள் அளிப்பது மட்டும் போதாது. தொழில் நுட்ப மேற்பார்வைக்கும், நிர்வாகத்துக்கும் திருப்திகரமான ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியமாகும்.

4. நகர மன்ற பொறியியல் பணியில் முக்கியமாக முன்னேற்ற வாய்ப்புக் குறைவினாலும், நகர மன்ற நிர்வாகத்தினர் வகுக்கும் கடுமையான விதி முறைகளினாலுமே திறமை மிக்கவர்கள் நகர மன்ற பொறியியல் பணியில் சேர முன் வரவில்லை என்று அரசாங்கம் கருதுகிறது. ஆகவே, அந்தப் பணித் துறையைக் கவர்ச்சிகரமானதாக்க, நகரமன்ற பொறியியல் பணிகளின் முதல் இரண்டாவது நிலை அமைப்பின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், உயர்ந்த பதவிகளை ஏற்படுத்தவும் வேண்டும் என்று கருதப்பட்டுள்ளது. மேலும், திறமை மிக்கவர்களை, நகரமன்ற பொறியியல் பணிகளில் வேலைக்கமர்த்துவதில் உள்ள கஷ்டங்களைப் போக்க, பொதுப்பணித்துறையின், பொது சுகாதார பொறியியல் பிரிவையும், நகர மன்ற பொறியியல் பணியையும் இணைக்கின்ற பிரச்னையை எடுத்துக்கொள்ளலாம் என்றும், நகர மன்றபொறியியல் பணிகளில் பணி புரியும் பணியாளர்களை அவர்களின் வேலைத்திறனும், துறையில் முன்னேற்ற வாய்ப்பும் மிகுகின்ற வகையில் மாநில நிலைப் பணியாளர்களாக ஆக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

5. இந்திய அரசாங்கமும், இந்த அரசாங்கமும் நீர் வழங்கு, சாக்கடை வடிகால் வேலைகளுக்கு இப்பொழுது அதிக முக்கியத்துவம் அளிக்க இருக்கின்றன. பொது சுகாதாரப் பொறியியல் பிரிவு (Public Health Engineering Branch) சம்பந்தப்பட்ட வேலைகள் விரைவாக நிறைவேற்ற, பொது சுகாதார பொறியியல், துப்புறவு பொறியியல் ஆகியவற்றின் இப்போதைய அமைப்பை அபிவிருத்தி செய்யவேண்டுமா, அப்படியானால் அதை எப்படி செய்யலாம் என்பது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்தது.

மூன்றாவது திட்டத்தின்போது இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைகள் மிகுதியாக உள்ளன என்று அந்தப் பரிசீலனையிலிருந்து தெரிகிறது.

இந்த அமைப்பு, ஒவ்வோராண்டும் சுமார் 1.5 கோடி ரூபாய்க்கு மொத்தச் செலவுகளைச் செய்கிறது. இதற்கு மேலும், சென்னை மாநகராட்சி 1961–62-ம் ஆண்டில் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது. இதே வீதத்தில் வரும் ஆண்டுகளிலும் செலவுகள் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றாவது திட்டக் காலத்தில் மாநகராட்சியல்லாத நகர நீர்வழங்கு திட்டம் ரூ. 7.5 கோடிக்கும், மாநகராட்சித் திட்டங்களுக்காக ரூ. 5 கோடிக்கும் வேலைகள் இருக்கின்றன. அத்துடன் இந்த அமைப்பு காவேரித் திட்டம் போடப்படுமானால் அதையும் தூத்துக்குடி நீர்வழங்குத் திட்டத்தையும் ஏற்று நடத்த வேண்டியுள்ளது. ஆகவே, வேலைகளின் அளவு மிக அதிகமாகி விட்டதால், பொது சுகாதார பொறியியல் அமைப்பு என்று தனியாக இருக்கவேண்டுமா என்ற பிரச்னை எழுந்துள்ளது.

6. சென்னை நகர, நகர மன்ற நிர்வாகத் திருத்த சம்பந்தமாக, மாநில நகர மன்ற பொறியியல் பணித்துறை ஒன்றை அமைக்கலாம் என்று கருதப்பட்டது. அத்தகைய அமைப்பு சம்பந்தமாக ஆலோசனைகளைக் கூறும்படி பொதுப்பணித்துறை தலைமை எஞ்சினியர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

பொதுப்பணித்துறையின் துப்புறவு, பொது சுகாதார பொறியியல் பிரிவுகளை, நகரமன்ற பொறியியல் பணியுடன் ஒன்றாகச் சேர்த்து, மாநிலத்திலுள்ள எல்லா மாவட்ட நகராட்சிகளுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் சேர்த்து ஒரு விரிவுபடுத்தப்பட்ட நகர மன்றப் பொறியியல் பணி அமைப்பை அமைக்கலாம் என்றும், அவ்வாறு அமைக்கப்படும் அமைப்பு, சென்னை மாநகராட்சி, நகராட்சிகளுடன் தொடர்பு கொண்ட நகரமைப்பு உட்பட எல்லா வேலைகளையும், ஆராய்தல், அமைப்பு முறை வரையறுத்தல், நிறைவேற்றல் ஆகிய பணிகளைச் செய்ய தனி பணியாளர்களைக் கொண்டு பொதுப்பணித் துறையின் ஒரு பகுதியாக விளங்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறியுள்ளார். நகர வேலைகளுக்கான இந்தப் பிரிவுக்கு ஒரு இணை தலைமை எஞ்சினியர் (Additional Chief Engineer) அல்லது அந்த நிலையில் பதவிஅளிக்கப் படும் ஒருவரை தலைவராக்கலாம் என்றும், அவருக்குத் தேவையான அளவு சூப்பிரண்டிங் எஞ்சினியர்களை ஏற்படுத்தலாம் என்றும், துப்புறவு எஞ்சினியரை (Sanitary Engineer) சூப்பிரண்டிங் எஞ்சினியர் என்று பதவி மாற்றி, அவருடைய அலுவல்களையும் பொருத்தமாகத் திருத்தலாம் என்று அவர் தமது ஆலோசனையில் கூறுகிறார். நகர மன்ற பொறியியல் பணிகளையும், துப்புறவு பொறியியல் பிரிவையும் ஒன்றாக்குவது அல்லது இணைப்பதன் முதல்படியாக அரசிதழ் பதிவு பெற்ற (Gazetted) பதவிகளை மட்டும் எடுத்துக்கொள்ளலாம் என்றும், மூன்றும் வகை நகர மன்ற எஞ்சினியர்கள், மேற்பார்வையாளர்கள் முதலான கீழ் நிலைப் பதவிகளைப் பின்னால் கவனிக்கலாம் என்றும் யோசனை கூறியுள்ளார்.

7. தனியாக ஒரு நகரமன்றப் பொறியியல் துறையை அமைக்க, மேலே 6-வது பாராவில் கூறப்பட்டுள்ள பொதுப் பணித்துறை தலைமை என்சினியர் (பொது) ஆலோசனைகளை அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்தது. கட்டடங்கள் சம்பந்தப்பட்ட மிகுதியான வேலைகளுடனும், பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கு வேலைகள் அதிகமாக உள்ளது. என்றும் பொதுப்பணித்துறை தலைமை என்சினியர் (பொது) இந்த வேலைகளிலிருந்து போதுமான அளவு விடுபடவேண்டும் என்றும் அரசாங்கம் கருதுகிறது. அதனால், இந்த வேலைகளுக்கு, "பொது சுகாதாரப் பொறியியல். நகர மன்ற வேலைகள் துறை" என்ற ஒரு புதிய துறையை உண்டாக்கவேண்டும் என்றும் அரசாங்கம் கருதுகிறது. இந்தப் புதிய துறையின் தலைவராக (i) எல்லாப் பொது சுகாதாரப் பொறியியல் நகரமன்ற வேலைகளையும் கவனித்துக்கொள்ள பொதுப் பணித்துறையோடு சம்பந்தமற்ற ஒரு தனி தலைமை என்சினியரை அமர்த்தலாம் என்றும், (ii) அவ்வாறு அமர்த்தப்படும் தலைமை என்சினியர், நகரமன்றப் பொறியியல் பணிகள் சம்பந்தப்பட்டமட்டில், கிராம நல-தல நிர்வாகத் துறைக்கும், நகர மன்றங்களின் நிர்வாக அமைச்சருக்கும் பொறுப்பாளராகவும், துப்புறவு, பொது சுகாதாரப் பொறியியல் பணிகளைப் பொறுத்தமட்டில், கல்வி, பொது சுகாதாரத் துறைக்கும், சுகாதார அமைச்சருக்கும் பொறுப்பாளராகவும் விளங்குவார். தேவையான பணிபளுக்கும் முன்னேற்ற வாய்ப்புக்கும் இந்தத் துறையில் இணைந்துள்ள பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இருக்கும் என்றும், பொது சுகாதாரப் பொறியியல் பணிகள், நகர மன்றப் பொறியியல் பணிகள் ஆகியவற்றில் உள்ள பதவிகள் மாற்றிக்கொள்ளப்படலாம் என்றும், அரசாங்கம் கருதுகிறது.

8. 1961-ம் ஆண்டு சென்னை நகரமன்ற மாநகராட்சித் திருத்தச் சட்டம் 86 (1) (i) பிரிவின் கீழ் சென்னைமா நகராட்சியின் வேலை செய்யும் வகுப்பு Iஎ, I பி, வகுப்பு II ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகளைப் பொறுத்த விஷயத்தில், வகைப்படுத்தல், வேலைக்கெடுக்கும் முறைகள், பணிக்கான விதி முறைகள், சம்பளமும், படி வீதகளும் ஒழுங்கு முறையும், ஒழுக்கமும், ஆகியவை பற்றிய விதிகளை மாநில அரசாங்கம் வகுக்க வேண்டும். மாநகராட்சியில் துறைத் தலைவர்களாக (Heads of Departments) விளங்கும் எஞ்சினியர்கள் I-எ வகுப்பின் கீழ் அடங்குவர். "பொது சுகாதாரப் பொறியியல், நகர மன்றங்களின் வேலைகள் துறை" என்ற புதிய துறை, மேலே குறிப்பிடப்பட்ட மாநகராட்சியின் எஞ்சினியர்களையும் உள்ளடக்கியதாக விளங்கும் என்று அரசாங்கம் கருதுகிறது.

9. அதன்படி அரசாங்கம் பிறப்பிக்கும் ஆணைகளாவன.—

(i) ஒரு தனி தலைமை எஞ்சினியரைத் தலைவராகக் கொண்ட "**பொது சுகாதாரப் பொறியியல், நகரமன்றப்**

களின் வேலைகள் துறை" (The Department of Public Health Engineering and Municipal Works) என்ற பெயருடன் கூடிய புதிய துறை உண்டாக்கப்படும்.

(ii) இப்பொழுது, நீர் வழங்குவேலைகள், சாக்கடை வடிகால் வேலைகள் ஆகிய வேலைகளை ஆராய்தல், அமைப்பை வரையறுத்தல், நிறைவேற்றுதல், ஆகிய பணிகளைச் செய்து வரும் துப்புறவுப் பொறியியல் பிரிவும், பொது சுகாதாரப் பொறியியல் பிரிவும், மேற்படி வேலைகளுடன், எல்லா நகர மன்றங்களின் (சென்னை மாநகராட்சி உட்பட) இதர வேலைகளையும் (பாதைகள், கட்டடங்கள்) பராமரித்து வரும் நகர மன்றங்களின் பொறியியல் பணிகளுடன் (Municipal Engineering Services) ஒன்றுக இணைய வேண்டும்.

(iii) மாறுதல் கால நடவடிக்கையாக, இந்தப் புதிய துறை, ஒரு இணைத் தலைமை எஞ்சினியருடனும், அவருக்குக் கீழ் ஒரு துப்புறவு எஞ்சினியர், ஒரு சூப்பிரண்டிங் எஞ்சினியர் (பொதுச் சுகாதாரம்) ஆகியோருடனும் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும்.

(iv) பொதுப் பணித்துறையிலிருந்து இந்த வேலைகளை முழுதும் பிரிப்பதற்கான வழிவகைகளை வகுத்தல், புதிய துறைக்கான சிறப்பு விதிகளை உருவாக்குதல், சென்னை மாநகராட்சியின் கீழ் வேலை செய்யும் என்சினியர்களை இந்தப் புதிய துறையில் சேர்த்தல் ஆகிய வற்றுக்கான நடவடிக்கைகளை, இணை தலைமை எஞ்சினியர் (Additional Chief Engineer) உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அவர் பதவி ஏற்ற நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் அவர், தமது ஆலோசனைகளை அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

10. பொது சுகாதாரப் பொறியியல்—நகர மன்ற வேலைகளின் இணை தலைமை எஞ்சினியர் (Additional Chief Engineer) என்ற பதவியை, ரூ. 1500—50—1800 என்ற சம்பள வீதத்தில் உருவாக்கவும், ஆரம்ப நிலையில், வேலைக்கு அமர்த்தபடும் தேதியிலிருந்து ஆறு மாத காலத்துக்கு அங்கிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இப்போதுள்ள துப்புறவு எஞ்சினியர் பதவியும் (Sanitary Engineer) பொது சுகாதார சூப்பிரண்டிங் எஞ்சினியர் பதவியும், இவர்களுக்குக் கீழ் பணியாற்றும் எல்லா அதிகாரிகளும், சென்னை நகர மன்ற பொறியியலை (மாநில, மற்ற பணியாளர்கள்) சேர்ந்தவர்களும், துப்புறவு பொறியியல் பணியாளர்களும், பொதுப் பணித் துறையைச் சேர்ந்த பொதுச் சுகாதார பொறியியல் பிரிவுகளும், ஆகிய அனைத்தும் இணை தலைமை எஞ்சினியரின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வரும்.

11. இது சம்பந்தமான செலவுகள் "50. பொது வேலைகள் பணியாளர்களும், கருவிகளும், தொழில் நிலயமும்— (e) பணியாளர்கள்—பொது வேலைகள் துறை —G. நகர மன்ற எஞ்சினியர்கள்—4. இதர செலவுகள்" என்ற தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும். இந்தத் தலைப்பின் கீழ், திருப்பி ஒதுக்கத்தக்க வகையில்,தேவையான நிதிகளுக்கு மனுச் செய்துகொள்ள தலைமை எஞ்சினியர் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறார்.

12. இணை தலைமை எஞ்சினியரை (Additional Chief Engineer) அமர்த்துவது குறித்து ஆணைகள் தனியே வெளியிடப்படும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை : 1500-ன் சுருக்கம்).

இந்திய ஆட்சி நிர்வாகப் பணித்துறை—உதவி கலெக்டர்களுக்கு பஞ்சாயத்து அபிவிருத்தி நிர்வாக சம்பந்தமான பயிற்சித் திட்டம்

[Indian Administrative Service—Assistant Collectors—Scheme of Training—Training in Panchayat Development Administration—Instructions—Issued.]

[Memo No. 110775, R. D. and L. A., dated 5th July 1962.]

1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் தேதியிட்ட பொது (ஸ்பெஷல்) துறையினரின் அரசாங்க ஆணை எண். 1329-ல், சென்னை மாநிலத்தில் உதவி கலெக்டர்களுக்கு (Assistant Collectors) இந்தியஆட்சி நிர்வாகத் துறையில் (Indian Administrative Service) நடைமுறைப் பயிற்சி அளிப்பது சம்பந்தமான ஒரு திருத்தப்பட்ட வேலைத் திட்டமானது வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்தப் பட்ட பயிற்சித் திட்டத்தின் கீழ், உதவி கலெக்டர் மற்ற வர்களோடு, ஒரு பஞ்சாயத்துத் தலைவர், ஒரு நகரப் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி, ஒரு கிராம சேவக், ஒரு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், ஒரு டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரி ஆகியோருடன் பயிற்சி பெற வேண்டும். அத்துடன், பஞ்சாயத்து யூனியன் கமிஷனராக நான்கு வாரங்களுக்கு முழுப் பதவியினை அவர் வகிக்கவேண்டும்.

(2) மேலே குறிப்பிட்டுக் காட்டியுள்ள வகையில், உதவி கலெக்டர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி பற்றிய விவரங்கள் மிகவும் கவனத்துடனும் பொறுப்புடனும் தயாரிக்கப்படுகின்ற வகையில் மாவட்டக் கலெக்டர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் நிர்வாகம் சம்பந்தமான முழுத்

தகவல்களையும் பயிற்சி பெறுகின்றவர் தெரிந்துகொள்கின்ற முறையில், பயிற்சித் திட்ட விவரமானது அமைய வேண்டும். உதவி கலெக்டர்களுக்கு பயிற்சி அளிக்கின்ற பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரி, கிராம சேவக், நிர்வாக அதிகாரி, பஞ்சாயத்து தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதில் மாவட்ட கலெக்டர்கள் விசேஷ அக்கறையுடன் அக்காரியத்தைச் செய்யவேண்டும்.

(3) பஞ்சாயத்துத் தலைவரிடம் பயிற்சி பெறுவது சம்பந்தப்பட்டமட்டில், இதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பஞ்சாயத்து, ஒரு கிராமப் பஞ்சாயத்தாக இருக்க வேண்டும். இதனால், பஞ்சாயத்தின் தலைவர் அத்துடன் அதனுடைய நிர்வாக அதிகாரி என்ற இரண்டு வகைகளிலும் பஞ்சாயத்துத் தலைவர் பணியாற்றுகின்ற முறையினை, பயிற்சி பெறுகின்ற உதவி கலெக்டர் அறிந்து கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையும்.

(4) பஞ்சாயத்து அபிவிருத்தி நிர்வாகம் சம்பந்தமட்டில், பயிற்சியில் மிக முக்கியமான பகுதி, உதவி கலெக்டர் நான்கு வார காலம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருடன் பயிற்சி பெறுதலும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனராக முழுப் பொவப்பேற்று நான்கு வார காலம் பணியாற்றுதலுமேயாகும். இந்தப் பயிற்சிக் காலவரையறையானது, அதனால் அதிகமான பயனைப் பெறுகின்ற முறையில் அமைதல் வேண்டும். உதவி கலெக்டர், பஞ்சாயத்து யூனியன் அலுவல்கள் எப்படி நடைபெறுகின்றன என்பதுபற்றி முழுக்க முழுக்க அறிந்துகொள்ளும் வகையிலும், அத்துடன், பஞ்சாயத்து யூனியன் தலைவர், கவுன்சிலர்கள், சிப்பந்திகள் ஆகியோருடன் கமிஷனர் ஏற்படுத்திக் கொள்கின்ற பயன்தரத்தக்க நெருங்கிய தொடர்பு, அத்துடன் பொதுமக்களுடன் அவர் விரிவாக கொள்கின்ற தொடர்பின் அம்சங்கள், சிறப்பியல்புகள்பற்றியும் உதவி கலெக்டர் அறிந்துகொள்கின்ற வகையில், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் நடந்துகொள்ளவேண்டும்.

(5) பயிற்சி பெறுகின்ற உதவி கலெக்டர், வட்டார அபிவிருத்தி அதிகாரி—பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் என்ற பதவியின் முழுப் பொறுப்பேற்றுக்கொள்ளும் பொழுது, அந்த நேரத்தில் அந்தப் பதவியை வகித்து வருகின்ற வட்டார அபிவிருத்தி அதிகாரி—பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், அதே வட்டாரத்தில் கூட்டு வட்டார அபிவிருத்தி அதிகாரியாக நியமனம் செய்யப்படவேண்டும். அந்த தகுதி முறையில், உதவி கலெக்டருக்கு, அவருடைய பணியினை அவர் ஆற்றுவதற்கு எல்லாவகையான ஒத்துழைப்பினையும் வட்டார அபிவிருத்தி அதிகாரி அளிக்கவேண்டும். 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 44 (1)-வது பிரிவின் கீழ் ஒரு பஞ்சாயத்து யூனியனின் கமிஷனராக ஒருவரை நியமனம் செய்வது, கிராம அபிவிருத்திக் கமிஷனரால், 1960-ம் வருஷம் டிசம்பர் மாதம் 15-ம் தேதியிட்ட கிராமநல-தல-நிர்வாகத்துறையின் அரசாங்க ஆணை எண் 1056-ன்படி அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் செய்யப்படவேண்டும். ஆகவே, பயிற்சி பெறுகின்ற உதவி கலெக்டரை பஞ்சாயத்து யூனியன் கமிஷனராக நியமனம் செய்வதுபற்றி, மாவட்டக் கலெக்டர்கள் பொருத்தமான சமயத்தில் கிராம அபிவிருத்திக் கமிஷனருக்கு, கோரிக்கைகளை அனுப்பிவைக்கவேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ந் தேதியிட்ட அறிக்கை எண் : 110775.)

மாவட்டக் கலெக்டர் அலுவலகங்களையும், கோட்ட ஆட்சி அலுவலகங்களையும் திருத்தி அமைத்தல்—பஞ்சாயத்து அபிவிருத்திப் பகுதிகளையும், பஞ்சாயத்து அபிவிருத்திப் பிரிவுகளையும் அமைத்தல்

[Panchayat Development—Re-organisation of District Collectorates and Divisional Offices—Constitution of Panchayat Development Branches and Panchayat Development Sections—Orders issued.]

[G.O.Ms. No. 1426, R.D. and L.A., dated 25th June 1962]

1958-ம் ஆண்டு புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ், கலெக்டர், கோட்ட அதிகாரிகள் (Divisional Officers) ஆகியோரின் கடமைகளை ஒட்டி, கலெக்டர் அலுவலகங்கள், கோட்ட ஆட்சி அலுவலகங்கள் ஆகியவற்றின் பணியாளர் அமைப்பு முறையைத் திருத்தி அமைக்கும் விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இப்போது, கலெக்டர் அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும், பஞ்சாயத்து அபிவிருத்தி நிர்வாக சம்பந்தமான பல்வேறு வேலை இனங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பல ஏற்கனவே இவற்றுடன் தொடர்பற்ற பல வேலைகளைச் செய்து வருகின்றன. ஆகவே, பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட அத்தகைய வேலைகளையெல்லாம், ஒரு ஒழுங்கான அமைப்பில் கவனித்து வரும் வகையில், கலெக்டர் அலுவலகத்தில் ஒரு தனியான தன் நிறைவுள்ள பிரிவைத் தோற்றுவிப்பது தேவை என்று கருதப்படுகிறது. அந்தப் பிரிவு மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் செயலகமாகவும் (Secretariat) பணியாற்ற வேண்டும் என்றும் கருதப்படுகிறது.

பஞ்சாயத்து அபிவிருத்தி நிர்வாகம் கீழ்க்கண்டவை களைக் கொண்டதாவயாக இருக்கும் :—

(i) "அரசாங்கம்", "மேற்பார்வையாளர்" (Inspector), "வரவு செலவுத் திட்ட அதிகாரி" (Budget Officer), இதர மேற்பார்வை, கண்காணிப்பு அதிகாரிகள் ஆகியோரின், சட்ட பூர்வமான அலுவல்களைச் செய்ய சட்டப்படி அதிகாரமளிக்கப்பட்டுள்ள மேற்படி அதிகாரி களின் அமைப்பு உட்பட, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ் சாயத்துச் சட்ட நிர்வாகம்.

(ii) பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றுக்கு அரசாங்கம் வழங்கும் மானியங்கள், கடன் கள் பற்றிய நிர்வாகம்.

(iii) பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றின்கீழ் பணி செய்ய பயிற்சி பெற்ற நிர்வாக, தொழில் நுட்ப அதிகாரிகளை அளித்து வகை செய்வது முதலான அரசாங்க உதவிபற்றிய நிர்வாகமும், அத்தகைய அதிகாரிகளின் வேலை மேற்பார்வை ஒழுங்குமுறை முத லியனபற்றிய நிர்வாகமும்.

(iv) பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் தேசிய ஐந்தாண்டுத் திட்டத்தில் பங்குபெறத் தேவை யான இதர எல்லா வகையான அரசாங்க உதவிகள் பற்றிய நிர்வாகமும்.

(v) மாநில அரசாங்கத்தின் பல்வேறு அபிவிருத்தித் துறைகள் தம் நடவடிக்கைகளில், தமக்குள் ஒன்றுடன் ஒன்றும், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றுடனும் நிர்வாக ஒருமைப்பாட்டு நிலையும், அத் தகைய ஒருமைப்பாட்டு நிலையை உண்டாக்குகின்ற குறிக் கோளுடன், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட அபி விருத்தி மன்றங்கள் சட்ட நிர்வாகமும்.

கலெக்டர், அதிகாரப் பற்றற்ற பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள், அபிவிருத்தித் துறைகளின் மாவட் டத் தலைமை அதிகாரிகள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு விளக்கங்கள் அளிக்கவேண்டி யிருப்பதால், அவர் தன்னுடைய அலுவலக வேலையில் முழுக் கவனத்தையும் காட்டி, திறமையாகப் பணி புரி வது கடினமாகும். பஞ்சாயத்து அபிவிருத்தியில், அதி காரப் பற்றற்றோரும், அதிகாரிகளும் ஒன்றாக வேலை செய்யவேண்டியுள்ளது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன் தலைவர் தம் பிரச்சினைகளுக்கு அணுகக்கூடிய அதிகாரி ஒருவராகவே இருக்கவேண்டியதும் அந்த அதிகாரி பொது ஜனப் பிரதிநிதிகளுக்கும் அந்த மாவட்டத் துறைகளுக்கும் ஒரு இணைப்பாக இருக்கவேண்டியதும் அவசியமாகும். தம்முடைய பொறுப்பில் ஒரே அபிவிருத்தி மாவட்டமாகக் கொண்டுள்ள கலெக்டர் விஷயத்தில் இது எளிதில் சாத் தியமாகும். ஒரு மாவட்டக் கலெக்டரின் கீழ் இரண்டு அபிவிருத்தி மாவட்டங்கள் இருக்கும் விஷயத்தில், கலெக் டரின் கீழ் பணிபுரியும் தலைமை அதிகாரி, பஞ்சாயத்து யூனியன்களின் சரிபாதியுடனும், மாவட்ட அபிவிருத்தித் துறைகளின் தலைமை அதிகாரிகளுடன் ஒரு பகுதியுடனும் தொடர்புகொள்ள வேண்டியது தேவையாகிறது. ஆகவே, இரட்டை மாவட்டங்கள் உள்ள கலெக்டர் அலுவலகத்தில் பஞ்சாயத்து அபிவிருத்தி நிர்வாகம் சம்பந்தப்பட்ட பணி யாளர்கள் நிலை, பிரதேச விஷயத்தில் அபிவிருத்தி மாவட்டங்களின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டருக்குக் கீழ் அமர்த்தப்படும் ஒரு முக்கிய அதிகாரியின் கீழ், ஒரு பஞ்சாயத்து அபி விருத்திப் பிரிவு இருக்க வேண்டும். அந்தப் பிரிவு, அபி விருத்தி மாவட்டம் ஒவ்வொன்றினுடைய பஞ்சாயத்து அபிவிருத்தி நிர்வாக வேலைகளைக் கவனிக்கும்.

அரசாங்கம், கலெக்டர்களைக் கலந்தாலோசித்து, பஞ் சாயத்து அபிவிருத்திப் பிரிவுகளின் பணியாளர்களை ஒவ் வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(i) ஒவ்வொரு அபிவிருத்திப் பிரிவும், தனி உதவி யாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி) (Personal Assistant-Panchayat Development), என்ற அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரியின்கீழ் (Gazetted Officer) பணிபுரியும். அவருடைய சம்பள வீதம் ரூ. 375—25—800 ஆக இருக்கும்.

(ii) அபிவிருத்திப் பிரிவு தனக்குள் மூன்று பகுதி களைக் கொண்டிருக்கும்.

(a) "பஞ்சாயத்து அபிவிருத்தி சரிஸ்தாதார்" என் பவர், ஒரு பகுதியின் தலைவராக விளங்குவார். அந்த அதிகாரி, தாசில்தாராகவோ அல்லது பஞ்சாயத்து யூனி யன் கமிஷனராகவோ (இரண்டுமாக இருந்தவராக இருப் பது விரும்பத்தக்கது) முன் அனுபவம் பெற்றவராக இருப்பார். அவருடைய சம்பள வீதம் ரூ. 250—15—400 ஆக இருக்கும்.

(b) மற்ற இரண்டு பகுதிகளின் தலைவர்களாக, ரூ. 200—5—240—10—270 என்ற சம்பள வீதத்தில் பஞ்சாயத்து அபிவிருத்தித் தலைமை குமஸ்தாக்கள் என்பவர்கள் பணி யாற்றுவார்கள். (அவர்கள் உதவி தாசில்தார் நிலையில், ரெவினியூ இலாகா அதிகாரிகளாக, அல்லது பஞ்சாயத்து அபிவிருத்தி வேலையில் முன் அனுபவம் பெற்ற, அதற்குச் சமமான நிலையில் இருப்பார்கள்.

அந்தப் பிரிவுக்குக் குமஸ்தாக்கள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுவார்கள் :—

அபிவிருத்தி மாவட்டங்களின் குழுக்கள்.	செங்கற்பட்டு, தெற்கு சேலம் அபிவிருத்தி மாவட்டங்கள்.	18 முதல் 22 பஞ்சாயத்து யூனியன்கள் உள்ள அபிவிருத்தி மாவட்டங்கள்.	18-க்குக் குறைந்த பஞ்சாயத்து யூனியன்கள் உள்ள அபிவிருத்தி மாவட்டங்கள் (கன்யாகுமரி, நீலகிரி நீங்கலாக.)
பஞ்சாயத்து அபிவிருத்திக் கணக்கர் (Accountant) (150—5—200.)	1	1	1
மேல் நிலை குமஸ்தாக்களின் எண்ணிக்கை (125—5—175).	11	9	7
கீழ் நிலை குமஸ்தாக்களின் எண்ணிக்கை (90—4—110—3—140) [பட்டதாரிகளுக்கு ரூ. 102-ல் தொடங்கலாம்.]	6	5	4

கோட்ட ஆட்சி அலுவலகத்தில் (Office of the Revenue Divisional Officer) நடைபெறும் பஞ்சாயத்து அபிவிருத்தி சம்பந்தப்பட்ட வேலைகளையும் திருத்தி அமைக்கவேண்டியது தேவை என்று அரசாங்கம் கருதுகிறது. 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் 144-வது பிரிவின் கீழ், கோட்ட ஆட்சித் தலைவர் (Revenue Divisional Officer) மேற்பார்வை அதிகாரியாகவும், தணிக்கை (Audit) அதிகாரியாகவும் ஆக்கப்பட்டிருக்கிறார். மேற்படி வேலையில் அவருக்குத் துணையாக இருக்க கோட்ட பஞ்சாயத்து அதிகாரிகள் (Divisional Panchayat Officers) அமர்த்தப்பட்டுள்ளனர். இப்பொழுது, 300 பஞ்சாயத்துக்களுக்கு மேல் உள்ள கோட்டங்களில், ஒரு முழு தாலூகாவின் பொறுப்பேற்றிருக்கும் கோட்ட பஞ்சாயத்து அதிகாரிக்கு உதவியாக, ஒரு இணைபஞ்சாயத்து அதிகாரியை, ரூ. 200—5—240—10—270 என்ற சம்பள வீதத்தில் அமர்த்த அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

பஞ்சாயத்து அபிவிருத்திப் பிரிவு, பஞ்சாயத்துத் தணிக்கை உட்பட, எல்லா பஞ்சாயத்து அபிவிருத்தி விஷயங்களையும் கவனித்துக்கொள்ளும் ஒரு தன் நிறைவுள்ள பிரிவாக விளங்கும். கன்னியாகுமரி, நீலகிரி நீங்கலாக, ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திலும் அத்தகைய பிரிவுக்குப் பணியாளர்கள் கீழ்க்கண்டபடி இருக்க வேண்டும்.

" **பஞ்சாயத்து அபிவிருத்தி தலைமைக் குமஸ்தா** " எனப்படுபவர், ரூ. 200—5—240—10—270 என்ற சம்பள வீதத்தில், அப்பிரிவுக்குத் தலைவராகப் பணிபுரிவார்.

ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்திப் பிரிவுக்கும் ரூ. 150—5—200 என்ற சம்பள வீதத்தில் ஒரு **கணக்கர்** (Accountant) இருப்பார்.

மேலும், ஒவ்வொரு இரண்டு வட்டாரங்களுக்கும் இரண்டு குமஸ்தாக்கள் வீதம், உயர்ந்த அளவு 6-க்கு உட்பட்டு இருப்பர். அந்த 6-ல் (மேல் நிலைக் குமஸ்தாக்கள் 4 பேரும் (125—5—175 என்ற சம்பள வீதத்தில்), 2 பேர் கீழ் நிலைக்குமாஸ்தாக்களாகவும் (90—4—100—3—140 என்ற சம்பள வீதத்தில்) இருப்பார்கள். இதற்கு மேலும் தணிக்கை வேலைகளுக்கென்று, ஒரு மேல் நிலைக் குமஸ்தாவாவது இருக்கவேண்டும் என்ற விதிக்குட்பட்டு, 100 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு குமஸ்தா வீதம் இருப்பார்கள்.

[கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1426-ன் சுருக்கம்.]

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் தமிழாக்கம்

" கிராம நலம் "—அக்டோபர், 62—இதழின் அனுபந்தமாக வெளிவரும்

தமிழ்நாடு முழுதும் புதிய பஞ்சாயத்து ஆட்சி செயல்படத் தொடங்கிய பின்னர், தமிழில், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் பிரதிகள், பஞ்சாயத்துத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோரின் உபயோகத்துக்காக, வேண்டும் என்று பல முறை, பலரால் கேட்டுக்கொள்ளப்பட்டு வந்தது. இந்த வேண்டுகோளை நிறைவேற்றுகின்ற முறையில், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின், அதிகார பூர்வமான தமிழ் மொழிபெயர்ப்பை, 1962-ம் ஆண்டு அக்டோபர் மாத "கிராம நல" இதழுடன் சேர்த்து அனுபந்தமாக வெளியிடுவது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1446-ஐக் காண்க.)

கிராம வானொலி மன்றங்கள்—அமைத்தல்

(Panchayats—Radio Rural Forums-Organisation of)

[Memorandum No. 133539, R.D. & L.A., dated 11-7-1962]

கிராம வானொலி மன்ற அமைப்பு பற்றிய விவரங்கள் இணைப்பு I-ல் தரப்பட்டுள்ளன. (இந்த விவரங்கள் இந்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள "கிராம வானொலி மன்றங்கள்" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை).

மன்றப் பதிவேடு வைத்திருக்க வேண்டிய முறைபற்றி கிராம வானொலி மன்றத் தலைமை அமைப்பாளர் (Chief Organiser, Radio Rural Forums) வெளியிட்டுள்ள சில குறிப்புகள் இணைப்பு II-ல் வெளியிடப்பட்டுள்ளன. மன்றப் பதி வேட்டுக்குத் தேவையான நமூனு அமைப்பின் தமிழாக்கம் இணைப்பு III-ல் உள்ளது.

ஒரு எளிய அடிப்படையான பதிவேடு மட்டுமே மன்றத்தில் வைத்திருக்க வேண்டும் என்றும், 1-வது பத்தியில் உள்ள பெயர்களை விட்டு, கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டும் குறித்து, பிரதி எடுத்து சென்னை கிராம நல தல நிர்வாகத் துறை கிராம வானொலி மன்றங்களின் தலைமை அமைப்பாளருக்கும் திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலைய இயக்குநருக்கும் அனுப்ப வேண்டும் என்றும் கண்டோம். அந்தப் பிரதியில், 3-வது பத்தியில் குறிக்கப்பட்டுள்ள விஷயங்கள் மட்டுமே இருக்க வேண்டும். 2-வது பத்தியில் குறிக்கப்படும், விவாதத்தின் சுருக்கம் பிரதி எடுத்து அனுப்பப்படத் தேவையில்லை.

திருச்சிராப்பள்ளியில் நடந்த பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்களின் மூன்று நாள் மகா நாட்டில், முதலமைச்சர் நிகழ்த்திய துவக்க உரையும், மத்திய அரசாங்க, சமுதாய அபிவிருத்தி, கூட்டுறவுத் துறை அமைச்சர், தமிழ் நாடு அரசாங்கத் தலைமைச் செயலாளர், கிராம அபிவிருத்திக் கமிஷனர், தமிழ் நாடு பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஆகியோர் நிகழ்த்திய சொற்பொழிவுகளும் "பஞ்சாயத்து அபிவிருத்தியும் தேசிய ஒருமைப்பாடும்" என்ற தொடரில் "கிராம வானொலி மன்ற" நிகழ்ச்சிகளில் 24-7-1962 முதல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் ஒலிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சிகளை செவ்வாய்க்கிழமை தோறும் மாலை 6-30 முதல் 7-15 வரை திருச்சிராப்பள்ளி, சென்னை வானொலிகளில் கேட்கலாம். இச் செய்திகள் "கிராம வானொலி மன்ற"ங்களை அமைக்கின்ற வேலையை விரைவில் முடிக்கும் பொருட்டு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுககு அறிவிக்கப்படுகிறது.

இணைப்பு—I

"கிராம வானொலி மன்றங்கள்" அமைத்தல் பற்றிய குறிப்புகள் :

1. 'கிராம வானொலி மன்றம்' என்றால் என்ன ?

"கிராம வானொலி மன்றம்" என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்கவும், அறிவு வளர்ச்சிக்கும், செய்திகளை அறியவும் தமக்குள் கூடிப் பேசவும் இந்த முறையில் தாம் அறிந்தவற்றை நடைமுறையில் கொண்டு வரவும் கிராமவாசிகள் 20 பேர் சேர்ந்து அமைத்துக் கொண்ட ஒரு குழுவாகும். கிராம வானொலி மன்றம் ஒரு பொழுது போக்கு நிறுவனமோ அன்றி அதிகாரங்கள் செலுத்தவென்றமைந்த அரசாங்க குழுவோ அல்ல. அது ஒரு சமூக கல்வி நிலையம் போன்றது. சுருக்கமாகக் கூற வேண்டுமானால், கிராம மக்களின் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டு, அது குறித்து விவாதித்து அதனால் பலன் பெறும் ஒரு அமைப்பாகும்.

2. 'கிராம வானொலி மன்ற'த்தை அமைக்கும் பொறுப்பு

கிராம வானொலி மன்றத்தை அமைக்கும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன் கமிஷருடையதாகும். இந்தப் பொறுப்பை அவர் கல்வி வளர்ச்சி அதிகாரியின் மூலம் நிறைவேற்றுவார்.

3. மன்றத்தின் உறுப்பினர்கள் யார் ?

விவசாயத்திலும் இதர கிராமியத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ள வயது வந்தோரும் நடுத்தர வயதினரும் உறுப்பினராக சேர்க்கப்பட வேண்டும். படித்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கும் பட்சத்தில், விவாதங்களில், படிக்காத உறுப்பினர்களின் கருத்துக்களை தடையின்றி வெளியிடும்படி நடந்துகொள்ள வேண்டும். தம் கருத்தையே அவர்கள் வலியுறுத்தக் கூடாது. படித்தவராக இருப்பினும், படிக்காதவராக இருப்பினும் எல்லா உறுப்பினர்களும் சம அந்தஸ்துள்ளவர்களேயாவார்கள்.

அமைப்பாளரும், அவர் கடமைகளும்

ஒவ்வொரு மன்றத்திற்கும் 20 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். கல்வி வளர்ச்சி அதிகாரி, உறுப்பினர் பட்டியலைப் பற்றி முடிவு செய்யும் முன்னர், பஞ்சாயத்து யூனியன் கமிஷனருடன் கலந்து பேசுவதுடன், தலைவர், அமைப்பாளர் பற்றியும் அவருடைய ஆலோசனையைக் கேட்டறிய வேண்டும். உறுப்பினர் பற்றிய பதிவேடு தொடங்கப்பட வேண்டும். அமைப்பாளரும், தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

அமைப்பாளர் படித்தவராக இருக்க வேண்டும். ஏனெனில், மன்றத்தின் விவாதங்களைப் பற்றிய அறிக்கைகளை அனுப்ப வேண்டியதிருக்கிறது. அவர் மன்றத்தை நடத்துவதில் ஆர்வமும், வேலையில் உற்சாகமும் உள்ளவராக இருக்க வேண்டும். மன்றப் பதிவேடு வைத்திருக்க வேண்டிய பொறுப்பு இவருடையதேயாகும்

4. தலைவர்

மன்றத் தலைவர், சுமுகமான முறையில் விவாதங்களை நடத்தக்கூடியவராக இருக்க வேண்டும். அவர் கிராம முன்னேற்றத்தில் அக்கரை யுள்ளவராகவும், பிறருடைய கருத்துக்களை மதித்து, அவற்றை அவர்கள் வெளியிட இடமளிப்பவராகவும், அவருடைய சொற்களுக்கு உறுப்பினர் மதிப்பளிக்கத் தக்க தகுதியுடையவராகவும் இருக்க வேண்டும். அவர் படித்தவராகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை ஆனல் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தக் கூடிய தகுதியுள்ளவராக இருக்க வேண் வேண்டும்

5. மன்றக் கூட்டம்

மன்ற அமைப்பாளர், மன்றக் கூட்டம் நடப்பதை முன் கூட்டி அறிவிப்பதற்கான தகுந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். பொதுவாக ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் (மாலை 6-20 மணியிலிருந்து 8 மணி வரையில்) மன்றத்தினர் கூட வேண்டும் என்று இருக்கிறது. எனினும் சில செய்திகளை வாய்மொழியாகவோ, அறிவிப்புப் பலகையின் மூலமோ, அல்லது உள்ளூரில் நடைமுறையில் இருக்கும் (தண்டோரா போன்ற) முறைப்படியோ எடுத்துக் கூற வேண்டியிருக்கும். இரண்டாவதாக, வானெலி நிகழ்ச்சி தொடங்குவதற்கு குறைந்த பட்சம் 10 நிமிஷங்கள் முன்னதாக உறுப்பினர்கள் வந்து, தங்கள் இடங்களில் அமர்ந்து விடவேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறார்கள். மன்ற அமைப்பாளர், உறுப்பினர்களை வர வேற்று அமரச் செய்ய வேண்டும். உறுப்பினர்களுக்கு வானெலிப் பெட்டிக்கு மிக அருகில் இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

உறுப்பினர் அல்லாதவர்கள், பிற இடங்களில் அமர்ந்தோ, நின்றோ நிகழ்ச்சிகளைக் கவனிக்கலாம். வெளியூர் பார்வையாளருக்குத் தகுந்த இடம், ஒதுக்கலாம். அந்த இடம் உறுப்பினர்களின் இடத்திற்கு அடுத்த இடமாக இருப்பது நலம். மூன்றுவதாக, மன்ற அமைப்பாளரே, வானெலிப்பெட்டியில், "கிராம வானெலி மன்ற " நிகழ்ச்சியைத் திருப்பி வைப்பதுடன், நிகழ்ச்சி நடைபெறும் பொழுது, சத்தமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மன்ற நிகழ்ச்சி முடிந்ததும் வானெலியை நிறுத்திவிட வேண்டும். நான்காவதாக, உறுப்பினர்களுக்கு, கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொழுது அணிந்து கொள்ள காகிதத்திலோ துணியிலோ செய்த அணி வில்லைகளைக் (Badges) கொடுக்கலாம் (கல்வி வளர்ச்சி அதிகாரியும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனரும் பயிற்சி முகாம்கள் நடத்திய அனுபவங்களைக் கொண்டு, கலையழகுள்ள வில்லைகளைத் தயாரித்துக் கொள்ளலாம்).

எல்லா உறுப்பினர்களும், வகுப்பறையில் உட்கார்ந்திருக்கிற மாதிரியில்லாமல், வட்ட வடிவமாக, யாருக்கும் முக்கியத்துவம் குறையாத வகையில் உட்காரவேண்டும்.

6. விவாதம் நடத்துவது எப்படி ?

விவாதத்தின் போது உறுப்பினர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பேச வேண்டும். விவாதத்தின் முதற்படியாக, வானெலி நிகழ்ச்சியிலிருந்து, உறுப்பினர்கள் தாங்கள் அறிந்து கொண்ட புதிய செய்திகளை எடுத்துக் கூற வேண்டும் அதே நேரத்தில் அவைகளைக் குறித்துத் தம் அனுவத்தின் அடிப்படையில் தம்முடைய கருத்தையும் வெளியிட வேண்டும். மேலும், அவர்கள் வானெலி நிகழ்ச்சியில் அறிந்தவற்றை, அல்லது விவாதித்தவற்றை எந்த அளவுக்கு நடைமுறையில் கொண்டு வர முடியும் என்பதையும் எடுத்துப் பேசலாம். ஆகவே, விவாதங்கள் (i) உறுப்பினர்கள் புதியதாக அறிந்த செய்திகள், (ii) பிரச்சினைகளைப் பற்றி உறுப்பினர்களின் மனப்பான்மை, (iii) கேட்ட நிகழ்ச்சி, நடந்த விவாதம் இவற்றின் பயனுக கிராமத்தில் தொடர்ந்து ஏற்படத்தக்க முன்னேற்றம் முதலியவைகளை எடுத்துக் காட்டுவதாக அமைய வேண்டும்.

7. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களின் பொறுப்புக்கள்

வட்டாரத்தில் கிராம வானெலி மன்றங்கள் அமைத்தல் செயல் படுதல் பற்றிய மொத்தப் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன் கமிஷனருடையதாகும். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் இந்த மன்றத்தை, முதலிலிருந்தே திட்டத்தில் மக்கள் ஈடுபாட்டை எடுத்துக் கூறும் தொடர்பாகக் கருத வேண்டும்.

(இந்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள, 'கிராம வானெலி மன்றங்கள்' –பிரதேச அமைப்பாளர்க்கு விளக்க நூல்" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகளின் சுருக்கம்.)

இணைப்பு—II.

மன்றப் பதிவேட்டை வைத்திருப்பதற்கான விளக்கக் குறிப்புகள் :

பஞ்சாயத்து அளவில், "கிராம வானெலி மன்ற " அமைப்பாளர்கள், கிராமங்களில் இந்த மன்றங்களை அமைப்பது பற்றிய தம்முடைய புதிய கடமைகளைக் குறித்தும் பொறுப்புகளைக் குறித்தும் நன்கு அறியுமாறு விளக்கம் பெற வேண்டும். இப் போதைக்கு, அமைப்பாளர் 200-பக்கம் பவுண்டு நோட்டுப் புத்தகம் ஒன்றை வாங்கிக் கொள்ள வேண்டும். பவுண்டு நோட்டுப் புத்தகத்தின் விலையையும், மன்றத் தபால் செலவையும்

பஞ்சாயத்து எற்கும். மன்ற நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கைகளைத் தயாரிப்பது குறித்து, அமைப்பாளர்களுக்குக் கல்வி வளர்ச்சி அதிகாரி தேவையான விளக்கங்களை அளிப்பார்.

இந்த அறிக்கைகள் எளிய நடையில் எழுதப்பட வேண்டும். விவாதம், அகில இந்திய வானொலியில் ஒலி பரப்பப்பட்ட பேச்சின் அடிப்படையில், அவை கிராம வாழ்க்கைக்கு, அனுபவ பூர்வமாகப் பொருந்தும் வகையில் அமைய வேண்டும்.

ஜூலை 24, 31, ஆகஸ்டு 7, 14, 21 தேதிகளில் ஒலி பரப்பப்படும் சொற்பொழிவுகளை, பஞ்சாயத்து யூனியன் அளவில் பணியாற்றும் கிராம நல-தல நிர்வாகத் துறையின் பிரதேசப் பணியாளர் எல்லோரும் கோட்ட அளவில் வானொலி மேற்பார்வையாளர்கள் (Radio Supervisors), கோட்டப் பஞ்சாயத்து அதிகாரிகள் ஆகியோர் அனைவரும் கேட்பது விரும்பத் தக்கதாகும். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், "கிராம வானொலி மன்ற" அமைப்பு பற்றிய தம்முடைய ஆலோசனையையும், கருத்துக்களையும், கிராம நல- தல நிர்வாகத் துறையின் "கிராம வானொலி மன்ற"ங்களின் தலைமை அமைப்பாளருக்கு, நேராக அனுப்பி வைக்கலாம்.

இணைப்பு—III.

கிராம வானொலி மன்றம்
(RADIO RURAL FORUM)

மன்றத்தின் பதிவேடு
(Forum Register)

(Tamil version of the 'Form' prescribed for the use of the Radio Rural Forums in Madras State.)

மன்றம் உள்ள பஞ்சாயத்தின் பெயர் :
(Name of the Panchayat in which the Forum is functioning).

மாவட்டம் : (District).

தாலுகா : (Taluk).

பஞ்சாயத்து யூனியன் : (Panchayat Union).

ஒலிபரப்பும் தேதி :
(Date of broadcast).

ஆரம்ப நாள்
நேரம் : (Time).

ஒலிபரப்பில் அடங்கிய முக்கிய பொருள் :
(Subject of broadcast).

வந்திருந்த அங்கத்தினர்களின் விவரம். (Members present.)	கூடிப்பேசிய முக்கிய விஷயங்களின் சுருக்கம். (Gist of the dicussions.)	அங்கத்தினர்களின் கேள்விகளில் முக்கியமானவை. (Questions.)	கருத்துரைகள். (Remarks.)
(1)	(2)	(3)	(4)
பெயர் : (Name) எண்ணிக்கை : 1. 2. 3. 4. 5. 6.			மன்ற அமைப்பாளர், மன்றத் தலைவர், கல்வி வளர்ச்சி அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் ஆகியோரின் கருத்துரைகள்:

மொத்தம் :

மன்ற அமைப்பாளரின் கையெழுத்து :
(Signature of the Convener of the Forum).

மன்றத் தலைவரின் கையெழுத்து :
(Signature of the Chairman of the Forum).

N.B.—Extract of this form (omitting the particulars in Column No. 2 and the names in Column 1, but giving the total number of the numbers present) should be sent by the Panchayat Union Commisioner, with the assistance of the Extension Officer (Education), to :—

(i) The Station Director, All India Radio, Tiruchirapalli ; and
(ii) The Chief Organiser, Radio Rural Forum, Rural Development and Local Administration Department, Secretariat, Madras-9.

திருத்திஅமைக்கப்பட்ட மாநிலக் குடும்பக்கட்டுப்பாடு போர்டு

[Family Planning—State Family Planning Board—Re-Constitution—Orders.]

(G.O. Ms. No. 1430, Health., dated 18-6-62.)

சுகாதாரத் துறையின் 1956-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2277-ல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்துக்கு குடும்பக் கட்டுப்பாடு முறையைப் பரப்ப, குடும்பக் கட்டுப்பாடு போர்டு அமைக்க அரசாங்கம் அனுமதித்துள்ளது 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் தேதி யிட்ட அரசாங்க ஆணை 2790-ல் அந்த போர்டின் காலவரையறையை 1962-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி வரை விரிவுபடுத்தி ஆணையிடப்பட்டது. இந்த போர்டு இன்னும் விரிந்த அளவில், அபிவிருத்தி மாவட்டங்களிலிருந்து அதிகாரப் பற்றற்ற பிரதிநிதிகள் இந்த போர்டு பணியுடன் தொடர்பு கொள்ளும் வகையில் திருத்தி அமைக்கப்பட வேண்டு மென்று அரசாங்கம் யோசித்து வந்தது.

அதன்படி அரசாங்கம் கீழ்க்கண்டவாறு மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு போர்டு மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திற்கு என்று திருத்தி அமைக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கிறது :

சுகாதார அமைச்சர் ..	தலைவர்.
திரு. ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ். ..	துணைத் தலைவர்.
1 திருமதி சி. மேரி கிளப்வாலா ஜதாவ், எம்.எல்.ஸி. 2 திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம், எம்.எல்.ஸி. 3 அரசாங்கத்தால் நியமிக்கப்படு கின்ற ஓர் உறுப்பினர். 4 இரண்டு சட்ட சபை உறுப்பினர் கள். 5 இந்திய மருத்துவக் கழகத் தலைவர் (மாநிலக் கிளை). 6 டாக்டர் எஸ். சந்திரசேகர், ஜனத் தொகை ஆய்வு-இந் திய நிலைய இயக்குநர், காந்தி நகர், சென்னை. 7 அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு சுகாதார போர்டு பிரதி நிதி. 8 அரசாங்கம் நியமிக்கும் ஓர் உறுப்பினர்.	எட்டு பணித்துறை சார்பற்ற உறுப் பினர்கள்.
வட சென்னைக்கு ஒரு பிரதிநிதி, தென் சென்னைக்கு ஒரு பிரதி நிதி, 21 மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதி வீதம்.	சென்னை மாநக ராட்சிப் பிரதி நிதிகளாக இரு வர். 21 மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் 21 பிரதிநிதிகள் ஆக 23 பணித்துறை சார்பற்ற பிரதி நிதிகள்.
1 கல்வி-பொது சுகாதாரத் துறைச் செயலாளர். 2 மருத்துவப் பணித்துறை இயக் குநர். 3 பொது சுகாதாரத் துறை இயக்குநர். 4 மாதர் நலத்துறை இயக்குநர் 5 சென்னை மாநகராட்சிக் கமி ஷனர். 6 மாநில குடும்பக் கட்டுப்பாடு அதிகாரி—உறுப்பினர் செய லாளர் (பதவியால் வந்தவர்)	பணித்துறை சார்ந்த ஆறு உறுப்பினர்கள்

சென்னை இந்த போர்டின் தலை நகராக விளங்கும். போர்டின் கால வரையைறை மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலமாகும்; அதாவது 1966-வது ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி வரையில் இது செயல்படும்.

சென்னை மாநகராட்சிப் பிரதிநிதிகளை, மாநகராட்சிக் கமிஷனர், மேயரைக் கலந்தாலோசித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்ட அபிவிருத்தி மன்றப் பிரதிநிதிகளை, சம்பந்தப்பட்ட மாவட்டக் கலெக்டர்கள், மாவட்ட அபி விருத்தி மன்றங்களைக் கலந்தாலோசித்துத் தேர்ந் தெடுக்க வேண்டும்.

மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு அதிகாரி, போர்டில், பதவியால் இடம் பெற்ற உறுப்பினர்-செயலாளராக விளங்குவார்.

குடும்பக் கட்டுப்பாடு போர்டு மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடும். அதாவது ஒவ்வோராண்டும் ஜனவரி, எப்ரல், ஜூலை, அக்டோபர் மாதங்களில் கூடும். போர்டு செயலாளர், தக்க காலத்தில் கூட்டம் கூட்டுவதற்குகான ஏற்பாட்டை செய்வார்.

அதிகாரப் பற்றற்ற போர்டு உறுப்பினர்கள், முதல் வகுப்புக் குழுவின் அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்கள் பெறத் தக்க பயணப் படியும், தினசரிப் படியும் பெறுவ தற்குத் தகுதியுடையவர்களாவார்கள்.

குடும்பக் கட்டுப்பாடு போர்டின், வேலைத் திட்டக் குழு ஒன்று அமைப்பதற்கும், அந்தக் குழு குடும்பக் கட்டுப் பாடு திட்ட நிறைவேற்றத்தில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், திட்டமிட்டபடி குறிக்கோளை அடைவதற்கும் திட்டத்தின் வேலையைத் துரிதப்படுத் தவுமான வகையில், திட்ட நிறைவேற்றத்தைப் பற்றிய அவ்வப்போது அறிக்கை தயாரிக்கவும்-தேவையான ஆலோசனை கூறும்படி மருத்துவ பணித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேற்படி வேலைத் திட்டக் குழு, இப்போதைய ஒருங்கிணைப்புக் குழுவின் வேலைகளை யும் ஏற்று நடத்த வேண்டும் என்பது கருத்தாகும். குடும்பப் கட்டுப்பாடு போர்டின் துணைத் தலைவர் இந்த வேலைத் திட்டக் குழுவின் பதவியில் இடம் பெற்ற தலைவ ராக இருப்பார்.

(சுகாதாரத் துறையின் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் தேதி யிட்ட அரசாங்க ஆணை 1430-ன் சுருக்கம்.)

கிராம சேவகர்க்கான விவசாய வேலை விளக்க அட்டவணை
[Job Chart for Grama Sevaks—for Agricultural Work.]

நீலகிரி மாவட்டம்

முக்கிய விளைவான உருளைக் கிழங்கு அறுவடை முடிகிறது—இரண்டாவது பட்டம் நடவு-கிராம விதைப் பண்ணைகள் ஏற்பாடு-கலப்பு உழவும் நெல்லுக்கு உரமிடுதலும்—காய்கறி விதைகளின் விநியோகம்—இலவச நாற்றும், பழச் செடிகளும் விநியோகம்.

தென்மேற்குப் பருவக் காற்றுப் பிரதேசம்

(கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களும், வடார்க்காடு மாவட்டத்தின் பெரும் பகுதியும்.)

தென் மேற்குப் பருவக் காற்று பின் வாங்கும். நனவீ கருவிகளைப் பயன்படுத்திக் காட்டுதல் ; நெற்பயிரை வரிசையில் நடுதல், வளர்ந்த பயிருக்கு அமோனியம் சல்பேட் இடுதல்—கிராம விதைப் பண்ணை நெல்லை மாற்றிக் கொள்ளுதல் (முதல் பட்டம்)—பருத்தி விதை பதப்படுத்தலும் விநியோகித்தலும்—பருத்தியை வரிசையில் இடுதல் (மழையின்போது)—கிளைரிசீடியா முதலான மரங்களுக்கு நாற்று விட்டு வளர்த்தல்—முந்திரி தோட்ட அபிவிருத்தி ஆகியவற்றுக்கான கடனுக்கு மனுச் செய்யத் தூண்டுவதும், தண்டில் துளை போட்டு அரிக்கும் பூச்சி முதலான நெற்பயிரைப் பாதிக்கும் பூச்சிகள், கரும்பில் துளை போட்டு அரிக்கும் பூச்சிகள், வேர்க்கடலையைத் தாக்கும் கம்பளிப் பூச்சிகள் வெங்காயம், மிளகாய், காய்கறிகள் ஆகிய வற்றைத் தாக்கும் பூச்சிகள் ஆகிய பூச்சிகளைத் தடுப்பு முறைக்கான நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டுவதும்.

வடகிழக்குப் பருவக் காற்றுப் பிரதேசம்

பெரும்பாலும் தட்ப வெப்ப நிலை வறட்சியாக இருக்கும்.

1. ஒரு பட்டம் பயிரிடப்படும் எல்லாப் பகுதிகளிலும் நெற்பயிர் நடவு தொடங்கப்படும். அப்போது வரிசையில் நடுதல் குறித்தும், ஓரங்களில் செஸ்பேனியா நாற்று நடுவது குறித்தும் எடுத்துக்கூறவேண்டும். இளம் பயிருக்கு சூபர், அமோனியம் சல்பேட் இடுதல்—நவீனகருவிகளைப் பயன்படுத்திக் காட்டல்—முதற்பட்டப் பயிர்களை எடுத்தல்—முதற்பட்ட நெல் அறுவடை—கிராமசகாயகர்களின் விதைகள் விநியோகம்.

2. கேழ்வரகு (ராகி) நடவு தொடக்கம் ; அவை வரிசையாக நடுவதுடன் பாத்தி ஓரங்களில் செஸ்பேனியா நடுதல்.

3. புஞ்சை நிலத்தில் விதைக்க, பருத்தி விதை, கம்பு சோளம், வேர்க்கடலை முதலானவற்றின் பொறுக்கு விதைகளை வழங்குதலும், குறைந்த விதை வீதத்தையும், இடை வெளி விட்டு விதையிடும் முறையையும் கொண்டு உழவுச் சாலில் விதையிடும் முறையைச் செய்து காட்டுதலும்—பருத்தி விதைகள், சோள விதைகளைப் பதம் செய்தல்.

4. இரண்டாவது பட்டம் நெற் பயிருக்காக நாற்றுவிட நிலம் பண்படுத்தப்படும் இடங்களில், உயர்ந்த முறையில் நாற்று விடுவதைச் செய்து காட்டுதலும், விதை நெல்லைப் பொறுக்கி எடுத்தலும்.

5. பசுந்தழை உரத்தையும், சூபர் பாஸ்பேட்டையும் இள நெற்பயிருக்கு அதிகமாகப் பயன்படுத்தும்படி எடுத்துக்கூறுதல்.

6. மிளகாய் பூச்சிகள் முதலான பூச்சிகளை ஒழிக்க B.H.C. 50 சதவீதமும், செப்பு பூஞ்சக் காளான் தடுப்பு மருந்தையும் தெளித்தல்.

7. நெற்பயிர் பூச்சித் தடுப்பு மருந்து தெளித்தல்.

8. கேழ்வரகுப் பூச்சித் தடுப்பு மருந்து தெளித்தல்.

9. புரட்டாசி பட்ட விதைப்புக்காக உகந்தா (Uganda) பருத்தி விதை விநியோகமும், விதைத்தலும்—விதைப் பதம் செய்தபின்னர் வரிசையில் விதைக்கவேண்டும்.

10. பழத் தோட்டங்களுக்கும் தென்னந்தோப்புகளுக்கும் எருவிடுதல்.—எருவிட குறுகிய காலக் கடன்களுக்கு ஆள் சேர்த்தல்.

11. பழச் செடிகளையும், தென்னம்பிள்ளைகளையும், நடுதல்—தோட்டக் கலையும் முந்திரிப் பயிரும் வளர்க்கும் திட்டத்தின் கீழ் கடன் பெறத் தூண்டுதல்.

12. உள்ளூர் காய்கறி விதைகளை வழங்குதல்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 75-லிருந்து எடுக்கப்பட்ட, செப்டெம்பர் மாதத்துக்கான குறிப்புகள்.)

பஞ்சாயத்து அரசிதழ்
(Panchayat Gazette)

ஆகஸ்டு, 1962.

கூட்டுப்பொறுப்பு :
வே. கோபாலகிருஷ்ணன், எம்.ஏ.,
(மொழிபெயர்ப்பாளர்)

வ. சம்பந்தம், பி.ஏ.,
(துணை ஆசிரியர்)

பொருளடக்கம்

ஆணை (அல்லது) அறிக்கை..வெளியிட்ட அரசாங்கத் துறை.	ஆணை (அல்லது) அறிக்கை எண்.	ஆணை (அல்லது) அறிக்கை தேதி.	பக்கம்
கல்வித் துறை	ஆணை : 409	2—3—1948	i
கிராமநல-தல நிர்வாகத் துறை	அறிக்கை : 40144	13—4—1962	iii
,,	அறிக்கை : 26734	6—3—1962	iii
,,	ஆணை : 687	22—3—1962	iv
,,	ஆணை : 1204	24—5—1962	vi
,,	அறிக்கை : 77162	28—5—1962	vii
,,	ஆணை : 973	13—4—1962	vii
,,	ஆணை : 1409	21—6—1961	ix
,,	ஆணை : 1527	7—7—1962	x
,,	ஆணை : 1500	2—7—1962	x
,,	அறிக்கை : 110775	5—7—1962	xiii
,,	ஆணை : 1426	25—6 · 1962	xiv
,,	அறிக்கை : 133539	11—7—1662	xvii
,,	ஆணை : 1430	13—6—1962	xx
	ஆணை : 75	28—3—1962	xxi

கொடியேற்றமும் அணிவகுப்பும்

பள்ளிகளில் தேசியக் கொடியை ஏற்றும்பொழுது, பள்ளிப் பிள்ளைகள் பாடசாலைக்கு வெளியில் சதுரமாக நிற்கவேண்டும். அவ்வாறு நிற்கும் பொழுது, மூன்று பக்கங்களில் பிள்ளைகளும், நான்காவது பக்கத்து மத்தியில் கொடி மரமும் அமைந்திருக்கவேண்டும். கொடி மரத்திற்குப் பின்னால், மூன்றடி தூரத்தில், தலைமை ஆசிரியரும், மாணவர் தலைவரும், கொடியேற்றுபவரும் (தலைமை ஆசிரியர் அல்லாது வேறு யாராவது இருந்தால்) நிற்க வேண்டும்.

பிள்ளைகள் வகுப்பு வாரியாக பத்துப் பத்து பேர்களாக, வரிசை வரிசையாக அணி வகுத்து நிற்க வேண்டும். வரிசைகள் ஒன்றன் பின் ஒன்றாக இருக்கவேண்டும். அந்தந்த வகுப்புத் தலைவன், அவன் வகுப்பின் முதல் வரிசையில் வலது பக்கத்தில் நிற்கவேண்டும். வகுப்பு ஆசிரியர், அவர் வகுப்பின் கடைசி வரிசையின் மத்திக்குப் பின்னால், மூன்றடி தூரத்தில் நிற்கவேண்டும். ஒவ்வொரு வகுப்பும் சரிவர நிறுத்தப் பட்ட பின், வகுப்புத் தலைவன், முன்னால் வந்து, தேர்ந்தெடுத்த மாணவத் தலைவனுக்கு, வணக்கம் செய்யவேண்டும். எல்லா வகுப்பும் தயாரான பின், பள்ளியின் மாணவத் தலைவன் தலைமை ஆசிரியருக்கு எதிரில் சென்று வணக்கம் செய்ய வேண்டும். பிறகு கொடியை ஏற்றவேண்டும். பள்ளியின் மாணவத் தலைவன், உதவி செய்யலாம். கொடி பறக்க விடுவதற்கு முன், பள்ளிக்கூடப் படைத் தலைவன், படையிலுள்ளவர்களைத் தயாராக இருக்க எச்சரித்து, கொடி பறக்கும் பொழுது, வணக்கம் செய்ய உத்தரவிடவேண்டும்.

தேசியப் போராட்டகாலத்தில் இத்துறையில் நம் நாட்டு மக்களுக்கு, தக்கபயிற்சி அளிக்கப்பட்டது. சிறப்பாக, நமது தேசபிதா மகாத்மாகாந்தி, இதற்கான வழிமுறைகளை வகுத்துத்தந்தார் என்பதை, நம்நாட்டு சமீபகால வரலாற்றில், விரிவாகக் காணலாம். பாரதநாட்டு சமுதாயம் முழுவதும், ஒன்றாக இணைந்து, ஒழுங்கு பெற செயலாற்றும் நோக்கத்தோடு, தேசிய மகாசபை, பின்வரும் கொடிவணக்கப்பாட்டை, முக்கிய நிகழ்ச்சிகளின் போது பாடிவந்தது. பாரதநாட்டின் ஒற்றுமைப் பண்பின் நிலைக்களனாக அந்தப்பாட்டு விளக்கியது.

"ஜண்டா ஊஞ்சா ரஹே ஹமாரா
விஜ்யீ விச்வ திரங்கா ப்யாரா
சதா சக்தி பர்ஸானே வாலா
ப்ரேம ஸுதா ஸர்ஸானே வாலா
விரோங்கோ ஹர்ஷானே வாலா
மாத்ரு பூமிகா தனுமன் சாரா" (ஜண்டா)

பதவுரை :—நம்முடைய தேசியக்கொடி உயரப் பறந்து கொண்டு விளங்கட்டும்,
(அது) உலகத்தை ஜெயிக்கவல்லதும், மூவர்ண முள்ளதும், அன்பானதும்,
எப்பொழுதும் சத்தியைப் பொழிய வல்லதும்,
அன்பு என்னும் அமுதத்தைப் பொழிய வல்லதும்,
வீரர்களை மகிழ்விக்க வல்லதும்,
தாய் நாட்டின் உடல் உள்ளம் எல்லாமாக (விளங்கக்கூடியது).

கருத்து :—உலகத்தை ஜெயிக்க வல்லதும், மூவர்ண முள்ளதும், அன்பானதும், எப்பொழுதும் சக்தியைப் பொழிய வல்லதும், அன்பு என்னும் அமுதத்தைப் பொழிய வல்லதும், வீரர்களை மகிழ்விக்க வல்லதும், தாய் நாட்டின் உடல், உள்ளம் எல்லாமாக விளங்கக் கூடியதுமான, எங்களுடைய தேசீயக் கொடி (எப்போதும்) உயரப் பறந்துகொண்டு திகழட்டும் !

நாம் சுதந்தரம்பெற்று, நமக்கென ஓர் அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றிக்கொண்ட பின்பு நமக்கென ஒரு தேசிய கீதத்தையும் வகுத்துக்கொண்டோம், உலகப் பெருங் கவிஞர் தாகூர் பாடிய "ஜன கண மன" என்ற பாட்டே இன்றையதினம் நமது தேசிய கீதமாக உலகெங்கும் ஒலிக்கிறது.

அந்த கீதமும், அதன் பொருளும் நம் நாட்டு மக்கள் அனைவரும், அவசியம் உணரவேண்டியவையாகும். குறிப்பாக, பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்கள் மட்டுமன்றி, பொதுமக்கள் அனைவரும், இவற்றை அறிந்து கொள்ளக் கடமைப்பட்டுள்ளனர்.

பாரதியாரின் கொடி வணக்கப்பாட்டை அனைவரும் பாடத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பாட்டு, கடைசி அட்டைப் பக்கத்தில் காண்க

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.



தேசியக் கொடி வணக்கம்

- பள்ளிகளில் பயிற்சி -



Regd. No. M. 7277
©
தமிழ்நாடு அரசாங்கம் 1962.

தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உத்சல ஜலதி தரங்கா
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே !

கொடி வணக்கப் பாட்டு

தாயின் மணிக்கொடி பாரீர் !—அதை
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர் !

கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர் அவ் வீரர் ;—தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பார் (தாயின்)

செந்தமிழ் நாட்டுப் பொருநர்,—கொடுந்
திக்கண் மறவர்கள் சேரன்தன் வீரர்,
சிந்தை துணிந்த தெலுங்கர்,—தாயின்
சேவடிக்கே பணி செய்திடு துளுவர், (தாயின்)

கன்னடர் ஒட்டியரோடு—போரில்
காலனும் அஞ்சக் கலக்கு மராட்டர்,
பொன்னகர்த் தேவர்க ளொப்ப—நிற்கும்
பொற்புடையார் இந்துஸ்தானத்து மல்லர், (தாயின்)

சேர்ந்ததைக் காப்பது காணீர் !—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க !
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க !